# ஆண்டறிக்கை 2015

கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

## தொலைநோக்கு

*"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும் அபிவிருத்திசெய்தல்"*

## பணிநோக்கு

*"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான மூலோபாயங்களையும் தொழிலுநுட்பத்தையும் வணிக அடிப்படையையும் வழங்குதல்"*

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை

**2015 சனவரி முதல் டிசம்பர் வரை**

| | | |
|---|---|---|
| திரு. மஹிந்த ஜினசேன | - | தலைவர் |
| திரு T.D.S.P. பெரேரா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு.தர்ஷன் விஜேசிறிவர்தன | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் – திறைசேறி பிரதிநிதி |
| திரு.கலீல் ரஹ்மதுல்லா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திருமதி. மாலிகா சமரவீர | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. நிஸாத கமகே | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு. ஷாமின் பெரேரா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| திரு.ரோய் ஜயசிங்க | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB)

**2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை**

**நிறுவனம்**

**பின்னணி**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1966 ஆம் ஆண்டில் முதலாவதாக தாபிக்கப்பட்டது. பின்னர் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை அதன் தற்போதைய வடிவத்தில் கூட்டிணைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள கைத்தொழில்களை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான குறிக்கோள் ஆகும்.

**சபையின் குறிக்கோள்கள்**

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

- இலங்கையிலுள்ள கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- இந்நாட்டின் பொருளாதாரத்திலுள்ள தனியார் மற்றும் அரச துறைகளைச் சேர்ந்த அனைத்து கைத்தொழில் தொழில்முயற்சிகளினதும் ஒழுங்குமுறையிலான ஒருங்கிணைப்பிற்கும் இடைத்தொடர்புடைய வளரச்சிக்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- இலங்கையிலுள்ள இயற்கை வளங்களை பாவனைக்குட்படுத்துதல், கைத்தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப செயன்முறைகள் மற்றும் முறைமைகளை மேம்படுத்துதல், உள்நாட்டு கைத்தொழில்களுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் விருத்திசெய்தல் மற்றும் உற்பத்திக் கழிவுகளை மிகவும் சாதகமான முறையில் பயன்பாட்டிற்குட்படுத்துவதற்கான செயன்முறைகளையும் முறைமைகளையும்; தயாரித்தல் ஆகிய குறிகோள்களுடைய கைத்தொழில் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்
- உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவித்தல்
- கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாதகமான வகையில் சர்வதேச வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்
- மூலதனம், கடன், சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு கைத்தொழில் தொழில்முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் நிறுவனத்திற்கும் அல்லது அதனுடன் தொடர்புடையதாக தேவையானதாகவிருக்கும் அனைத்து விதத்திலுமான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்

**சபையின் பிரிவுகளும் சேவைகளும்**

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் பிரிவுகளுக்கு பல்வேறு விதமான சேவைகளை வழங்குவதற்கு சபை 10 பிரிவுகளையும் முகவர் நிலையங்களையும் கொண்டுள்ளது.

1. நிருவாகப் பிரிவு (*AD)*
2. பிராந்திய அபிவிருத்திப் பிரவு (*RDD)*
3. திட்டமிடல் பிரிவு (*PD)*
4. சந்தைப்படுத்தல் பிரிவு(*MD)*
5. கைத்தொழில் பேட்டைப் பிரவு(*IED)*
6. எந்திரவியல் பிரிவு (*ED)*
7. தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்(*CEDACS)*
8. தொழில்நுட்ப சேவைகள் பிரிவு(*TSD)*
9. தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் *(CDLPF)*
10. இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் *(RPDSC)*

பிரதேச அபிவிருத்தி பிரிவின் கீழ் 25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பும் கைத்தொழில் பேட்டை பிரிவின் கீழ் 19 கைத்தொழில் பேட்டைகளும் நடைமுறையில் உள்ளது. எந்திரவியல் பிரிவின் கீழ் செயற்படும் 2 சேவை நிலையங்கள் உள்ளன. தொழில்நுட்ப சேவைப் பிரிவு, தோற்பொருள் உற்பத்தி அபிவிருத்திப் பிரிவு, இறப்பர் உற்பத்தி அபிவிருத்திப் நிலையம் மற்றும் எந்திரவியல் பிரிவினால் உள்நாட்டு தொழில்முயற்சி வசதிகள் வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகள் வழங்க முடியும்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 714 ஆக இருப்பதுடன் இந்த பணியாட்டொகுதி 11 மட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

# தலைவரின் செய்தி



2015 ஆம் ஆண்டு முதல் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டள்ள நான் 2015 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். இலங்கையிலுள்ள அனைத்து கைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தாபிக்கப்பட்டுள்ள முதன்மையான நிறுவனமாக கைத்தொழில் அபிவிருத்தி சபை விளங்குவதுடன் இந்நிறுவனம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கைத்தொழில் துறைக்கு உதவிச் சேவைகளையும் ஏனைய பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றது. 2015 ஆம் ஆண்டு நிதியாண்டில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவி வழங்கியுள்ள அதேவேளை தொழில்முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அவாவுடன் இருக்கின்ற இளம் ஆட்களை நுண் தொழில்முயற்சிகளை தாபிப்பதற்கு உதவுவதின் ஊடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிமுயற்சித் துறைக்கு வசதியளிப்பதை அதன் முதன்மை நோக்காகக் கொண்டு இயங்குகின்றது.

நாட்டிலுள்ள தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சமுதாயத்திற்கு கணிசமான உதவிகளை வழங்கி, பிராந்திய மட்டத்தில் இக்காலகட்டத்தில் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதன் விளைவாக 349 புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் ஏற்கனவே இருந்த 642 தொழில்முயற்சிகளை தரமுயரத்தியதன் மூலம் 961 சுயதொழில் வாய்ப்புகள் உள்ளிட்டதாக மொத்தமாக 7862 தொழில் வாய்ப்புகளை தோற்றுவிப்பதற்கும் இச்சபைக்கு வாய்ப்பு கிட்டியது.

மீளாய்வு ஆண்டின் நிதி பெறுபேறுகளை நோக்குகையில் 2014 ஆம் ஆண்டில் ரூ.419,312 காணப்பட்ட தொகையை விட ரூ. 27,259,111 (வரிக்கு முன்னரான தேறிய வருமானம்) மிகையாக காணப்படுகின்றதென சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். பொதுவாக கவனம் செலுத்துமிடத்து புதிய கைத்தொழில்களை தாபிப்பதற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவிகள் உள்ளிட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் ஏற்கனவே உள்ள கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கும் விரிவாக்குவதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் உதவியாக அமைந்துள்ளன. அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு 2015 ஆம் ஆண்டில் உள்ளீடு செய்யப்பட்ட மொத்த முதலீடு 45 வீதமான அதிகரிப்பினை காட்டுவதும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொரு விடயமாகும்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான முயற்சிகளை வடிவமைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பெறுமதிக்க வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்கிய கௌரவ அமைச்சர் றிஸாட் பதியுதீன் அவர்களுக்கும் பிரதி அமைச்சர் கௌரவ சம்பிக பிரேமதாக அவர்களுக்கும் கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இச்சபையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பெரும் ஒத்தழைப்பினை நல்கிய கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பளார் சபையின் அங்கத்தவர்களுக்கும் பிரிவுத் தலைவர்களுக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மஹிந்த ஜினசேன,**

**தலைவர்.**

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் இலங்கை பொருளாதாரத் துறையில் மிகவும் துடிப்பானதும் சக்தி வாய்ந்தததுமான துறையாக தோற்றம் பெற்றுள்ளதெனினும், இத்துறையின் வளர்ச்சியின் பால் பாரியளவில் காணப்படும் வாய்ப்புகள் முழுமையான அளவில் இனங்கண்டுகொள்ளப்படவில்லை என்றே கூறமுடியும். நுண்,சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கணிசனமானளவு தொழில்வாய்ப்புகளை தோற்றுவிப்பது மாத்திரமின்றி கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களை கைத்தொழில்மயப்படுத்துவதற்கு பாரிய பங்களிப்பினையும் வழங்கிவருகின்றது. இதன் மூலம் பிராந்திய ரீதியிலான சமத்துவமின்மை குறைக்கப்படுவதுடன் தேசிய வருமானம் மற்றும் வளத்தினை இயன்றளவு நியாயமான முறையில் பகிர்வதற்கும் வழிசமைக்கின்றது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் 2015 ஆம் ஆண்டிற்கான சபையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்து எதிர்வரும் காலத்தில் மிகச் சிறந்த செயலாற்றுகையை உறுதிசெய்யும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முன்னேற்றத்தையும் இவ்வருடத்திற்கான நிதி நிலை தொழிற்பாட்டின் சிறப்பம்சங்களையும் மீளாள்வு செய்வதற்கு வாய்ப்பு கிட்டியமை எனக்கு மகிழ்ச்சியினை தருகின்றது.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு எமது வசதியளிப்பின் வாயிலாக வழங்கப்படும் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவிகள் மூலமாக எவ்வாறு துறைசார் அறிவினை தோற்றுவிக்காலம் என்பதை நோக்ககாக் கொண்டு கைத்தொழில்கள் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான துறைகளுக்கு ஊக்குவிப்பினையும், மேம்பாட்டினையும், அபிவிருத்தியையும் பெற்றுத்தருவதே எமது முதன்மையான நோக்கமாகும். தொழில்நுட்ப, தொழில்நுட்பவியல் மற்றும் பொறியியல் ரீதியிலான உதவிகளை வழங்குவதற்கும் இதற்கு மேலதிகமாக கைத்தொழில் தொழில்முயற்சிகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கும் நாடளாவிய ரீதியில் நாம் பெருமளவு செயலமர்வுகளை நடாத்தியுள்ளோம். மேலும், கைத்தொழில் பேட்டைகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் புதுப்பிப்பதன் வாயிலாக அவற்றின் பொருளாதார நன்மைகளை நிலைபேறான வகையில் பேணுவதற்கும் வினைத்திறன்மிக்க வகையில் வளங்களின் உச்சமட்ட பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல் மற்றும் மீள்வடிவத்திற்கு உட்படுத்துதல் போன்ற விடயங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

கைத்தொழில் அபிவிருத்தி சபை தனது சேவை வலையமைப்பு வாயிலாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு இவ்வாண்டிலும் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கிவந்ததுடன் கைத்தொழிலாளர்களுக்காக 1600 ஆற்றல் விருத்தி மற்றும் உற்பத்தி திறன் விருத்தி பயற்சிகளை நடாத்தியுள்ளதுடன் தொழில்நுட்பம் வழங்குதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் செய்முறை விளக்கம் போன்றவற்றை வழங்கியதன் மூலம் இக்காலகட்டத்தில் 7300 இளம் தொழில்முயற்சியாளர்கள் நன்மையடைவதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளது.

கித்துள் அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "கித்துளக வருண" கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை 06 ஆவது தடவையாகவும் நடாத்தப்பட்டதுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியவை ஒன்றிணைந்து பாதணி மற்றும் தோற்பொருட்கள் விற்பனை சந்தை 2015 நிகழ்ச்சியினை 7 ஆவது தடவையாகவும் நடாத்தியதுடன் இந்நிகழ்ச்சி 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்டது.

"கிராமங்களை அபிவிருத்தி செய்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை புதியதொரு பயணத்தையும் ஆரம்பித்ததுடன் இதன்மூலம் சுதேச மற்றும் அழிந்துபோகும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ள மட்பாண்ட மற்றும் பாராம்பரிய கைப்பணிகளுக்கு புத்துயிர் கிடைத்தது. மேலும், கைத்தொழில் அபிவிருத்தி சபை தொழில்முயற்சி கிராமம் எனும் நிகழ்ச்சித்திட்டத்தினையும் நடாத்தியதுடன் அதன் மூலமாக பெண் தொழில்முயற்சியாளர்களையும் இனங்கண்டுகொண்டது.

நிதியாண்டின் நிதிசார் பெறுபேறுகளை சமூக, சுற்றாடல் மற்றும் நிதியியல் சாரந்த மூவகை அடிப்படையில் நோக்குகையில் அதன் அளவு ரூ.85,760,104 ஆக இருந்ததுடன் 2014 ஆம் நிதியாண்டில் இத்தொகை ரூ.85,036,769 ஆக இருந்த அதேவேளை இது ரூ.723,**425** நேர்க்கணிய வித்தியாசமாகும். கைத்தொழில் அபிவிருத்தி சபை அறிக்கைகளை சமர்ப்பித்தல் எனும் தலைப்பின் கீழ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு (LS/H/IDB/1/14/21) உரிய காலத்தில் கணக்குகளை கணக்காய்வு தலைமை அதிபதியின் கருத்துரைக்காக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் ஆண்டறிக்கைகள் சம்பந்தமாக அதிகப்படியான கவனத்தை செலுத்தியுள்ளது. இவ்வறிக்கைள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட உடனேயே கணக்காய்வுக்காக அவற்றை சமர்ப்பிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் அபிவிருத்தி சபை நாட்டின் பொருளாராத்திற்கும் தேசிய செல்வத்தின் பெருக்கத்திற்கும் பெருமளவு செயலாற்றுகையையும் பங்களிப்பையும் வழங்கியுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி சபை எதிர்வரும் ஆண்டிற்கும் அதனை அடுத்துவரும் காலத்திற்கும் பொருந்தக்கூடியவாறு தனது வளர்ச்சிக்கான திட்டங்களைக் கொண்டுள்ளது. நியோ தொழில்நுட்பத்திற்கு சமாந்தரமாக கைத்தொழில் பயிற்சிகளை விரிவாக்குவதற்கு நாம் குறிப்பிடத்தக்களவு முதலீடுகைள மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் எதிர்கால தொழில்முயற்சியாளர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கவேண்டுமென எதிர்பார்க்கப்டுகின்றது.

இவ்வாண்டிற்கான இலக்குகளை அடைந்துகொள்ளும் விடயத்தில் எமது முயற்சிகளுக்கு வழிகாட்டி அதற்கான ஆதரவினையும் ஊக்கத்தினையும் வழங்கிய கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் அமைச்சின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும் எமது முக்கியமான தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டல்களையும் பாரிய ஒத்துழைப்பினையும் வழங்கிய சபையின் தலைவருக்கும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் எனது நன்றி உரித்தாகுதல் வேண்டும்.

அத்துடன் எமது இலக்குகளை அடைந்துகொள்ளும் இப்பணியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது பாராட்டு உரித்தாகுதல் வேண்டும். இவர்களின் உதவியும் அர்ப்பணிப்பும் இல்லாதிருந்திருப்பின் இந்நிலையை நாம் அடைந்து கொண்டிருக்க முடியாது. ஆகவே, பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதில் நாம் வைத்துள்ள நம்பிக்கையும் அவர்களின் அதற்கான பூரண ஆதரவும் கைத்தொழில் அபிவிருத்தி சபை அதன் பங்களிப்பினை நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குதில் பாரியதொரு அதிகரிப்பினை உருவாக்கிக்கொள்வதற்கு வழிசமைத்துள்ளது.

**பீ.எல்.யூ. ரத்னமலல**
**பணிப்பாளர் நாயகம்.**

பிரதான சேவைகளும் வசதிகளும்



## நிறுவன கட்டமைப்பு


தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
உள்ளக
பணிப்பபாளர் சபை செயலாளர்
பணிப்பாளர் நாயகம்
பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழிற்பாடு)
பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
பணிப்பாளர் –நிர்வாகம்
பணிப்பாளர் - நிதி
பணிப்பாளர்- திட்டமிடல்
பணிப்பாளர் – பிரதேச அபிவிருத்தி
பணிப்பாளர் – கைத்தொழில் பேட்டை
சந்தைப்படுத்தல் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் (CEDACS)
பணிப்பாளர்- எந்திரவியல்
பணிப்பாளர்- தொழில்நுட்ப சேவைகள்
பணிப்பாளர்- சந்தைப்படுத்தல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **1.0 செயலாற்றுகை மீளாய்வு** | **01 - 05** |
| **2.0 பிரதான அடைவுகள்** | **06 - 09** |
| • கண்காட்சிகள்<br>○ கித்துளக வருண<br>○ இணை ஒழுங்கமைப்பாளர் -சர்வதேச பாதணி மற்றும் தோற்பொருட்கள் கண்காட்சி 2015 | |
| • தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் உற்பத்திகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறன் முன்னேற்றம் | |
| • ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தை வழங்கும் நிகழச்சித்திட்டம் | |
| • ஏற்றங்கீகரிக்கப்பட்ட உணவு பரிசோதனை ஆய்வுக்கூடம் | |
| **3.0 முன்னேற்ற பொழிப்பு** | **10 - 16** |
| • கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்,மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | |
| • கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல், பராமரித்தல் மற்றும் பேணுதல் | |
| • சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல் | |
| • தொழில்நுட்பு, தொழில்நுட்பவியல் மற்றும் எந்திரவியல் உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல் | |
| • கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான விரிவாக்க மற்றும் ஆலோசனை சேவைகள் | |
| **4.0 செயலாற்றுகை அடைவுகள்** | **17** |
| • நிருவாகப் பிரிவு *(AD)* | **18 - 20** |
| • பிராந்திய அபிவிருத்திப் பிரவு *(RDD)* | **21 - 26** |
| • திட்டமிடல் பிரிவு *(PD)* | **27 - 28** |
| • சந்தைப்படுத்தல் பிரிவு*(MD)* | **29 - 31** |

| | |
|---|---|
| • கைத்தொழில் பேட்டைப் பிரிவு*(IED)* | 32 - 38 |
| • இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் (RPDSC) | 39 - 40 |
| • எந்திரவியல் பிரிவு *(ED)* | 41 - 43 |
| • தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம் *(CEDACS)* | 44 - 49 |
| • தொழில்நுட்ப சேவைகள் பிரிவு *(TSD)* | 50 - 53 |
| • தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் (CDLPF) | 54 - 56 |
| **5.0 நிதிக்கூற்றுக்கள்** | 57 |
| ▪ நிதிநிலைப் பற்றிய விவரமானக்ககூற்று | 58 |
| ▪ வருமானம் பற்றிய விவரமானக் கூற்று | 59 |
| ▪ உரிமைபங்கிலான மாற்றம் பற்றிய கூற்று | 60 |
| ▪ காசுப்பாய்வுக் கூற்று | 61 |
| ▪ முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் பிற விளக்கமளிப்புத் தகவல்களும். | 62 - 83 |
| **6.0 சபையின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** | 84 - 129 |

# செயலாற்றுகை மீளாய்வு

**செயலாற்றுகை மீளாய்வு**

2015 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சம்பந்தப்பட்ட பிரிவுகள் ஊடாக பின்வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன.

**அட்டவணை - 1.1 - நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்**

| | **நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்** | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.) | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அ. | புதிய கைத்தொழில் கூறுகளையும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கூறுகளையும் உருவாக்குவதற்கு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய உதவிகளையும் வழங்குதல் | 349 | 738879339 | 1373 |
| ஆ. | தற்போதுள்ள கைத்தொழில்களை மேற்படுத்துவதற்கு, விரிவாக்குவற்கு மற்றும் நவீனமயப்படுத்துவதற்கு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஒத்துழைப்புகளை வழங்குதல் | 1603 | 210262173 | 6489 |
| | **மொத்தம்** | **1952** | **949141512** | **7862** |

1.2 அட்டவணையில் (அ) (ஆ) மற்றும் (இ) விடய இலக்கங்களிள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித்துறை செயற்பாடுகளின் சராசரி செயலாற்றுகை 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. புதிதாக தொழில்முயற்சிகளை தாபிக்கும் விடயத்தில் வீழ்ச்சி காணப்படுகின்றது. புதிதாக தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதில் ஓரளவிற்கு வீழ்சசி காணப்படுகின்றதெனினும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டின் அளவு அண்ணளவாக 45% வளர்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 1.2 – 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான ஒப்பீட்டு அளவிலான நிலைமை**

| **விபரம்** | 2014 | 2015 | **வளர்ச்சி (வீழ்ச்சி) %** |
|---|---|---|---|
| மொத்த கூறுகளின் எண்ணிக்கை (அ,ஆ,இ) | **2216** | **1952** | **(-11.9)** |
| மொத்த முதலீடு (ரூபாய்) | **655914360** | **949141512** | **(44.7)** |
| மொத்த தொழில்வாய்ப்புகள் | **4615** | **7862** | **(70.3)** |




## 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை இந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் முகமாக இலங்கையிலுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ஈற்றில் அவற்றை தரமுயர்த்துவதற்கும் பல்வேறு சேவைகளை உள்ளடக்கும் வகையிலான மொத்த சேவைகள் பொதியொன்றை வழங்கியும் வசதியளித்தும் செயலாற்றியுள்ளது. மேலும், நிரல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கித்துள் அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம், மட்பாண்ட கிரமாங்களை அபிவிருத்தி செய்தல், பாரம்பரிய கைப்பணி கிராமங்களை அபிவிருத்தி செய்தல், பெண்களின் தொழில்முயற்சி அபிவிருத்தி போன்ற ஏனைய துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும்

கருத்திட்டங்களையும் மேம்படுத்தவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து சேவைகளின் மூலமும் வசதியளித்துள்ளது. அத்துடன் நாடளாவிய ரீதியில் உள்ள கைத்தொழில் பேட்டைகளை புதிப்பதற்கும் நவீனமயமாக்குவதற்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இக்காலக்கட்டத்தில் 349 புதிய தொழில்முயற்சிகளை தாபிப்பதற்கும், எற்கனவேயுள்ள 642 தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செயவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும், 961 வணிகமுயற்சிகளை உருவாக்குவதற்கும் 7862 தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.




- கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்பட்ட வணிகமுயற்சி அபிவிருத்தி சேவைகளை நோக்குமிடத்து இதன் மூலம் 42 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும். 16 முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும், பெண்களின் தொழில்முயற்சிகளுக்கு அதிக கவனம் செலுத்துப்படும் வகையில் அவற்றையும் உள்வாங்கியதாக 1,923 புதிய தொழில்முயற்சியாளர்கள் நன்மையடையும் வகையில் 45 தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தொழில்முயற்சியாளர்களின் வேண்டுகோள்களின் பிரகாரம் அவர்களின் கடன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக 117 கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகளும், இயந்திரங்கள் மீதான 79 மதிப்பீட்டு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. எந்திரவியல் சேவைகளின் கீழ் 831 சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 84 வேலைகள் பூரத்திசெய்யப்பட்டள்ளன. இந்த காலகட்டத்தில் எந்திரவியல் பிரிவினால் 49 இயந்திரத்தொகுதி கருவிகள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள் ஊடாக 40 கைத்தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தல்

வசதிகள் வழங்கப்பட்ட அதேவேளை 327 தொழில்முயற்சியாளர்களுக்கு வங்கிகளிலிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்காக உதவிகளும் வழங்கப்பட்டன.

- **ஆற்றல் அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறன் அபிவிருத்தி பயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.** – 2015 ஆம் ஆண்டில் 52 ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் 1,623 கைத்தொழிலாளர்கள் இதன் மூலம் நன்மையடைந்திருக்கின்றனர்.

- **தொழில்நுட்பம் வழங்குதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் செய்முறை விளக்க நிகழ்ச்சித்திட்டங்கள்**

  தொழில்நுட்பத்தை வழங்குதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் செய்முறை விளக்கமளித்தல் சார்ந்ததாக 370 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் 7,353 தொழில்முயற்சியாளர்கள் நன்மையடைந்துள்ளனர்.

# பிரதான அடைவுகள்

**மீளாய்வு ஆண்டில் சில பிரதான அடைவுகள் பின்வருமாறு**

1. **கண்காட்சிகள்**

   (i) **"கித்துலக வருண"**

"கித்துலக வருண" கண்காட்சி மற்றும் விற்பனை சந்தை 06 ஆவது தடவையாகவும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் உதவியுடன் ஏப்பிறல் மாதம் 03 – 05 ஆம் திகதிகளில் சுகததாச மண்டபத்தல் நடாத்தப்பட்டது. இந்தக் கணகாட்சி கௌரவ அமைச்சர் றிஷாட் பதியுதீன் அவர்களின் அழைப்பின் பேரில் கௌரவ நிதி அமைச்சர் கௌரவ ரவி கருணாயநாயக்க அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சி கித்துள் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்குதற்கும் கித்துள் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் நடாத்தப்பட்டது. கித்துள் உற்பத்திகளை காட்சிப்படுத்தவதற்கு 52 கூடங்கள் இருந்ததுடன் சிறந்த 06 கூடங்களுக்கு விருது வழங்கப்பட்டதுடன் இக்கூடங்களில் கித்துள் வெல்லம், பணி மற்றும் கித்துள் மா சார்ந்த செய்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.







## ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து ஒழுங்குசெய்த பாதணி மற்றும் தோற்பொருள் விற்பனைச் சந்தை – 2015

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஏழாவது பாதணி மற்றும் தோற்பொருள் சந்தை 2015 நிகழ்ச்சியை பெப்ருவரி 06 – 08 ஆம் திகதிகளில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தியது.

இதன் முதன்மையான நோக்கம் யாதெனில் இக்கைத்தொழலின் நன்மதிப்பினை உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் கட்டியெழுப்புதலும் அதன் மூலமாக இக்கைத்தொழிலுக்கு அங்கீகாரமொன்றை உருவாக்குவதும் ஆகும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் ஆற்றல்களை வெளி உலகத்திற்கு காட்டுதல், தொழில்நுட்ப அறிவினை தரமுயர்த்துல் இலங்கையின் ஏற்றுமதி ஆற்றல்களை சர்வதேசத்தில் பிரபல்யப்படுத்துதல் இதன் ஏனைய நோக்கங்களாகும்.

இச்சந்தை 200 இற்கும் மேற்பட்ட விற்பனை கூடங்களைக் கொண்டுள்ளதுடன் இங்கு பாதணிகள், தோற்பொருள் உற்பத்திகள், பயணப் பொருட்கள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் அதன் பகுதிகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.







## 2. தொழில்நுட்பத்தை வழங்குதலும் உற்பத்தகளின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

(i) தொழில்நுட்பப் பிரிவினால் நடாத்தப்படும் தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், கமத்தொழில் திணைக்களத்தின் உணவு ஆராய்ச்சி பிரிவு மற்றும் இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களிலிருந்து கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு பின்வரும் தொழில்நுட்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- **ஒட்டுப்பசை (ஒட்டுப்பொருட்கள்)**

  எதிர்வினையாற்றாத ஒட்டுப்பசை,(பொலிவைனல் எசிடேட்), எதிர்வினையாற்றாத ஒட்டுப்பசை (பொலிவைனல் அற்கொஹொல்) மற்றும் தொடுகை ஒட்டுப்பசை (நியோபிறீன்)
- **சோயா உற்பத்திகள்**

  சோயா டொபு, சோயா பால், சோயா சொசெஜ், சோயா சிற்றுண்டி மற்றும் சோயா ஐஸ்கிறீம்
- **தேங்காய் உற்பத்திகள்**

  தேங்காய் நீர் போத்தலில் அடைத்தல், தேங்காய் வினாகிரி, தேங்காய் பசை, தேங்காய் ஐஸ்கிறீம், தேங்காய் பழப்பாகு (ஜேம்)

(ii) உணவுப் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்துவதற்காக பதனிடல் செயன்முறைத் தரங்கள் போதுமானதாக இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு “இசைவுக் கடிதமொன்றை “வழங்குவதற்காக 2015 யூன் மாதம் 28 ஆம் திகதி இல. 42 சிறிமத் பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12 இல் அமைந்துள்ள லீலா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனத்தின் உணவு உற்பத்தி தொழிற்சாலைக்கு தொழில்நுட்ப சேவைகள் பிரிவு விஜயம் செய்து பார்வையிட்டது.

## 3. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

இந்த அங்கத்துவம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிகழ்சு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாதணி உற்பத்தி தொழில்முயற்சியாளர்களின் வாழ்கையினை உயர்த்துவதற்காக மேறகொள்ளப்பட்டதுடன் 500 தொழில்முயற்சியார்கள் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டனர்.

## 4. ஏற்றங்கீகாரம் அளிக்கப்பட்ட உணவு பரிசோதனை ஆய்வுக்கூடம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு உதவிவழங்கும் பொருட்டு ரூபாய் 15 மில்லியன் செலவில் உத்தேச மேற்படி ஆய்வுக்கூடத்தின் பகுதியொன்று ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு தேவையான தளபாடங்களும் பொருத்திகளும் ரூபாய் 5.38 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

- உணவு உற்பத்திகள் சார்ந்த பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஊக்குவித்து விருத்திசெய்தல்
- உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைக்கு ஏற்ற வகையில் உணவு உற்பத்திகளை தயரமுயர்த்துதல்
- இலங்கை கைத்தொழில் அபிவிருத்த சபையின் சேவைகளை வலவூட்டுதல்
- நுகர்வோருக்கு தரமான உணவு உற்பத்திகள் கிடைப்பதனை உறுதிசெய்தல்

## முன்னேற்ற சுருக்கம்

- கைத்தொழில் மற்றும் நுண் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தல்,
- கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல், பேணி வருதல் மற்றும் பராமரித்தல்
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைக்கான ஒத்துழைப்பினை வழங்குதலும் வசதிகளை வழங்குதலும்
- கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் ஒத்துழைப்புகளை வழங்குதலும், வசதிகளை ஏற்படுத்துதலும்
- கைத்தொழில் மற்றும் நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை விருத்தி செய்வதற்கு விரிவாக்க மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

## அட்டவணை 3.1 முன்னேற்றம் பற்றிய பொழிப்பு - 2014

| பிரதான தொனிப்பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில்களையும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்,மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மேம்படுத்தல், | வாய்ப்புவளமுடைய தொழில்முயற்சியாளர்களை இனங்காண்பதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்/முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 83 | 46 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 2535 | 1199 |
| | | நடாத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்குகள் | 25 | 16 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 1875 | 894 |
| | எதிர்கால தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தற்போதுள்ள கைத்தொழிலுக்கான தொழில் நுட்பங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப செய்முறை விளக்க நிகழ்சிகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 250 | 370 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 5000 | 7352 |
| | | நடாத்தப்பட்ட செய்முறை விளக்கங்கள் | 582 | 310 |
| | புதிய மற்றும் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழில்களுக்கான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நடாத்தப்பட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 50 | 45 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 1500 | 1923 |
| | தொழில்நுட்ப உதவி மதியுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் மதியுரை சேவைகளின் எண்ணிக்கை | 165 | 134 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 165 | 134 |
| | வசதியளித்தல் மற்றும் பின்னாய்வு செயற்பாடுகள் | உருவாக்கப்பட்ட புதிய தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 595 | 349 |
| | | உருவாக்கப்பட்ட சுயதொழில் அலகுகளின் எண்ணிக்கை | 1116 | 961 |
| | | மேம்படுத்தப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 1108 | 642 |
| | | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | - | 7862 |

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| சந்தைப்படுத்தல் ,விற்பனை உதவிகள் மற்றும் வசதியளித்தல் | கைத்தொழில் அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை வசதிகளை வழங்குதல் | விற்பனை வசதிகளைப் பெற்றுக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர் அளவிலான கைத்தொழில்களின் எண்ணிக்கை | 300 | 40 |
| | | சி.ந.கைத்தொழல்களினால் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளின் பெறுமதி (ரூ.மி) | 16 | 10.7 |
| | துணை ஒப்பந்த பரிமாற்று முறையின் கீழ் கைத்தொழில்களை பதிவுசெய்தல் | சி.ந கைத்தொழிலாளர்களுக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள துணை ஒப்பந்தங்களை வழங்கல்கள் மற்றும் மீள் கொள்வனவு வாய்ப்புகளின் எண்ணிக்கை | 40 | 33 |
| | துணை ஒப்பந்த வசதிகளை வழங்குதல் | துணை ஒப்பந்த பரிமாற்றத்தின் மூலம் வழங்கப்பட்ட பொருள் அனுப்பல் கட்டளைகளின் மொத்த பெறுமதி (ரூ,மி) | 25 | 9.8 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 20 | 19 |
| | கொள்வனவாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை பெருமளவில் கொள்வனவு செய்து சில்லறையாக விற்பனை செய்தல் | மூலப்பொருள் (கழிவு உலோகம்) பெற்றுக்கொண்ட தொழில் .முயற்சிகளின் எண்ணிக்கை | 750 | 726 |
| | | சேகரிக்கப்பட்ட கழிவுகளின் அளவு (மெ.தொன்) | 1000 | 758 |
| | | விநியோகிக்கப்பட்ட கழிவுகளின் அளவு (மெ.தொ) | 1000 | 776 |
| | மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் மற்றும் கலவையாக்கப்பட்ட இறப்பர் விற்பனை | பதப்படுத்தப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் (லீற்றர்) | 13000 | 9952 |
| | | சேவை வழங்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 85 | 76 |
| | இறப்பர் கலவை, மூலப்பொருட்கள் மற்றும் இராசயனப் பொருட்கள் விற்பனை | வழங்கப்பட்ட அளவு (கி.கி) | 57500 | 35112 |
| | | சேவை வழங்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 300 | 260 |
| | இறப்பர் கலவை அறைத்தல் மற்றும் வழங்கல் | வழங்கப்டப்ட அளவு (கி.கி) | 35500 | 19174 |
| | | சேவை வழங்கப்பட்டுள்ள தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | 60 | 58 |

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் முன்னெடுத்துச்செல்லுதல் | அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் வீதம் | | |
| | புதிய தொழில்முயற்சிகளுக்காக விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளை ஒதுக்குதல் மற்றும் மீள் விநியோகித்தல் | ஒதுக்கப்பட்ட வெற்றுக்காணிகள்/தொழிற்சாலை அலகுகள்/விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை | 25 | 23 |
| | | ஒதுக்கப்பட்ட தொழிற்சாலை அலகுகள்/விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தக தொழிற்பாடுகளின் எண்ணிக்கை | 20 | 14 |
| | | தோற்றுவிக்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகள் | 200 | 233 |
| | பின்னாய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் | தாபிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர்க்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | - | - |
| | கைத்தொழில் பேட்டைகளில் (வீதிகளை அமைத்தல், வீதிகளுக்கு வெளிச்சமூட்டல், பாதுகாப்பினை மேம்படுத்துதல், கழிவகற்றல், நிர் வழங்கல் போன்ற )உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் | மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் வீதம் | 18 | 05 |

| பிரதான தொனிப்பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| தொழில்நுட்ப, தொழில்நுட்பவியல் மற்றும் பொறியியல் உதவிகள் மற்றும் வசதியளித்தல் | உற்பத்திகளின் தரத்தை மேம்படுததுதல் மற்றும் பதிவுடன் GMP, SLS தரச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு உதவுதல் | GMP, SLS, ISO மற்றும் ஏனைய சான்றளிப்புகளுக்கு/தரப்படுத்தல்களுக்கு உயர்த்தப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 25 | 14 |
| | விருத்தியாக்கப்பட்ட/கட்டமைக்கப்பட்ட இயந்திரோபகரணங்கள் | புதிததாக விருத்தயாக்கப்பட்ட இயந்திரோபகரணங்களின் எண்ணிக்கை | - | 2 |
| | | இயந்திரோபகரணங்களினால் நன்மைப் பெற்ற தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 60 | 51 |
| | எத்திரவியல் சேவைகள், மதிப்பீடு, வார்ப்பு வேலை,தொழில் தள சேவைகள், மின்மூலாம்பூசல் சேவைகள் மற்றும் ஆய்வுக்கூட சேவைகள் போன்ற சேவைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட எந்திரவியல் சேவைகளின் எண்ணிக்கை | 48 | 21 |

| பிரதான தொனிப்பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவுபடுத்தல் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் | கருத்திட்டங்களை இனங்காணுதல், மாதிரி கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் சாத்திய வள ஆய்வுகள் தயாரித்தல் | சாத்தியவள ஆய்வு அறிக்கை/கருத்திட்ட அறிக்கை பெற்றுக்கொண்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 208 | 117 |
| | கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு உதவுதல் | பயனடைந்த தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 200 | 327 |
| | இயந்திரோபகரணங்களை மதிப்பீடு செய்தல் | தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | 140 | 79 |
| | உற்பத்தி விருத்தி மற்றும் சோதனை சேவைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட உற்பத்தி விருததி மற்றும் ஆய்வுக்கூட பரிசோதனை சேவைகளின் எண்ணிக்கை | 2925 | 1513 |
| | பிராந்திய/மாவட்ட கைத்தொழில் சங்கங்களை அமைத்தல் | மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் தாபிக்கப்பட்ட/வலுவூட்டப்பட்ட கைத்தொழில் சங்கங்களின் எண்ணிக்கை | 318 | 304 |


நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2015
8000
6000
4000
2000
0
42
1352
16
894
45
1923
370
7352
52
1623
விழிப்புணர்வு
முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
தொழில்முயற்சியாளர்
தொழில்நுட்ப பரிமாற்றம்
ஆற்றல் விருத்தி
நிகழ்ச்சித்திட்டம்
பங்கேற்பாளர்


சேவகையினால் நன்மையடைந்த சி.ந.தொ.முயற்சியாளர்கள் -2015
900
800
700
600
500
400
300
200
100
0
196
327
787
785
394
480
450
831
அறிக்கைகளை தயாரித்தல்
கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளுதல்
கைத்தொழில் தகவல்களை பரப்புதல்
சந்தைப்படுத்தல் சேவைகள்
இறப்பர் பிரிவின் சேவைகள்
கை.பேட்டை பிரிவின் சேவைகள்
தோற்பொருள் பிரிவின் சேவைகள்
பொறியியல் சேவைகள்

## *செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்*

- நிருவாகப் பிரிவு *(AD)*
- பிராந்திய அபிவிருத்திப் பிரவு *(RDD)*
- திட்டமிடல் பிரிவு *(PD)*
- சந்தைப்படுத்தல் பிரிவு*(MD)*
- கைத்தொழில் பேட்டைப் பிரவு*(IED)*
- எந்திரவியல் பிரிவு *(ED)*
- தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்*(CEDACS)*
- தொழில்நுட்ப சேவைகள் பிரிவு*(TSD)*

### 4.1 நிருவாகப் பிரிவு (AD)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அனைத்து மனித வள முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள், கொள்முதல் செயற்பாடுகள், பாதுகாப்பு, போக்குரவத்து பணிகளை எற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்ல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை சபையின் நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும்.

**பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- தாபன மற்றும் மறுசீரமைப்பு நிகழச்சித்திட்டஙக்ள்
- ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளை தயாரித்தல்
- சம்பள முரண்பாடுகளை களைதல்
- கிரமமான ஆட்சேர்ப்பு , செயலாற்றுகை மதிப்பீடு, பதவியுயர்வு, ஓய்வுபெறுதல் போன்றவற்றிற்கு ஏதுவான பணிகளை முன்னெடுத்தல்
- அகற்றுதல் மற்றும் புதிய வாகனங்கைள கொள்வனவு செய்தல்
- நிறுவனத்தில ஒழுக்கத்தினை பேணுதல் - ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்
- தொழில் பிணக்குகளையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் தொழில் நியான மன்றம் ஆகியவற்றிலிருந்து ஆற்றுப்படுத்தப்படுகின்ற விசாரணைகளையும் கையாளுதல்
- வெளிநாடடு புலமைப் பரிசில்/பயிற்சிகள் ஒருங்கிணைப்பு செய்தல்
- உள்நாட்டு பயிற்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்
- ஊழியர் நலனோம்புகை மற்றும் ஊழியர் இழப்பீடு முமைமைத்துவம் செய்தல்
- உள்ளக பாதுகாப்பு சேவைகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் பெறுகைகள் பணிகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் போக்குவரத்து சேவைகளை முகாமைத்துவம் செய்தல்
- பொலநறுவை மற்றும் கொட்டகலையில் உள்ள சுற்றுலா பங்களாக்களை பராமரித்தல்

அட்டவணை இல 4.1.1 – 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் பணியாளர்களின் எண்ணிக்கை

| வகை | பணியாளர்களின் எண்ணிக்கை | | மொத்தமும் வீதமும் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| சிரேஷ்ட மட்டம் | 05 | 01 | 06 (1.24%) |
| மூன்றாம் நிலை மட்டம் | 62 | 19 | 81 (16.84%) |
| இரண்டாம் மட்டம் | 107 | 104 | 211 (43.87%) |
| ஆரம்ப மட்டம் | 177 | 06 | 183 (38.04% |
| மொத்தம் | **351 (72.98%)** | **130 (27.02%)** | **481 (100.0%)** |




படம் 4.1.1 – கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊழியர்களின் எண்ணிக்கை

**அட்டவணை 4.1.2 - 2013 நிதி ஆண்டில் பிரிவின் பிரதான செயலாற்றுகைகள்**

| | செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **மனித வள முகாமைத்துவம் – ஆட்சேர்ப்பு** | |
| (i) | *ஆடசேர்ப்பு (பணியாளர்கள்)* | 19 |
| (ii) | *இராஜினாமா* | 06 |
| (iii) | *ஓய்வுபெறுதல்* | 17 |
| (iv) | *பதவியை கைவிட்டுச் செல்லுதல்* | - |
| 2 | **ஒழுக்காற்று முகாமைத்துவம்** | |
| (i) | *ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்* | 03 |
| (ii) | *தொழில் ஆணையாளர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தொழில் பிணக்குகள்* | 10 |
| 3 | **மனித வள அபிவிருத்தி - பயிற்சி** | |
| (i) | *உள்நாட்டுப் பயிற்சி* | 213 |
| (ii) | *வெளிநாட்டுப் பயிற்சி* | 13 |
| 4 | **மனித வள முகாமைத்துவம் - இழப்பீடு** | |
| (i) | *33 பேருக்கு பணிக்கொடை செலுத்துதல்* | ரூ..1,0399,496.50 |
| 5 | **மனித வள முகாமைத்துவம் – ஊழியர் நலன்புரி** | |
| (i) | *துவிச்சக்கர வண்டிக் கடன்* | 15 |
| (ii) | *இடர் கடன்* | 110 |
| (iii) | *மருத்துவ சிகிச்சை திட்டம் (மருத்துவ கட்டணங்களை மீளளித்தல்)* | 481 |
| 6 | **பாதுகாப்பு முகாமைத்துவம்** | |
| (i) | *பாதுகாப்பு கிரயம்* | 20,349,597.41 |
| 7 | **அகற்றுதல்** | |
| (i) | *நடாத்தப்பட்ட பண்ட மதிப்பாய்வுகள்* | 01 |
| 8 | **பொது வைபவங்கள்** | |
| (i) | *வைபவங்களின்எண்ணிக்கை* | *03* |
| 9 | **தயால் தொலைத்தொடர்பு கட்டணங்கள்** | |
| (i) | *தபாற் கட்டணங்கள்* | ரூ.491,878.00 |
| (ii) | *தொலைத்தொடர்பு கட்டணங்கள்* | ரூ.5,397,200.06 |

| | செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| **10** | **போக்குவரத்து முகாமைத்துவம்** | |
| (i) | *எரிபொருள் செலவினம்* | ரூ. 3,729,138.00 |
| (ii) | *வாகன பராமரிப்பு செலவினம்* | ரூ 3,453,808.00 |
| **11** | **பெறுகை முகாமைத்துவம்** | |
| (i) | *சமர்பிக்கப்பட்ட பொருள் அனுப்பல் கட்டளைகளின் எண்ணிக்கை* | 418 |
| (ii) | *மூலதனப் பெறுகைகள்* | ரூ 3,346,129.16 |
| (iii) | *மீண்டெழும் பெறுகைகள்* | ரூ 30,812,090.22 |
| | | |

## 4.2 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

### 4.2.1 **பொது**

நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள 25 மாவாட்ட அலுவலகலங்ளைக் கொண்ட பிரதேச அபிவிருத்தி பிரிவுக்கு பிரதேச மட்டத்தில் அதன் பிரதான பணிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கைத்தொழில் கிராம அபிவிருத்திப் பிரிவு அதன் பிராந்திய வலலைப்பின்னல் ஊடாக நாட்டின் 25 மாவட்டங்களையும் தழுவும் வகையில் கைத்தொழில்/நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக மிகப் பாரியதொரு வகிபாகத்தினை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக 2015 ஆம் ஆண்டில் தொழிலமுயற்சி அபிவிருத்திக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஆற்றல் வளமுடைய எதிர்கால தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்கள் ஆகிய இருசாராருக்கும் ஆற்றல் விருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி போன்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டகள் நடாத்தப்பட்டதுடன் இதன்மூலம் தற்போதுள்ள தொழில்முயற்சிகளையும் புதிய தொழில் முயற்சிகளையும் ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விடயம் சார்ந்ததாக பணிகளையும் அதனைச் சார்ந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் பொருட்டு தலைமை அலுவலகத்திலுள்ள பிராந்திய அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி பிரிவுகள் செயலாற்றுகின்றன.

மாவட்ட அலுவலகங்களுக்கு சாட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/கருத்தரங்குகள், முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்குகள், தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடாத்துதல், சந்தை உதவிகள்/சந்தை தொடர்புகளை ஏற்படுத்துதல், உற்பத்தி மற்றும் செயன்முறை சார்ந்த தொழில்நுட்ப பரிமாற்றம், சாத்தியவள ஆய்வுகள், மற்றும் சலுகை கட்டண அடிப்படையில் கைத்தொழில் மூலப்பொருட்களை வழங்குதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

உற்பத்தி கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை, வருடாந்த செயல்திட்டத்திற்கு இசைந்தொழுகும் வகையில் உருவாக்கப்பட்ட மூலேபாயங்களாக அமைகின்றன.

2015 ஆம் ஆண்டில் மூலதன செலவினத்தில் பிரதேச அபிவிருத்திப் பிரிவுக்காக ரூ. 15 மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்துறையில் 2015 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டத்திற்கேற்ப 21 பிரதிப் பணிப்பாளர்கள், 06 உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் 62 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் உள்ளிட்டவாறு அதன் பிரதேச பணியாட்டொகுதியினால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு.


தாபிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் - 2015
:IES-2015
350
300
250
200
150
100
50
0
42
194
57
261
41
133
27
84
16
48
40
134
56
161
24
66
46
292
மேற்கு
தென்
மத்திய
வட மத்திய
ஊவா
சபர
வட மத்திய
கிழக்கு
வடக்கு
அலகுகளின் எண்ணிக்கை
தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை


மாகாண மட்டத்தில் கைத்தொழில்களின் விரிவாக்கம் -
1800
1600
1400
1200
1000
800
600
400
200
0
353
1591
293
1575
187
639
55
140
74
320
151
616
194
621
148
578
148
409
மேற்கு
தென்
மத்திய
வட மத்திய
ஊவா
சபர
வட மத்திய
கிழக்கு
வடக்கு
அலகுகளின் எண்ணிக்கை
தொழில்வாய்ப்புகள்

அட்டவணை 4.2.1.2

## இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
## புதிய கைத்தொழில் அலகுகளை தாபிப்பதற்காக வழங்கப்பட்ட உதவிகள் - 2015

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ) | தொழில் வாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| **மத்திய** | கண்டி | 20 | 13,540,009 | 61 |
| | மாத்தளை | 15 | 12,550,003 | 55 |
| | நுவரெலியா | 6 | 2,710,000 | 17 |
| **மொத்தம்** | | **41** | **28,800,012** | **133** |
| **கிழக்கு** | அம்பாறை | 7 | 1,679,000 | 16 |
| | திருகோணமலை | 14 | 4,410,500 | 43 |
| | மட்டக்களப்பு | 3 | 1,110,000 | 7 |
| **மொத்தம்** | | **24** | **7,199,500** | **66** |
| **வட மத்தி** | அநுராதபுரம் | 21 | 2,398,000 | 41 |
| | பொலநுறுவை | 6 | 3,915,003 | 7 |
| **மொத்தம்** | | **27** | **29,025,017** | **48** |
| **வடக்கு** | யாழ்ப்பாணம் | 21 | 307,521,502 | 164 |
| | வவுனியா | 5 | 5,315,000 | 18 |
| | கிளிநொச்சி | 8 | 1,109,244 | 80 |
| | மன்னார் | 8 | 3,387,000 | 17 |
| | முல்லைத்தீவு | 4 | 2,345,000 | 13 |
| **மொத்தம்** | | **46** | **319,677,746** | **292** |
| **வடமேல்** | குருநாகல் | 25 | 28,290,000 | 71 |
| | புத்தளம் | 31 | 40,711,505 | 90 |
| **மொத்தம்** | | **56** | **69,001,505** | **161** |
| **சப்ரகமுவ** | இரத்தினபுரி | 12 | 35,625,015 | 57 |
| | கேகாலை | 28 | 45,900,010 | 77 |
| **மொத்தம்** | | **40** | **81,525,025** | 134 |
| **தென்** | காலி | 21 | 28,655,000 | 47 |
| | மாத்தறை | 19 | 40,437,023 | 94 |
| | அம்பாந்தோட்டை | 17 | 18,405,000 | 120 |
| **மொத்தம்** | | **57** | **87,497,023** | **261** |
| **ஊவா** | பதுளை | 13 | 29,025,017 | 41 |
| | மொணராகலை | 3 | 4,888,000 | 7 |
| **மொத்தம்** | | **16** | **33,858,017** | **48** |
| **மேல்** | கொழும்பு | 12 | 32,095,000 | 64 |
| | கம்பஹா | 24 | 55,197,502 | 99 |
| | களுத்துறை | 6 | 17,715,006 | 31 |
| **மொத்தம்** | | **42** | **1,050,075,008** | **194** |
| **முழு மொத்தம்** | | **349** | **738,879,339** | **1,373** |

**அட்டவணை 4.2.1.3 –** இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தற்போதுள்ள கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒத்துழைப்பு வழங்குதல் 2015 ஆம் ஆண்டு

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ) | | | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் |
| மத்திய | நுவரெலியா | 8 | 20,757,000 | 10,125,000 | 30,882,000 | 89 | 109 | 198 |
| | கண்டி | 59 | 51,970,000 | 20,444,000 | 72,414,000 | 369 | 158 | 527 |
| | மாத்தளை | 24 | 13,955,000 | 3,975,000 | 17,930,000 | 75 | 43 | 118 |
| **உப மொத்தம்** | | **91** | **86,682,000** | **34,544,000** | **121,226,000** | **533** | **310** | **843** |
| கிழக்கு | அம்பாறை | 5 | 1,710,000 | 3,378,000 | 5,088,000 | 19 | 15 | 34 |
| | மட்டக்களப்பு | 22 | 5,775,000 | 2,180,000 | 7,955,000 | 126 | 71 | 197 |
| | திருகோணமலை | 22 | 4,502,500 | 1,785,000 | 6,287,500 | 49 | 79 | 128 |
| **மொத்தம்** | | **49** | **11,987,500** | **7,343,000** | **19,330,500** | **194** | **165** | **359** |
| வடமத்திய | அநுராதபுரம் | 8 | 3,432,000 | 1,002,000 | 4,434,000 | 15 | 9 | 24 |
| | பொலநறுவை | 11 | 40,040,000 | 13,110,000 | 53,150,000 | 80 | 38 | 118 |
| **மொத்தம்** | | **19** | **43,472,000** | **14,112,000** | **57,584,000** | **95** | **47** | **142** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 28 | 7,520,000 | 4,848,000 | 12,368,000 | 69 | 41 | 110 |
| | வவுனியா | 8 | 1,206,000 | 472,500 | 1,678,500 | 26 | 6 | 32 |
| | கிளிநொச்சி | 13 | 626,000 | 364,650 | 990,650 | 27 | 25 | 52 |
| | மன்னார் | 5 | 750,000 | 740,000 | 1,490,000 | 10 | 4 | 14 |
| | முல்லைத்தீவு | 6 | 1,488,000 | 330,000 | 1,818,000 | 17 | 6 | 23 |
| **மொத்தம்** | | **60** | **11,590,000** | **6,755,150** | **18,345,150** | **149** | **82** | **231** |
| வடமேல் | குருநாகல் | 54 | 58,383,000 | 10,689,365 | 69,072,365 | 218 | 130 | 348 |
| | புத்தளம் | 16 | 22,193,200 | 14,258,326 | 36,451,526 | 72 | 55 | 127 |
| **மொத்தம்** | | **70** | **80,576,200** | **24,947,691** | **105,523,891** | **290** | **185** | **475** |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 19 | 16,148,000 | 11,830,000 | 27,978,000 | 73 | 38 | 111 |
| | கேகாலை | 40 | 28,635,000 | 17,944,000 | 46,579,000 | 143 | 119 | 262 |
| **மொத்தம்** | | **59** | **44,783,000** | **29,774,000** | **74,557,000** | **216** | **157** | **373** |
| தென் | காலி | 43 | 57,787,500 | 43,873,000 | 101,660,500 | 259 | 185 | 444 |
| | மாத்தறை | 39 | 32,793,000 | 25,037,000 | 57,830,000 | 174 | 63 | 237 |
| | அம்பாந்தோட்டை | 27 | 18,819,000 | 4,822,000 | 23,641,000 | 96 | 26 | 122 |
| **மொத்தம்** | | **109** | **109,399,500** | **73,732,000** | **183,131,500** | **529** | **274** | **803** |
| ஊவா | பதுளை | 32 | 67,082,000 | 51,283,200 | 118,365,200 | 138 | 13 | 151 |
| | மொணராகலை | 9 | 4,769,000 | 2,840,000 | 7,609,000 | 41 | 45 | 86 |
| **மொத்தம்** | | **41** | **71,851,000** | **54,123,200** | **125,974,200** | **179** | **58** | **237** |
| மேற்கு | கொழும்பு | 37 | 68,378,000 | 9,108,000 | 77,486,000 | 374 | 56 | 430 |
| | களுத்துறை | 27 | 85,015,000 | 24,497,000 | 109,512,000 | 189 | 38 | 227 |
| | கம்பஹா | 43 | 137,303,700 | 81,151,500 | 218,455,200 | 614 | 341 | 955 |
| **மொத்தம்** | | **107** | **290,696,700** | **114,756,500** | **405,453,200** | **1,177** | **435** | **1,612** |
| **முழுமொத்** | | **605** | **751,037,900** | **360,087,541** | **1,111,125,441** | **3,362** | **1,713** | **5,075** |

### 4.2.2 கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

**(அ) மட்பாண்டத் கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

மட்பாண்டத் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை விட முன்னேற்றகரமான உபகரணங்களையும் நவீன தொழில்நுட்பங்களையும் வழங்குவதன் மூலம் உயர்தரத்திலான புதிய உற்பத்திகளை உருவாக்கிக்கொள்ளக் கூடியவாறு மட்பாண்டத் கைத்தொழில் கிராமங்களை விருத்தி செய்தல் பற்றி 2013 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட உரையின் போது கலந்துரையாடப்பட்டது. கைத்தொழில் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் மட்பாண்டத் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சமுதாயத்தின் வருமானத்தை முன்னேற்றுவதும் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5 மட்பாண்டத் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டு ரூ.3.36 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

(ஆ) **தொழில்முயற்சி கிராமங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டம்**

கிராமிய மட்டத்தில் பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களுக்கு உதவி வழங்கும் தேவை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட பிரேரணைகள் முலம் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்த்தின் கீழ் 2 கிராமங்களை விருத்தி செய்வதற்காக ரூ. 4.33 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் 0.31 மில்லியன் செலவிட்பட்டது. இதன் மூலம் 35 பயனாளிகள் நன்மையடைந்தனர்.

**(இ) கைப்பணி கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**.

2014 ஆம் ஆண்டில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் கிராமங்கள் இனங்காணப்பட்டன. மேற்படி கைத்தொழில்களின் நிலைபேறான தன்மைக்கு உதவிவழங்கக்கூடிய தொழில்நுட்பம், திறன் மற்றும் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல் இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 ஆண்டில் ரூ. 0.5 மில்லியன் ஒதுக்கப்பட்டதெனினும் அவ்வருடத்திற்குள் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.0.03 மில்லியன் மாத்திரமாகும். தொழில்நுட்ப முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 75 தொழில்முயற்சியாளர்கள் நன்மையடைந்ததனர்.

### 4.2.2 கித்துள் உற்பத்திகளை விருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கித்துள் மரத்திலுள்ள பல்வேறு பயன்கள் காரணமாக அது மிகவும் பெறுமதியான மரமாக இருப்பதுடன் கித்துள் பூ அதன் மிகவும் பெறுமதியான பகுதியென கருதப்படுகின்றது. கித்துள் கள்ளு, பாணி, மற்றும் வெள்ளம் போன்றவற்றை தயாரிப்பதற்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் சாரத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கித்துள் பூ சீவப்படுகின்றது. ஆயினும் கித்துள் பூவை சீவுவதன் வணிக ரீதியிலான பெறுமதி பற்றி சமுதாயம் கொண்டுள்ள விழிப்புணர்வின்மை காரணமாக பெருமளவு கித்துள் மரப்பூக்கள்

சீவப்படுவதில்லையென அறியப்பட்டுள்ளது.ஆகவே, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் கித்துள் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு விசேட நிகழ்ச்சிதிட்டமொனறு ஆரம்பிக்கப்பட்டது.

கித்துள் உற்பத்தியாளர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம் கித்துள் கைத்தொழிலை மேம்படுத்தல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். சீவப்படுகின்ற கித்துள் மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், பயனாளிகளின் வருமான மட்டத்தினை உயர்த்துதல், தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்துதல், உற்பத்தி பல்வகைப்படுத்தல் ஊடாக உயர் தரத்திலான கித்துள் உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கித்துள் உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை அதிகரித்தல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய விசேட குறிக்கோல்கள் சிலவாகும்.

இக்கருத்திட்டம்18 மாவட்டங்களில் 150 பிரதேச செயலங்களை தழுவும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு இறுதியின் போது 9 கித்துள் சீவுதல் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 312 கித்துள் கைத்தொழிலாளர்களுக்கு ஒழுங்குசெய்து நடாத்தியதுடன் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கித்துளக வருண கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி சபை 3777 கெஸ்பர் போத்தல்களை நாடாளாவிய ரீதியில் கித்துள் சீவல் தொழிலாளர்களுக்க விநியோகித்தது. இக்கருத்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டில் ரூ.3.97மில்லியன் ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

## 4.3 திட்டமிடல் பிரிவு

### 4.3.1 பொது

உலக பொருளாதாரத்தில் ஏற்படும் வேகமான மாற்றங்கள் காரணமாக தொழில்முயற்சி அபிவிருத்தி சேவைகளில் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர் தொழில்முயற்சியாளர்களுக்கு மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள சேவையினை வழங்குவதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கான உத்திகளை மீளமைப்பதற்கும் மீண்டும் வரைவிலக்கணப்படுத்துவதற்கும் ஏதுவான சவால்மிகு பணி திட்டமிடல் பிரிவுக்கு சாட்டப்பட்டுள்ளது.

**திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

ஒவ்வொரு பிரிவிற்கும் எதுவான அபிவிருத்தி பணிகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடு செய்தல் திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளாகும். இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு ஆண்டின் தொடர்கத்திலும் நிச்சயிக்கப்படுகின்ற பௌதீக மற்றும் நிதி இலக்குகளுக்கு ஏதுவாக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கான கூட்டாண்மை திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஒவ்வொரு பிரிவினதும் வருடாந்த மூலோபாய செயல் திட்டங்களையும் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தலும் திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்புகளாகும். மேலும் இந்த பிரிவினால் நிரல் அமைச்சுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணியாள் தொகுதியின் செயலாற்றுகை மதிப்பீட்டிற்காக செயலாற்றுகை மதிப்பீட்டு மதிப்பீட்டாளர்களுக்கும் அத்துடன் பணிப்பாளர் - நிர்வாகத்திற்கும் முகாமைத்துவ தகவல்கள் வழங்கப்படுகின்றன.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏனைய பிரிவுகளின் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு பின்வரும் துணை செயற்பாடுகளும் இப்பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளன.

- கைத்தொழில் அபிவிருத்தி சபையினதும் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சபை சட்டத்தின் கட்டாய குறிக்கோள்களுக்கும் எற்ப கொள்கைகள், முறைமைகள் மற்றும் வழிகாட்டல்களை ஆக்குதல்
- தாபனத்தின் பாதீடு மற்றும் ஒட்டுமொத்த செயல் திட்டத்திற்கு ஏற்ப மூலதன மற்றும் மீண்டெழும் செலவின தேவைகளை தயாரிப்பதற்கு வசதிகளை வழங்குதல்
- தொழில்முயற்சி/கைததொழில் மதிப்பாய்வுகளை நடாத்துவதற்கு வசதிகளை வழங்குதல், கைத்தொழில்/பொருளாதாரம் சார்நத புள்ளிவிபரங்களை இற்றைப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை தயாரிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளையும எண்ணக்கரு பத்திரங்களையும் தயாரித்தல்
- தற்போதுள்ள கைத்தொழில் சார்ந்த கொள்கை வகுத்தல் குழுவிற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் தேவையான சந்தரப்பத்தில் தேவையானவாறு கொள்கை பத்திரங்களை தயாரித்தல்

**பிரிவினால் ஆற்றப்படும் ஏனைய பணிகள்**

**துறையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

I. 2015 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் பிரிவினால் தயாரிக்கப்படட்டது.

II. கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நிதியியல் மற்றும் பௌதீக முன்னேற்றத்தை பற்றிய விரிவான அறிக்கையினை தயாரித்தல்

III. இப்பிரிவினால் பின்வரும் அரச நிறுவனங்களுக்கு புள்ளிவிபரங்கள் வழங்கப்பட்டன

- வருடாந்த அறிக்கைக்காக இலங்கை மத்திய வங்கிக்கு
- தேசிய கணக்குகள் மதிப்பீட்டிற்காக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு

IV. 2014 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டின் 01, 02 மற்றும் 03 ஆம் காலாண்டுகளுக்கான நான்கு காலாண்டுகளுக்கான செயலாற்றுகை பற்றிய பௌதீக மற்றும் நிதியியல் அறிக்கைகளை தயரித்தல்

V. அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க 2016 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் குழு நிலை விவாதத்தின் போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை பற்றிய மீளாய்வினை தயாரித்தல்

2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட விவாதத்தின் குழு நிலை விவாதத்தின் போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கையொன்றை தயாரிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

VI. தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ISIC (International Standard of Industrial Clarification) புதிய தொலைநோக்கின் பிரகாரம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கடந்த மூன்றாண்டுகால முன்னேற்றத்தின் அடிப்படையில் தற்போதுள்ள தரவுத் தளம் இற்றைப்படுத்தப்பட்டது.

VII. அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தர கால/நீண்ட கால கருத்திட்டங்களைப் பற்றிய விவரமான அறிக்கையொன்றை தயாரித்தல்

## 4.4 சந்தைப்படுத்தல் பிரிவு

நாடு பூராவும் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபடுபவர்கள் ஆகியோரினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவான செயற்பாடுகள் சம்பந்தமாக பணியாற்றும சந்தைப்படுத்தல் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முக்கியமான சக்தியாக விளங்குகின்றது. அது மிகவும் முக்கியமான நபராகிய நுகர்வோரின் முழுமையான திருப்தியை உருவாக்கும் வகையில் பரஸ்பரம் நன்மை பயக்கக்கூடிய நீண்டகால வர்த்தக தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் நுகர்வோருக்கு சேவைகைள
வழங்குகின்றது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் அச்சு மற்றும் வெளியீட்டுப் பிரிவும் சந்தைப்படுத்தல் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இப்பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்/தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்றல்

- நாடளாவிய ரீதியில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தை ஒழுங்குசெய்தல்
- “லக்கம்” மற்றும் “லக்நிபயும்” விற்பனை நிலையங்களில் விற்பனை வசதிகளை வழங்குதல்
- துணை ஒப்பந்தக்காரர்களின் பரிமாற்றத்திற்கு வசதியளித்தல்

- வார்ப்பு வேலைகள், சாதாரண எந்திரவியல், கொல்லன் பட்டறை வேலைகள் மற்றும் ஏனைய உலோக வார்ப்பு வேலைகள், கைவினை தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தொழலாளர்கள் போன்றோருக்கு சலுகை விலைகளில் மூலப்பொருட்கள்/கழிவுப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குதல்
- கைத்தொழில்/நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் விருத்திசெய்வதற்காக சந்தைப்படுத்தல் உதவிகளையும் மதியுரை சேவைகளையும் வழங்குதல்

**இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் மற்றும் சேவை அலகுகள்**

"லக்நிபயும்" மற்றும் "லக்கம்" விற்பனை நிலையங்கள் – நாடளாவிய ரீதியில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடுபவர்களின் உற்பத்திகளின் பயனுறுதியை உயர்த்துவதையும் சந்தைப்படுத்தலை மேம்படுததுவதையும் நோக்காகக் கொண்டு "லக்நிபயும்" மற்றும் "லக்கம்" விற்பனை நிலையங்கள் ஊடாக கண்காட்சி மற்றும் விற்பனை வசதிகள் வழங்கப்படுகின்றது.

***துணை ஒப்பந்தங்களின் பரிமாற்றம்***

உலக வங்கி நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சந்தைப்படுததல் பிரிவின் கீழ் துணை ஒப்பந்த பரிமாற்றம் 1982 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. அது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நிரம்பல் செய்வதுடன் தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துகின்றது.

**உலோகக் கழிவு கருத்திட்டம் -** சந்தைப்டுத்தல் பிரிவினால் இரும்பு கலந்த மற்றும் இரும்பு கலவை செய்யப்படாத உலோகக் கழிவுகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்த விலைக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சார்பில் அரச நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்கின்றது.இந்த பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையில் பதிவு செய்துகொண்டுள்ள சாதாரண எந்திரவியல் கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருளாக விற்பனை செய்யப்படுகின்றது.

**கண்காட்சி -** கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நுண்,சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கண்காட்சிகள் ஒழுக்குசெய்யப்படுகின்றன. மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலான கண்காட்சி நடாத்தப்பட்டதையடுத்து நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வகைகளின் கீழ் நாடளாவிய ரீதியில் சிறந்த தொழில்முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்காக தேசிய மட்டத்திலான வருடாந்த கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி நடாத்தப்படுகின்றது. இந்த கண்காட்சிகள் மூலமாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வசதிகள் பெற்றுத்தரப்படுகின்றன.

**அட்டவணை இலக்கம் 4.4.1 – சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகை** - 2015

| **செயலாற்றுகை** | **லக்நிபயும் விற்பனை நிலையம்** | **லக்கம் விற்பனை நிலையம்** | **துணை ஒப்பந்தங்களை வழங்குதல்** | **உலோகக் கழிவு கருத்திட்டம்** | **மொத்தம் (ரூ.மி.)** |
|---|---|---|---|---|---|
| விற்பனை பெறுமதி (ரூ. மி.) | 0.0643 | 10.7 | 9.76 | 85.06 | 106.4 |
| வருமானம் (ரூ.மி.) | 0.0132 | 2.116 | 0.487 | 20.55 | 23.16 |
| கொள்வனவுக் கோரிக்கைகளை விநியோகித்தல் | | | 33 | | |
| கொள்வனவு (மெ.தொன்) | | | | 758 | |
| விநியோகம்(மெ.தொன்) | | | | 776 | |
| வசதியளிக்கப்பட்ட கைத்தொழிலாளர்கள் | | 40 | 19 | 726 | |



## 4.5 கைத்தொழில் பேட்டைப் பிரிவு

### பொது

கைத்தொழில்களுக்கான பொதுக்கட்டமைப்பு வசதிகளை போதியளவு கொண்டிருத்தல் எனும் விடயத்தில் கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையில் பாரியதொரு வித்தியாசம் காணப்படுகின்றது. ஆகவே, பிராந்திய கைத்தொழில்மயமாக்கலை ஊக்குவித்து நாடாளவிய ரீதியல் கைத்தொழி7ி அபிவிருத்தியினை விரவாக்குவதற்கும் நோக்காக் கொண்டு கைத்தொழில் பேட்டை எண்ணக்கரு 1960 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் வாய்ப்பு வளமுடைய கைத்தொழில் சூழல்களில் போதிய பொதுக்கட்டமைப்பு வசதிகளுடைய பிரதேசங்களில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு காணிகளையும் நிருமாணிக்கப்பட்டு தயார்நிலையில் உள்ள கட்டிடங்களையும் வழங்கி கைத்தொழில்களை தாபிக்கச் செய்வதே இதன் முதன்மையான நோக்கமாக அமைந்தது.

அக்காலம் முதல் கடந்த 40ஆண்டு காலத்தில் கொழும்பிற்கும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கும் அதிக அக்கறை காட்டப்பட்டாலும் 19 கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கியதன் மூலம் தற்போது இக்கவனம் கிராமிய பிரதேசங்களுக்கும் அதிகமாக செலுத்தப்பட்டு வருகின்றது. கைத்தொழில் அபிவிருத்தி சபை தனது இக்கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழில்களை அமைப்பதற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பொருத்தமான காணிகளை போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளுடன் வழங்கி வருகின்றது. அண்மைக்காலமாக புதிய கைத்தொழல்களை தாபிப்பதற்காக தனியார் துறையினரை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்கனவேயுள்ள கைத்தொழில் பேட்டைகளில் பொதுக்கட்டமைப்பு வசதிகளை மேலும் முன்னேற்றி வருகின்றது. முதலீட்டாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழில்களை அமைப்பதற்கு பொருத்தமான காணியையும் நிருமாணிக்கப்பட்டு தயார் நிலையிலுள்ள கட்டிடங்களையும் பரிந்துரைப்பதற்காகவும் கைத்தொழில் அபிவிருத்தி சபை தனது கைத்தொழில் பேட்டைப் பிரிவு மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலங்களின் அத்தியட்சகர்கள்/பிரதி பணிப்பாளர்களுடன் இணைந்து பிரதான வகிபாகத்தை ஆற்றிவருகின்றது.

1970 ஆம் ஆண்டு முதல் விருத்தி செய்யப்பட்ட காணியின் மொத்த அளவு 312 ஏக்கர்களாகும். இது 664 காணித்துண்டுகளாக வகுக்கப்பட்டுள்ளதுடன் 363 கைத்தொழிலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள காணிகளில் 220 காணிகளில் எற்கனவே தொழில்முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் 6254 தொழில்வாய்ப்புகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் 52 கைத்தொழில் அலகுகளில் தொழிற்சாலை கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் அவை பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றன. வதிவிட வசதிகளாக பயன்படுத்தப்பட்டு வரும் 91 கைத்தொழில் அலகுகளை அகற்றவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

| | கைத்தொழில் பேட்டை | மாவட்டம் |
|---|---|---|
| 01 | ஏக்கல | கம்பஹா |
| 02 | பள்ளேகல | கண்டி |
| 03 | அச்சுவேலி | யாழ்ப்பாணம் |

- யுத்தம் காரணமாக அச்சவேலி கைத்தொழில் பேட்டை முற்றுமுழுதாக அழிவுக்குள்ளாகியது. இலங்கையில் முதலாவது கைத்தொழில் பேட்டையாகிய இதன் பொதுக்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்காக 2013/2014 ஆண்டில் இலங்கை அரசாங்கம் 50 மில்லியன் டொலர் பணத்தொகையை வழங்கியது. இதன் மீளமைப்பு பணிகள் UNOPS இனால் மேற்கொள்ளப்பட்டதுடன் வசதிகளும் பொதுக்கட்டமைப்பு வசதிகளும் குறிப்பிடத்தக்களவு தரத்திற்கு கொண்டுவரப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் படி இந்திய அரசாங்கமும் 220 மில்லியன் டொலர் பணத்தொகையை வழங்கியது. 2014 ஆம் ஆண்டு இது மீளத் திறந்துவைக்கபட்டதுடன் தற்போது சுமூகமாக இயங்கி வருகின்றது. இங்கு சில வெற்றுக்காணிகள் காணப்படுகின்றன.
- ஹொரனை மற்றும் லுனுவில கைத்தொழில் பேட்டைகள் முறையே களுத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் தாபிக்கப்பட்டன.
- குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பன்னல கைத்தொழில் பேட்டை 1980 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- கொட்டகலை, வவுலுகல, கலிகமுவ, புஸ்செல்ல, கரந்தெனிய, பத்தேகம, நெகம்பஹா, மிஹிந்தலை, வவுனியா, பெலியத்த, மற்றும் புத்தள ஆகிய கைத்தொழில் பேட்டைகள் இசுறு உயன கைத்தொழில் பேட்டை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய கைத்தொழில் பேட்டை நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.
- கொழும்பு மாவட்டத்திலுள்ள பனாலுவ கைத்தொழில் பேட்டை 2006 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

**நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகள் – மாகாண மட்டத்தில்**

| கைத்தொழில் பேட்டைகள் | மாகாணங்கள் |
|---|---|
| ஏக்கல, ஹொரனை, வவுலுகல மற்றும் பனாலுவ | மேற்கு மாகாணம் |
| பள்ளெகலை, மாத்தளை மற்றும் கொட்டகலை | மத்திய மாகாணம் |
| பன்னல மற்றும் லுனுவில | வடமேல் மாகாணம் |
| கலிகமுவ மற்றும் புஸ்செல்ல | சப்ரகமுவ மாகாணம் |
| கரந்தெனிய, பத்தேகம மற்றும் பெலியத்த | தென் மாகாணம் |
| நெகம்பஹா மற்றும் மிகிந்தலை | வடமத்திய மாகாணம் |
| வவுனியா மற்றும் அச்சுவேலி | வட மாகாணம் |
| புத்தள | ஊவா மாகாணம் |

**கைத்தொழில் பேட்டைகள் பிரிவுகளுக்கு சாட்டப்பட்டுள்ள செயற்பாடுகள்**

- கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை இனங்காண்பதற்காக பூர்வாங்க ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- சம்பந்தப்பட்ட நிறவனங்களிலிருந்து நிதியையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல்
- தற்போதுள்ள மற்றும் உத்தேச கைத்தொழில் பேட்டைகளின் நிறுமாணப் பணிகளை மேற்கொள்ளுதல்
- வெற்றுக் காணிகள் மற்றும் கட்டிங்களை வழங்குவதற்கு புதிய கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்தல்
- தற்போதுள்ள கைத்தொழில் பேட்டைகளை பேணிவருதல்
- ஒதுக்கீடு பற்றிய கடிதங்களை வழங்குதல் மற்றும் குத்தகையாளர்களுடன் குத்தகை ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல்
- வாடகைப் பணத்தை அறவிடுதல் மற்றும் அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- எற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் நிபந்தனைளை மீறும் கைத்தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏனைய பிரிவுகளுடன் இணைந்து கைத்தொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்குதல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரிவுகளினால் ஒழுங்குசெய்யப்படும் கண்காட்சிகள், போட்டிகள், செயலமர்வுகள் ஆகியவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

பின்வரும் 19 கைத்தொழில் பேட்டைகளில் மழைநீர் வடிகான்கள் மற்றும் உள்ளக பாதைகள் போன்ற ஏற்கனவேயுள்ள பொதுக்கட்டமைப்பு வசதிகளை மேப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில் நிரல் அமைச்சின் ஊடாக அரச பொது திறைசேறியில் இருந்து பெற்றுக்கொண்ட சுமார் 70 மில்லியன் பணத்தொகை செலவிடப்பட்டுள்ளது.

**அவற்றின் விபரங்கள் பின்வருமாறு,**

| **தொடர் இலக்கம்** | **செயற்பாடு** | **கைத்தொழில் பேட்டையின் பெயர்** | **தொகை (ரூ)** |
|---|---|---|---|
| 1 | உள்ளக பாதையினை அமைத்தல் (கட்டம் -II) | லுனுவில | 2,005,000.00 |
| 2 | உள்ளக பாதையினை அமைத்தல் (கட்டம் -II) | பள்ளேகலை | 29,599,460.90 |
| 3 | உள்ளக பாதையினை அமைத்தல் (கட்டம் -II) | ஏக்கல | 16,300,000.00 |
| 4 | உள்ளக பாதையினை அமைத்தல் | பனாலுவ | 15,000,000.00 |
| 5 | உள்ளக பாதையினை அமைத்தல் | களுதாவளை | 6,458,365.00 |
| **மொத்தம்** | | | **69,362,825.90** |

**கைத்தொழில் அலகுகளுக்காக கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்தல்**

தற்போது கைத்தொழில்களை நிறுவியுள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் புதிய காணித்துண்டுடகள்/கட்டடப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ள கட்டிடங்களை பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றிற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து நடைமுறை ரீதியில் ஆற்றலுடைய 20 கைத்தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

**ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கைத்தொழில் அலகுகள்**

| இல | கைத்தொழில் பேட்டைகள் | கைத்தொழில்களின் பெயர்கள் | கைத்தொழில் | உத்தேச முதலீடு (ரூ. மி.) | உத்தேச தொழில் வாய்ப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | பள்ளேகலை | சன்ரைஸ் இன்டஸ்றீஸ் (பி) லிமிட்டெட் | தீப்பெட்டி | 66.8 | 126 |
| 02 | பள்ளேகலை | நிமினி இன்டஸ்றீஸ் | விறகு உற்பத்தி | 10 | 29 |
| 03 | பள்ளேகலை | உதித பில்டர்ஸ் | தளபாடம் | 41 | 75 |
| 04 | பள்ளேகலை | ஆரா இன்டஸ்றீஸ் (பி) லிமிடெட் | பிளாஸ்டிக் சாரந்த உற்பத்திகள் | 7.8 | 12 |
| 05 | ஏக்கல | ஆனந்த சரத் லியனகே | பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திகள் | 18 | 26 |
| 06 | ஏக்கல | S.Q.A. த பர்னாந்து | பொலி பைகள் | 15.3 | 05. |
| 07 | ஏக்கல | யூனியன் நிட்டிங் (பி) லிமிடெட் | புடவைசார்ந்த தையல் பூ வேலை | 68 | 50 |
| 08 | ஏக்கல | ஸ்பெசலிட்டி கன்ஸ்ரசஷன் (பி) லிமிடெட் | கட்டுநிர்மாண சார்ந்த வண்ணப்பூச்சு | 9.8 | 38 |
| 09 | கலிகமுவ | சுரென்கோ நெச்சுரல் புரடக்ட்ஸ் (பி)லிமிடெட் | மூலிகை உற்பத்திகள் | 5.2 | 12 |
| 10 | கலிகமுவ | அட்சு இன்டஸ்றீஸ் | உளுந்து மா மற்றும் நல்லெண்ணெய் | 29 | 15 |
| 11 | கலிகமுவ | டெலுக மெசினரி | தளபாடம் | 3.3 | 05 |
| 12 | கலிகமுவ | நிலந்த ரஞ்சித் | இலகு பொறியியல் | 4 | 09 |
| 13 | லுனுவில | ஜீ.எஸ்.ஒயில் மில் | வெள்ளை தேங்காய் எண்ணெய் | 6.4 | 35 |
| 14 | லுனுவில | வேரக்கொடி பைபர் மில்ஸ் | தும்பு சார்ந்த உற்பத்திகள் | 10.1 | 30 |
| 15 | பூந்தோட்டம் | எஸ். ஜெயக்குமார் | செதுக்குக்கலை வேலைகள் | 1.1 | 15 |
| 16 | பனாலுவ | ஸ்கென்டெக் சொலுயுசன் | முன்கூட்டியே வலுவூட்டப்பட்ட | 5 | 19 |
| 17 | பனாலுவ | சிரிசந்த டிம்பர் புரடக்ட்ஸ் | மரவேலைகள் | 7.8 | 15 |

| இல | கைத்தொழில் பேட்டைகள் | கைத்தொழில்களின் பெயர்கள் | கைத்தொழில் | உத்தேச முதலீடு (ரூ. மி.) | உத்தேச தொழில் வாய்ப்பு |
|---|---|---|---|---|---|
| 18 | புஸ்ஸெல்லல | ஹார்ட்லன்ட் புட் புரடக்ட்ஸ் | உணவு சார்ந்த உற்பத்திகள் | 13.6 | 55 |
| 19 | புஸ்ஸெல்லல | சன்லங்கா என்டபிரைசஸ் | சீமெந்து சார்ந்த உற்பத்திகள் | 4.1 | 12 |
| 20 | ஹோமா | இலஸ்டொமெரிக் இன்ஜியனரிங் | பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் சார்ந்தவைகள் | 159 | 75 |
| 21 | அச்சுவேலி | நொபெல் பிரின்டர்ஸ் | கழிவுக் கடதாசி மீள்சுழற்சி | 129 | 83 |
| 22 | அச்சுவேலி | சாரா இன்டஸ்றீஸ் | இலகு பொறியியல் | 200 | 60 |
| 23 | அச்சுவேலி | சன்டெக் இன்ஜினியர்ஸ் | சீமெந்து சார்ந்த உற்பத்திகள் | 6.4 | 12 |
| | **மொத்தம்** | | | **830.5** | **869** |

**பேட்டைகளில் தொழில்முயற்சிகளின் ஆரம்பிக்கப்படுவதை மேற்பார்வைசெய்தல்**

| இல | கைத்தொழில் பேட்டை | கைத்தொழிலளாரின் பெயர் | கைத்தொழில் | முதலீடு (ரூ. மி.) | தொழில் வாய்ப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | வவுனியா | எஸ். ஜெயக்குமார் | செதுக்குக்கலை வேலைகள் | 17 | 10 |
| 02 | அச்சுவேலி | யூனியன் என்டர்பிரைசஸ் | பீ.வீ.சீ பைப்ஸ் மற்றும் ஹோஸ் | 168 | 150 |
| 03 | கலிகமுவ | சுரென்கோ நெச்சுரல் புரடக்ட்ஸ் (பி)லிமிடெட் | மூலிகை சார்ந்த உற்பத்திகள் | 5.1 | 8 |
| 04 | கலிகமுவ | அட்சு இன்டஸ்றீஸ் | உளுந்து மா மற்றும் நல்லெண்ணெய் | 2.9 | 15 |
| 05 | பனாலுவ | ஸ்கென்டெக் சொலுயுசன் | முன்கூட்டியே வலுவூட்டப்பட்ட பொருட்கள் | 5 | 19 |
| 06 | பனாலுவ | சிரிசந்த டிம்பர் புரடக்ட்ஸ் | மரவேலைகள் | 7.8 | 05 |
| 07 | ஏக்கல | சிலோன் டேப்ஸ்ய (பி) லிமிடெட். | பொதியிடல் பொருட்கள் | 15.3 | 05 |
| 08 | பள்ளேகலை | கேசர மினரல் | ஸ்கிம் கோட் | 8.1 | 22 |
| 09 | கொட்டக லை | சிறி அக்குயிக் மினரல் | கணியமணல் | 3.18 | 9 |
| 10 | லுனுவில | ஜீ.எஸ்.ஒயில் மில் | வெள்ளை தேங்காய் எண்ணெய் | 6.4 | 33 |
| 11 | லுனுவில | வீரக்கொடி பைபர் மில்ஸ் | தும்பு சார்ந்த உற்பத்திகள் | 10.1 | 30 |
| 12 | அச்சுவேலி | எவர்சைன் அமானா கூரைத்தகடுகள் | கூரைத் தகடுகள் | 263 | 75 |
| 13 | அச்சுவேலி | சாரா இன்டஸ்றீஸ் | இலகு பொறியியல் | 60 | 60 |
| 14 | அச்சுவேலி | சன்டெக் இன்ஜினியர்ஸ் | சீமெந்து சார்ந்த உற்பத்திகள் | 6.4 | 17 . |
| | | **13** | **13** | **578.28** | **453** |

**குத்தகை ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல்**

காணிகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு முறையே 30 மற்றும 20 வருடங்கள் வெற்றிகரமாக தொழில்முயற்சியினை மேற்கொண்டுள்ள கைத்தொழிலாளர்களுடன் சம்பந்தப்பட்ட காணிகள் மற்றும கட்டிடங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. மேற்படி கைத்தொழிலாளர்களுடன் 12 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

**வாடகை வருமானத்தை அறிவிடுதல்**

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து மாதாந்தம்/வருடாந்தம் வாடகையை அறவிடுக் கொள்வதன் மூலம் இந்த வருடத்திற்குள் ரூ.54.8 மில்லியன் வருமானம் கிடைத்ததுடன் குத்தகைக்காரர்களினடமிருந்து பெற்றுக் கொண்ட முழு பட்டியலிடப்பட்ட வருமானம் 90% அண்ணளவானதொரு தொகையாக இருந்ததது. இந்த வருடத்திற்குள் குத்தகையாளர்களுடன் குத்தகை ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் போது அவர்களிடமிருந்து மீள செலுத்தும் மூன்றாண்டுகால வைப்பீடாக அறவிடப்பட்ட பணத்தொகைக்காக பேணிவரப்படுகின்ற சுழற்சி நிதியம் 2015 ஆம் ஆண்டு ரூ. 5.3 மில்லியன் ஆகும்.

# கைத்தொழில் பேட்கைகள் காணப்படும் இடங்கள்



## 4.6 இறப்பர் உற்பத்தி விருத்தி மற்றும் சேவைகள் நிலையம்

இறப்பர் சார்ந்த உள்நாட்டு கைத்தொழில்களுக்காக குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு உலக வங்கியின் வழிகாட்டலின் கீழ் நிதிசார் ஒத்துழைப்பின் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் பேலியாகொடையில் தாபிக்கப்பட்டது. அது முதல் இந்நிலையத்தின் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தி கைத்தொழிலாளர்களுக்கு சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

- தொழில்நுட்ப மதியுரை மற்றும் விரிவாக்கல் சேவைகள்
- உற்பத்தி மற்றும் செயன்முறை விருத்தி
- பரிசோதனை மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல்
- பாதியளவு வணிக சேவைகளை வழங்குதல்
- புதிய சந்தை தேவைகளுக்கு திசைமுகப்படுத்திக்கொள்ளுதல்
- கற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பொதுவாக கைத்தொழில்களுக்கிடையில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுதல்

**2015 ஆம் ஆண்டில் நிலையத்தின் செயாலாற்றுகை பின்வருமாறு**

**நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு**

| இல | சேவைகள் | அளவீட்டு குறிகாட்டிகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | எண்ணிக்கை | 18 |
| 2 | பயிற்சிபெறுனர்களின் தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | எண்ணிக்கை | 01 |
| 3 | துணை ஒப்பந்த அனுப்பற் கட்டளைகளுக்கான வசதிகளை வழங்குதல் | எண்ணிக்கை | 21 |
| 4 | உற்பத்தி தரத்த்னை பரிசோதித்தல் மற்றும் சான்றளித்தல்<br>விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை<br>பரிசோதிக்கப்பட்ட உற்பத்தி மாதிரிகளின் எண்ணிக்கை | <br>எண்ணிக்கை<br>எண்ணிக்கை | <br>214<br>1,513 |
| 5 | மையநீக்கம் செய்யப்பட்ட மரப்பால் வழங்குதல் | லீற்றர் | 9,952 |
| 6 | இறப்பர் கலவை பதனிடல் மற்றும் வழங்கல் | கி.கிராம் | 35,366 |
| 7 | இறப்பர் கலவைகளை அரைத்தல் | கி.கிராம் | 17,359 |
| 8 | இறப்பர் பொருள் உற்பத்திசெய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | எண்ணிக்கை | 22 |
| 9 | இறப்பர் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | எண்ணிக்கை | 01 |

**உற்பத்தி மற்றும் விற்பனை – 2015**

| இல | சேவைகள் | அளவு | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| 1 | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 18 எண்ணிக்கை | 49,500 |
| 2 | பயிற்சிபெறுனர்களின் தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 01 எண்ணிக்கை | 35,000 |
| 3 | துணை ஒப்பந்த அனுப்பற் கட்டளைகளுக்கான வசதிகளை வழங்குதல் | 21 எண்ணிக்கை | 1,462,076 |
| 4 | உற்பத்தி தரத்தினை பரிசோதித்தல் மற்றும் சான்றளித்தல்<br>விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை<br>பரிசோதிக்கப்பட்ட உற்பத்தி மாதிரிகளின் எண்ணிக்கை | 214 எண்ணிக்கை<br>1513 எண்ணிக்கை | 985,367 |
| 5 | மையநீக்கம் செய்யப்பட்ட மரப்பால் வழங்குதல் | 9952 **லீற்றர்** | 2,708,510 |
| 6 | இறப்பர் கலவை பதனிடல் மற்றும் வழங்கல் | 35366 **கி.கிராம்** | 16,618,525 |
| 7 | இறப்பர் கலவைகளை அரைத்தல் | 17359 **கி.கிராம்** | 306,344 |
| 8 | இறப்பர் பொருள் உற்பத்திசெய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | 22 எண்ணிக்கை | 264,175 |
| 9 | இறப்பர் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | 01 எண்ணிக்கை | 34,000 |
| | **மொத்தம்** | | **22,463,497** |

**நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சேவைகள் பின்வருமாறு**

**(1)** மோட்டர் கப்லிங் மற்றும் டோர்க் ஆம் புஷ் – எஸ்.ஏ.பீ. இன்டஸ்றீஸ், மடதொலவத்த, கடவத்த

**(2)** டுயட் சீல் கம்பவுன்ட் – எக்சஸ் இன்ஜினியரிங், கொழும்பு

**(3)** டோர் கேட் சீல் – சம்பத் என்டர்பிரைசஸ், அட்டம்பொல வீதி, ஹெந்தலை, வத்தளை

**(4)** ஜெனரேட்டர் மவுன்ட் – லால் இன்ஜினயரிங், கந்துபொட, தெல்கொட

**(5)** சுசர் மவுன்ட் – ரொட்டரி சீல், பளுகம, தொம்பே

பின்வரும் இறப்பர் கலவைகள் துணை ஒப்பந்த வாய்ப்புகளுக்காக வடிவமைக்கப்படடு விருத்தியாக்கப்பட்டது.

1. இலங்கை கடற்படைக்கு "டீ" பீடிங்
2. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு இறப்பர் ரோலர்ஸ்
3. இலங்கை கடற்படைக்கு பிலோ பெயாரிங்ஸ்
4. இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு வெக்கியும் ஹோஸ்
5. இலங்கை கடற்படைக்கு மவுன்டிங்க சூஸ்

## 4.7 எந்திரவியல் பிரிவு

### 4.7.1 பொது

இப்பிரிவின் விடயப்பரப்பின் கீழ் வரும் பிரிவுகளும் நிலையங்களும் பின்வருமாறு

a) கட்டுபெத்த தலைமை அலுவலகம் – எந்திரவியல் வேலைத்தள பிரிவு, வார்ப்பு வேலைத்தளம், எந்திரவியல் காரியாலயம் (தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் மதியுரை சேவைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளுக்காக), சிவில் எந்திரவியல் மற்றும் மின் எந்திரவியல்
b) பேலியாகொட – மின்முலாம்பூசுதல் நிலையம்
c) பன்னல – பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் விருத்தியாக்கல் நிலையம்
d) மாத்தறை – பொது சேவைகள் நிலையம்
e) பமுனுவ – பித்தளை பொருட்கள் சேவைகள் நிலையம்

### 4.7.2 பிரிவின் செயற்பாடுகள்

2015 ஆம் ஆண்டில் எந்திரவியல் பிரிவினால் திட்டமிடப்பட்ட செயற்பாடகுள் பின்வருமாறு

a) ஏற்கனவேயுள்ள கைத்தொழிலாளர்களுக்கும் புதிய கைத்தொழிலாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களாகுவதற்கு ஆற்றலுள்ளவர்களுக்கும் மூலப்பொருட்களையும் இயந்திரோபகரணங்களையும் தெரிவுசெய்யும் போது, திட்டமிடும் போது விருத்திசெய்யும் போது, ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தொழில்நுட்டபம் மற்றும் தொழிற்பாடு பற்றிய அறிவினை வழங்குதல்
b) பதப்படுத்தல், வார்ப்பு, உலோக முடிவாக்கல் சேவைகளை வழங்குதல்
c) சபைக்கு சிவில், மின் எந்திரவியல் துறைகளில் உள்ளக பராமரிப்பு, பழுதுபார்த்தல், மறுசீரமைப்பு மற்றும் நிருமான திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு உதவிகளை வழங்குதலும் சபையின் வாகன பராமரிப்பு தேவைகளின் போது தொழில்நுட்ப மற்றும் மேற்பார்வை ஒத்துழைப்பினை வழங்குதல்
d) கிராமிய கைத்தொழில் மற்றும் சுய தொழில் உருவாக்கத்திற்கு அமைச்சின் கருத்திட்டத்திற்காக சிவில் மற்றும் மின் எந்திரவியல் உதவிச்சேவைகளை வழங்குதல்
e) இயந்திரோபகரண மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல், வார்ப்பு வேலைப் பிரிவுக்கான ஆய்வுகூட பரிசோதனை சேவைகளை வழங்குதல் அத்துடன் பிரிவினால் உருவாக்கப்படும் இயந்திரோபகரணங்கள் மற்றும் கருவிகளின் விற்பனை இப்பிரிவினால் ஈடேற்றப்படும் ஏனைய சில சேவைகளாகும்.

f) கைத்தொழில்களுக்காக சிக்கனமானதும் பொருத்தமானதுமான இயந்திரோபகரன மாதிரிகளை தயாரித்தல்

### 4.7.3 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

**(i) கட்டணம் அறவிடப்படும் சேவைகள், மதிப்பீட்டு, வார்ப்பு வேலைகள்/மின்முலாம்பூசுதல் ஆய்வுகூட சேவைகள், கருவிகள் விற்பனை மற்றும் பல்வேறு விடயங்கள் மூலமாக கிடைத்த வருமானம்**

இப்பிரிவின் கீழுள்ள பல்வேறு பிரிவுகளினாலும் நிலையங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிவாரியான சேவைகள் மூலம் 2015 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இததரவுகள் 2015 ஆம் ஆண்டு நிறைவுறும் தினத்திற்கு ஏதுவான வகையில் சமரப்பிக்கப்ட்டுள்ளதுடன் அதற்கு வற்வரி மற்றும் தே.க.வரி உள்ளடக்கப்படவில்லை.

**அட்டவணை – 2015 ஆண்டில் ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து வெளிவாரியாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம்**

| இல | பிரிவு/பணி | வற்வரி மற்றும் தே.க.வரி தவிர்ந்த வருமானம் (ரூ) |
|---|---|---|
| 1 | எந்திரவியல் வேலைத்தளம் – தலைமைக் காரியாலயம், கடடுபெத்த | 4,228,540 |
| 2 | வார்ப்பு வேலைத்தளம் – தலைமைக் காரியாலயம் | 350,149 |
| 3 | மதிப்பீட்டு அறிக்கை – தலைமைக் காரியாலயம் | 1,073,087 |
| 5 | உ.தொ.ஆ,அ.ச, பன்னல | 4,800,111 |
| 6 | மின் மூலாம்பூசல் நிலையம் பேலியாகொட | 1,893,797 |
| 7 | பொது சேவைகள் நிலையம், மாத்தறை | 794,274 |
| 8 | பித்தளை பொருட்கள் சேவைகள் நிலையம் - பமுணுவ | 677,749 |
| | **மொத்தம்** | **13,817,707** |

### (ii) உள்ளக சேவைகள்

பல்வேறு பிரிவுகளினால் வழங்கப்பட்ட உள்ளக எந்திரயவியல் சேவைகளின் பெறுமதி ( சேவை அடிப்படையில் கிரயம்) பின்வருமாறு

| **இலக்கம்** | **பிரிவு** | **நிறைவேற்றப்பட்ட உள்வாரியான சேவைகளின் பெறுமதி (ரூ;)** |
|---|---|---|
| 1 | வேலைத்தளம் – தலைமை அலுவலகம் | 282,250 |
| 2 | வார்ப்பு வேலைத்தளம் - தலைமை அலுவலகம் | 1,071,243 |
| 3 | சிவில் எந்திரவியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 1,599,142 |
| 4 | மின் எந்திரவியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 223,813 |
| **மேற்படி பிரிவுகளுக்கான உள்ளக சேவைகளின் மொத்தம்** | | **3,176,448** |

### (iii) மதியுரை/விரிவாக்கல் சேவைகள்

**மதியுரை சேவைகள்**

2015 ஆம் ஆண்டில் கைத்தொழிலாளர்களுக்கு வடிவமைப்புகள் மற்றும் பதனிடல் பற்றிய தொழில்நுட்பம்/செயன்முறை மற்றும் ஆலோசனை வழங்கி 60 மதியுரை சேவைகள் வழங்கப்படடுள்ளன. அவற்றில் 14 உ.தொ.ஆ,அ.ச மின் முலாம்பூசும் நிலையத்திலும் 06 ATRDC இலும் மற்றும் 40 தலைமை அலுவலகலத்திலும் நடாத்தப்பட்டது.

### (iv) இயந்திரோபரணங்கள்/உபகரணங்கள்/செயன்முறை அபிவிருத்தி

2015 ஆம் ஆண்டில் பின்வரும் இயந்திரோபரண/உபகரணங்கள் விருத்தி செய்யப்பட்டன.

மொபயில் பக் மில் மற்றும் பொலித்தின் ஸ்கெரெப் பெய்லிங் மெசின் போன்ற புதிய இயந்திரோபகரணங்கள் விருத்தி செய்யப்பட்டன. போதியளவு பொறியிலாளர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற பணியாட்களும் இல்லாத காரணத்தால் தலைமை அலுவலகத்தில் புதிய உபகரணங்கள் விருத்தி செய்யப்படவில்லை.

## 4.8 தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவை நிலையங்கள்

புடவை மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் 1989 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கு அமைவாக தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் விசேட பயிற்சி பிரிவாக தாபிக்கப்பட்டது. இந்நிலையம் பயிற்சிப் பிரிவு, நூலகம் மற்றும் தகவல் கூடம், தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் அச்சுப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

முகாமைத்துவ திறன் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பற்றி நாடளாவிய ரீதியில் உள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்குதல் பயிற்சிப் பிரிவின் பிரதான பணியாகும். நூலக மற்றும் தகவல் பிரிவின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை முன்னேற்றி அவற்றை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக நூலக வசதிகள் மற்றும் கைத்தொழில் தகவல் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு சபைக்குள் வலைப்பின்னல் மற்றும் தகவல்கள் வசதிகளை வழங்கி இணையத்தளததை அபிவிருத்தி செய்தகின்றது. அச்சுப் பிரிவினால் அறிக்கைகள், கைநூல்கள், கையேடுகள் போன்றவை உள்ளிட்ட தேவையான அனைத்து ஆவணங்களையும் அச்சிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையத்தின் குறிக்கோள்கள்**

- புதிய தொழில்முயற்சி கலாசாரமொன்றை தோற்றுவித்தல்
- ஏற்கனவேயுள்ள கைத்தொழில்களை விரிவாக்குவதற்கு புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல்
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ மதியுரை)
- உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில்முயற்சி அனுபவத்தை வழங்குதல்
- காலத்திற்கு உகந்த தொழில்முயற்சி மற்றும் கைத்தொழில் துறை பற்றிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களாவதற்கு ஆற்றலுள்ள ஆட்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்
- மதியுரை சேவைகளையும் கைத்தொழில் தகவல்களையும் வழங்குதல்

**தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையத்திற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தொழில்முயற்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- ஆக்கவிளைவினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- முகாமைத்துவ திறன்களை விருத்தியாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- விழிப்புணர்வூட்டும் நிகழச்சித்திட்டங்கள்/கருத்தரங்குகளை நடாத்துதல்
- தொழில்முயற்சியாளர்களுக்கான வணிக மற்றும் வர்த்தக பயிற்சிகளை வழங்குதல்
- தொழில்முயற்சியாளர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையல்லாத மதியுரை குழுவொன்றை தாபித்தல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபையில் 5 S முறையை நடைமுறைப்படுத்துதல்
- இணையத்தள மற்றும் மின்னஞ்சல் வசதிகளை வழங்குதல்
- வெளியீடுகளை விற்பனைசெய்தல்
- நூலகப் பொருட்களின் சேகரிப்பினை அதிகரித்தல் (சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம்)
- நூலகப் பொருட்களை முறைமைக்குட்படுத்துதல்
- கைத்தொழில் தகவல்களை ஒழுங்குபடுத்துதல்
- அடிப்படை மதியுரை சேவைகளை வழங்குதல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சேவைபெறுனர்களை இணையத்தள தரவுக் களஞ்சியத்தில் பதிவுசெய்தல்
- இணையத்தள தரவுக் களஞ்சியத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட சேவைப்பெறுனர்கள் பற்றிய விபரங்களை பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குதல்
- கைத்தொழிலாளர்கள், சேவைப்பெறுனர்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊழியர்களுக்கு கைத்தொழில் தகவல்களை விநியோகித்தல்
- நூலகததிற்கு புதிதாக பெற்றுக்கொள்ளப்பட்ட நூலகப் பொருட்கள் பற்றிய தகவல்களை விநியோகித்தல்
- நூல்கள் வழியான அறிவியல் தகவல்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் பொருள் உற்பத்தியாளர்கள், அறிக்கைகள், இலங்கைத் தரங்கள், உதவி நிறுவனங்கள், சட்டங்களின் தொகுப்பு, மற்றும் “கைத்தொழில்கள்” சஞ்சிகையின் தொகுப்பு பற்றிய தரவுக் களஞ்சியமொன்றை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்துதல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயந்திரோபகரணங்கள் பற்றிய விபரங்களை வழங்குதல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபை தகவல் சஞ்சிகையை தயாரித்தல்
- கையேடுகள், பொதிகள், பொருடக்க அட்டவணைகள், மற்றும் துண்டு வெளியீடுகள் போன்ற வெளியீடுகளை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்
- வினவுதல் மற்றும் பதில் வழங்கல் சேவைகள்
- நிபுணத்துவ ஆலோசனைகளுக்கான ஆற்றுப்படுத்துதல் சேவை
- கண்காட்சி, ஒன்றியங்கள், செயலமர்வுகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்கும் நூலக திரட்டினை இற்றைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான புதிய தகவல்களை சேகரித்தல்

## 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

| **தாபன குறிக்கோள்களை அடைந்துகொள்வற்கு நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்** | **அளவுச் சுட்டிகள்** | **அடைவு** | **வருமானம் (ரூ)** |
|---|---|---|---|
| தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆக்கவிளைவு மேம்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 07 | 308,480 |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 140 | |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 160 | |
| பாடவிதான விருத்தி | பாடநெறிகளின் எண்ணிக்கை | 07 | - |
| வர்த்தக மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 08 | 753,700 |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 160 | |
| மதியுரை மற்றும் ஆலோசனை | வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை | 70 | - |
| நூலகப் பொருட்களின் திரட்சியினை விருத்திசெய்தல் | நூலகப்பொருட்களின் எண்ணிக்கை | 1,077 | |
| **தரவுத் தளத்தை பேணிவருதல்**<br><br>**இணையத்தளம் வாயிலாக பதிவுசெய்துகொண்டுள்ள சேவைப்பெறுனர்கள்**<br><br>கட்டிடப்பொருட்கள் 102<br>உணவு மற்றும் பானம் 1037<br>எண்ணெய் மற்றும் பைபர் 207<br>இராசயணப் பொருட்கள் 573<br>ஏனைய 105 | சேவைப் பெறுனர்களின் எண்ணிக்கை 31.12.2016 இல் உள்ளவாறு | 7,170 | |

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர் இயந்திரங்கள் உற்பத்தியாளர்கள் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 250 | |
| தயாரிப்பு உற்பத்தியாளர்கள் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 1,000 | |
| நூல்விளக்க தரவுகள் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 20,503 | |
| தாமரை ஸ்மார்ட் சூட் அணுகுமுறை | அறிக்கைகளின் எண்ணிக்கை | 20,465 | |
| அறிக்கைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | 5477 | |
| உதவி நிறுவனங்கள் | வெளியீடுகள் எண்ணிக்கை | 330 | |
| இலங்கை தரங்கள் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 1,325 | |
| சட்டங்கள் | அறிக்கைகளின் எண்ணிக்கை | 1,599 | |

| **தாபன குறிக்கோள்களை அடைந்துகொள்வற்கு நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்** | **அளவுச் சுட்டிகள்** | **அடைவு** | **வருமானம் (ரூ)** |
|---|---|---|---|
| **கைத்தொழில் தகவல்களை பிரச்சாரம் செய்தல்** | | | |
| மதியுரை சேவைகள் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 1,604 | 324,027 |
| வினவுதல் மற்றும் பதில் சேவைகள் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 682 | |
| கைத்தொழில் அபிவிருத்தி சபை பற்றிய பிரச்சாரத்தை வழங்குவதற்காக கையேடுகளை விநியோகித்தல் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | கையேடுகளின் எண்ணிக்கை | 4,500 | |
| **உற்பத்தி கோப்புகளை தயாரித்தல்**<br>உணவு சேர்க்கை பொருட்கள் மற்றும் உணவு பதப்படுத்தல்<br>உணவு ஒழுங்குவிதிகள்<br>புதிய பழங்கள் மற்றும் மரக்கறி பதனிடல் | தயாரிப்பு கோப்புகள் எண்ணிக்கை | 03 | |

| | | | |
|---|---|---|---|
| **வெளியீடுகளை ஆக்குதல்**<br>புதிய வருகைகள்<br>செய்தி மடல்கள்<br>நூலக வழிகாட்டல் புத்தகம்<br>ஒரு வெற்றிகரமான வியாபாரத்தை உருவாக்குவோம்<br>(සාර්ථක ව්‍යාපාරයක් ගොඩනගමු) | புதிதாக வந்தவைகளின் பட்டியல்கள்<br>செய்தி மடல்களின் எண்ணிக்கை<br>புத்தகங்களின் எண்ணிக்கை<br>வெளியீடுகளின் எண்ணிக்கை | 12<br>04<br>01<br>01 | |
| **கைத்தொழில் அபிவிருத்தி சபை இணையத்தளம் ஊடாக கைத்தொழில் தகவல்களுக்கான E - பிரச்சாரத்தை (E - Publicity மேற்கொள்ளுதல்**<br>நூலக புத்தகங்களின் உள்ளடக்க<br>பக்கங்கள் கைத்தொழில் தகவல்கள் | உள்ளடக்க பக்கங்களின் எண்ணிக்கை<br>ஆவணங்களின் எண்ணிக்கை | 317<br>13 | |
| **இணையத்தள பக்கங்களை உருவாக்குதலும் இற்றைப்படுத்துதலும்**<br>புதிய இணையத்தள பக்கங்கள்<br>இணையத்தள பக்கங்களை இற்றைப்படுத்துதல் | பக்கங்களின் எண்ணிக்கை<br>பக்கங்களின் எண்ணிக்கை | 50<br>137 | |



தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையத்தினால் மனிதவள மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்படுதல்



2015 ஆம் ஆண்டு மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற உற்பத்தித் திறன் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் புகைப்படம்



2015 ஆம் ஆண்டு மகாவலி பக்மூனவில் நடைபெற்ற கட்டிட நிர்மாண பயிற்சியின் புகைப்படம்

# 4.9 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

**பொது**

இலங்கையிலுள்ள கைத்தொழில் சமுதாயத்தின் தொழில்நுட்பத் தேவையினை நிறைவேற்றுகின்ற தொழில்நுட்ப சேவைப் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முக்கியமானதொரு பிரிவுகளில் ஒன்றாகும். தொழில்முயற்சியாளர்களுக்கு தங்களது தொழில்முயற்சியாளர்களை திட்டமிடுதல் ஊடாக தொடக்கம் முதல் நடைமுறைப்படுத்தல் வரையிலான கட்டங்களிலும் ஏற்கனவேயுள்ள தொழில்முயற்சிகளை விரிவாக்குதற்கும், நவீனமயப்படுததுவதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் தரம் மற்றும் விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவிகளை பெற்றுத்தருதல் தொழில்நுட்ப சேவைப்பிரிவின் அடிப்படை நோக்கமாகும். தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் மூலம் உணவு இரசாயணப் பொருட்கள், எண்ணெய் மற்றும் நார், கட்டிடப்பொருட்கள், கணினித் தொழில்நுட்பம் சார்ந்தாக ஐந்து துணைப் பிரவுகள் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன. தொழில்நுட்ப உதவி வழங்குதல் பிரதானமாக நன்கு திட்டமிடப்பட்ட பிரயோக பகுதியொன்றுடன் கூடிய தொழில்நுட்பத்தை வழங்கும் ஒரு நாள் செயலமர்வின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் கல்வியல் கல்லூரி ஊடாகவும் மேற்படி துறைகள் உள்வாங்கப்படும் வகையில் பல சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

**செயலாற்றுகை அடைவுகள்**

தொழில்நுட்பப் சேவைப் பிரிவினால் 2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

**(1) நடாத்தப்பட்ட கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப செய்முறை விளக்கங்கள் மற்றும் செயலரங்குகள்**

- **தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள்**

  தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணியாட்டொகுதியின் கைத்தொழில் நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்விசார் பணியாட்டொகுதியுடன் இணைந்து தொழில்நுட்ப சேவைப் பிரிவில் உணவு, இராசயணப்பொருட்டகள், எண்ணெய் மற்றும் நார், கட்டிடப் பொருட்கள் மற்றும் பெற்றொலியம் போன்ற துணைப் பிரிவுகளின் கீழ் தொழில்நுட்பத்தை வழங்கும் 115 வேலையரங்குகள் மற்றும் 39 செய்முறை விளக்கம் நடாத்தப்பட்டதுடன் மேற்படி செயலமர்வுகள் மற்றும் செய்முறை விளக்கம் ஊடாக ஒட்டுமொத்தமாக 2093 தொழில்முயற்சியாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு வழங்கி ரூ.4,519,170 பணத்தொகை ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சேவைப் பிரிவு 2015 ஆம் ஆண்டிற்குள் தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள்/செய்முறை விளக்கங்கள் ஊடாக பின்வரும் தொழில்நுட்பங்களை வழங்கியுள்ளன.

| | |
|---|---|
| **உணவு வகைகள** | |
| புதிய பழப் பானங்கள் | யோகட் |
| பழங்கள் மற்றும் மரக்கறிகளை போத்தல் மற்றும் தகரக் குவளைகளில் அடைத்தல் | யோகட் மற்றும் தயிர் |
| உடனடி பழப் பானங்கள் மற்றும் கோடியல் | மூலிகைசார்ந்த மற்றும் சுவையூட்டப்பட்ட தேநீர் |
| பப்படம் | கைகளினால் தயாரிக்கப்பட்ட சொக்லட் |
| நிலக்கடலை, பால் மற்றும் தேங்காய் டொபி<br>அச்சாறு, சட்னி மற்றும் மீன் புளிக்றி(எம்புல்தியல்) | தேங்காய் நீர் சார்ந்த உற்பத்திகள் |
| தேங்காய் பருப்பு உற்பத்திகள் | சோயா சார்ந்த உற்பத்திகள் |
| சிலி பேஸ்ட் மற்றும் மாசி சம்பல் | எள்ளு சார்ந்த உற்பத்திகள் |
| தக்காளி சோஸ் மற்றும் மிளகாய் சோஸ் | வாசனை திரவியங்கள் பதப்படுத்தல் தொழில்நுட்பம் |
| காளாண் வளர்ப்பு | பேக்கரி உற்பத்திகள் |
| டார்ட்ஸ், பெட்டீஸ் மற்றும் பேஸ்றி | பைட் மற்றும் மிக்ஷர் |
| குக்கீஸ் மற்றும் டோனட்ஸ் | ஐஸ்பெக்கட் |
| நீர்நீக்கப்பட்ட மரக்கறி உற்பத்திகள் | ஐஸ்கிறீம் மற்றும் பொப்சிகல் |
| ஜெலி கட்டிகள், ஜெலி கப், கஸ்டர்ட், மற்றும் புடிங் | உணவு பொதியிடல் மற்றும் உணவு பாதுகாப்பு |
| இஞ்சி தோசி, அல தோசி, தல தோசி, மற்றும் புகுல் தோசி | அழங்கார மீன்கள் மற்றும் ஜுஜுப்ஸ், மாஸ்மெலோஸ் மற்றும் கிஷஸ் |
| **எண்ணெய் மற்றும் நார் உற்பத்தி** | |
| சலவை சவர்க்காரம் | சுத்தமான தேங்காய் எண்ணெய் |
| ஸ்கிறீன் அச்சப்பதிப்பு | அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கடித உறைகளை தயாரித்தல் |
| தும்புத்தடி மற்றும் ஈக்கிள் | |
| **கட்டிடப்பொருட்கள் மற்றும் கணியப்பொருட்கள்** | |
| இழைக்கண்ணாடி பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் தொழில்நுட்பம் | சீமெந்து பூச்சாடி |
| சீமெந்துசார்ந்த உற்பத்திகள் | கொங்கிறிட் பாவுகற்கள் |
| சீமெந்தினால் நிலைப்படுத்தப்பட்ட களிமண் கற்கள் | நிலத்தோற்ற வடிவமைப்பு மற்றும் வீட்டுத் தோட்ட அலங்காரம் |
| **இராசயணப் பொருட்கள் பிரிவு** | |
| பற்றரி தண்ணீர், பற்றரி அமிலம்,மற்றும் ரேடியேட்டர் கூலன்ட், போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் | வாகனங்களை கழுவுவதற்கான பொருட்கள் |
| ஒட்டுப்பசைகள் | வீடுகளை சுத்தமாக்குவதற்கான பொருட்கள் |
| மெழுகுவர்த்தி மற்றும் அலங்கார மெழுகுவர்த்தி | தினர் மற்றும் டர்பன்டைன் |
| ஊதுபத்தி | |
| **கணினித் தொழில்நுட்பம்** | |
| கணினி வன்பாகம் மற்றும் வலைப்பின்னல்படுத்தல் | |

### (2) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

“சர்வதேச மகளிர் தினத்திற்கு” சமாந்தரமாக இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

(i) மக்கள் வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க 76 பங்கேற்பாளர்களுக்கு 2015 மார்ச் மாதம் 08 ஆம் திகதி இரத்மலானை மக்கள் வங்கியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

(ii) 48 பங்கேற்பாளர்களுக்கு மற்றுமொரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2015 மார்ச் மாதம் 24 ஆம் திகதி புலத்சிங்கள பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது.

### (3) பிரச்சார நிகழ்ச்சித்திட்டம்

தொழில்நுட்ப சேவைகள் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகளுக்கான நிலையத்துடன் இணைந்து சுயாதீன தொலைக்காட்சியில் 2015 மே மாதம் 27 ஆம் திகதி ஒளிப்பரப்பாகிய “நிஸ்கலங்க 7.30” எனும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்றதுடன் இந்நிகழ்ச்சியின் வாயிலாக இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்படும் சேவைகளை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

### (4)சான்றழிப்பினை பெற்றுக்கொள்வதற்கான ஒத்துழைப்பு

பின்வரும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு ISO 22000 (உணவு பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை) சான்றிதழையும் இலங்கை தரச் சான்றிதழையும் (SLS) பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப சேவைப் பிரிவின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

- பிரங்கா பிரைவேட் லிமிட்டெட், பெலியத்த (ISO 22000)
- போகொன்ஸ் கெனரிஸ், இல 10 டெம்பல் வீதி, பேருவலை - - (SLS)
- லக்மி எக்ஸ்போட்ஸ் கம்பனி பிரைவேட் லிமிட்டெட், தலாவ (ISO 22000)

### (5) உற்பத்தி அபிவிருத்தி செயற்பாடு

கைத்தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை கருத்திற் கொண்டு வாய்ப்பு வளமுடைய தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்பத்தை வழங்கும் நோக்கில் பின்வரும் உணவு உற்பத்திகள் சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- உறைப்பு பிஸ்கட்
- தக்காளி பவுடர்
- உடனடி கறி பேஸ்ட்

### (6) கணினி வன்பாக வலைப்பின்னல் முறைமையாக்கும் பாடநெறி

2015ஆம் ஆண்டில் 03 சான்றிதழ் பாடநெறிகள் கணினி வன்பாக மற்றும் வலைப்பின்ளல் உருவாக்கம் பற்றி நடாத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்ப பாடநெறிகள் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் ரூ.747,000/- ஆகும். இப்பாடநெறிக்கு பதிவுசெய்துகொண்ட 43 மாணவர்களில் 40 பேர் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்தனர்.

**தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்.**













## 4.10 தோல்பொருள் உற்பத்தி, பாதணி விருத்தி நிலையம்

இலங்கையில் தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி கைத்தொழில்துறையை விருத்திசெய்வதற்காக 1998 ஆம் ஆண்டு தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி விருத்தி நிலையம் தாபிக்கப்பட்டது. இந்நிலையம் குறுங்கால மற்றும் நீண்டகால பாடநெறிகளை நடாத்துதல், பயிற்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குதல், பொருத்தமான தொழில்நுட்ப தகவல்களை வழங்குதல் மற்றும் பாதணி உற்பத்திக்கும் தோல்பொருள் உற்பத்திக்கும் தேவையான வசதிகளை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இதன் பிரதான நிலையம் மொரட்டுவ, கட்டுபெத்தயில் அமைந்துள்ளதுடன் வாரியபொல மற்றும் வித்தாரந்தெனிய ஆகிய நகரங்களில் பிராந்தி நிலையங்களை தாபித்துள்ளது.

இந்த நிலையத்தினால வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு

- பாதணி உற்பத்தி பற்றிய தொழில்நுட்ப செயலமர்வுகளை நடாத்துதல்
- தோல்பொருள் உற்பத்தி பற்றிய தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான செயலமர்வுகளை நடாத்துதல்
- பாதணிகளை வடிவமைத்தல்
- புதிய உற்பத்தி மற்றும் உற்பத்தி விருத்தி பற்றிய புத்தாக்க கருத்துக்களையும் தகவல்களையும் வழங்குதல்
- வர்த்தக மற்றும் இயந்திரோபகரண தகவல்களை வழங்குதல்
- சீர்வெப்பப்பெட்டி வசதிகளை வழங்குதல்
- கைத்தொழில்களுக்கு பயிற்றப்பட்ட ஊழியர்களை வழங்குதல்
- பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
    - வடிவமைப்புகளை உருவாக்குதல்
    - பாதணிகளின் மேல் முடுகள்
    - லெதர் கிளிக்கிங்
    - பெண்களுக்கான பாதணி உற்பத்தி
    - ஆண்களுக்கான பாதணி உற்பத்தி
    - தோல் பொருள் உற்பத்தி

**நிலையத்தில் பின்வரும் வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.**

- தோல் வெட்டும் கருவிகள்
- பிளக்கும் கருவிகள்
- தோல் நாடாக்களை வெட்டும் கருவிகள்
- வடிவங்களை வெட்டும் கருவிகள்
- நெருக்கும் மற்றும் திரவம் தௌிக்கும் அறை
- மினுக்கும் மற்றும் முடிவாக்கம் செய்யும் கருவிகள்
- பாதணிகளின் அடித்தோலை நெருக்கும் கருவிகள்
- மீள் செயலூக்கி கருவிகள்

**நிலையத்தினால் நிறைவேற்றப்பட்ட விசேட செயற்பாடுகள்**

- தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையத்தின் இணை ஒழுங்கமைப்பாளராக இலங்கை ஏற்றுமதி சபையுடன் இணைந்து 2015 பெப்ரவரி 6 – 8 ஆகிய தினங்களில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட நான்காவது சர்வதேச பாதணி மற்றும் தோற்பொருள் கண்காட்சி 2015 ஒழுங்குசெய்தமை. இந்த கண்காட்சியின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்முயற்சியாளர்கள் உள்ளிட்டவாறு 225 வர்த்தக கூடங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கை தாபிக்கப்பட்டன. தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையத்தினால் சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான 33 கண்காட்சிக் கூடங்கள் பாதணி மற்றும் தோற்பொருள் ஆக்கப் போட்டிகள், செயலமர்வு மற்றும் கைளினாலான பாதணி உற்பத்தி பற்றிய செயல்முறை விளக்கம் உள்ளிடட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் அரங்கத்தினை நேரடியாக ஒழுங்குசெய்தது.
- கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், அம்பாறை, காலி, பதுளை, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், களுத்துறை, கம்பஹா,மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் 25 தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியுடன் 227 தொழில்முயற்சியாளர்களுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்புகளையும் சுய தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வாய்ப்பு கிட்டியது. இந்நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதன் மூலம் நிலையம் ரூ. . 2,867,499/ ஈட்டிக்கொண்டது.
- இந்த துறையினை அபிவிருத்தி செய்வதற்காக இளம் பட்டதாரிகளை இந்த துறைக்கு ஈர்த்துக் கொள்வதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- கைத்தொழில், வாணிப அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி பற்றிய தேசிய குழு, இலங்கை எற்றுமதி அபிவிருத்தி சபை (கைத்தொழில் அபிவிருத்தி சபை),தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இலங்கை தர நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு குழுக்களின் கொள்கை வகுத்தல் செயன்முறையில் பங்கேற்று பங்களிப்பினை வழங்குதல், இந்த ஆலோசனைக் குழுவினால் இலங்கை பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்கான பிரேரணைகளை சமர்ப்பித்தல்
- கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு பாதணி மாதிரிகளை தெரிவுசெய்வதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்
- மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவிற்கு பாதணித் துறையில் NVQ மட்டம் IV திருத்தம் செய்வதற்கும் பை துறைக்கு NVQ தரத்தை தயாரிப்பதற்கும் உதவுதல்
- இலங்கையிலுள்ள பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய தரவுத் தளமொன்றை பேணிவருதல். இந்த துறையின் சகல துறை பற்றியும் தகவல்கள் அடங்கிய இத்துறையின் மிகப்பாரிய தரவுத் தளம் இதுவாகும்.
- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் ஆரம்ப முதலீட்டிலுள்ள இடர்வரு நிலையை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு குறைந்த கட்டண அடிப்படையின் கீழ் தேவையான சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல்
- பல்வேறு அரச நிறுவனங்களுக்கு தேவையான பாதணி மற்றும் தோற்பொருட்கள் பெறுகைகளின் தேவைகளின் போது அவற்றின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் கலந்துகொள்ளுதல்

# நிதிக்கூற்றுக்கள்

- நிதிநிலைப் பற்றிய விவரமானக்ககூற்று
- வருமானம் பற்றிய விவரமானக் கூற்று
- உரிமைபங்கிலான மாற்றம் பற்றிய கூற்று
- காசுப்பாய்வுக் கூற்று
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் பிற விளக்கமளிப்புத் தகவல்களும்.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரபை

## நிதி நிலைக்கூற்று

**(அனைத்தும் இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளது )**

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனங்கள், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 13 | 1,297,336,805 | 1,183,148,184 |
| மூலதன வேலை-முன்னேற்றம் | | 18,321,826 | 62,230,193 |
| நிலையான வைப்புகள் | 14 | 11,129,111 | 10,536,959 |
| | | 1,326,787,742 | 1,255,915,336 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| பொருட்பதிவேடுகள்(இருப்புகள் மற்றும் நடைபெற்றுவரும்வேலை | 15 | 34,375,687 | 30,859,050 |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதியானவை (கடன்பட்டோர்) | 16 | 33,568,714 | 28,245,619 |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 17 | 47,571,314 | 39,106,477 |
| முன்கொடுப்பனவுகள் | 18 | 53,498,511 | 64,101,314 |
| விசேட கருத்திட்டத்திற்கான கொடைகள் | 19 | 36,509,324 | 26,072,964 |
| காசு மற்றும் காசுக்கு சமமாவைகள் | 20 | 84,557,954 | 46,786,787 |
| | | 290,081,503 | 235,172,211 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | **1,616,869,245** | **1,491,087,547** |
| உரிமைப்பங்குகள் மற்றும் பொறுப்புகள் | | | |
| மூலதன ஒதுக்கங்கள் | | | |
| தேறிய அரச கொடைகள் | 21 | 277,910,082 | 278,694,719 |
| முலதன ஒதுக்கங்கள் | | 6,243,013 | 6,243,013 |
| மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி | 22 | 13,447,061 | 13,447,061 |
| நிலையானசொத்துக்களின் மீள்கணிப்பு மீதான மிகை | 23 | 999,334,417 | 953,015,969 |
| ஏனைய அரச கொடைகள் | 24 | 165,498,934 | 125,933,744 |
| | | 1,462,433,506 | 1,377,334,506 |
| அரச கொடைகள் | 25 | 1,930,291,117 | 1,930,291,117 |
| ஒட்டுமொத்த நட்டம் | | (2,175,923,391) | (2,136,683,921) |
| | | (245,632,274) | (206,392,804) |
| மொத்த உரிமைப்புங்குகள் | | 1,216,801,232 | 1,170,941,702 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 26 | 155,623,529 | 100,395,508 |
| விசேட கருத்திட்டத்திற்கான கொடைகள் | 27 | 71,715,838 | 58,754,659 |
| கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள் | 28 | 32,348,955 | 51,758,331 |
| | | 259,688,322 | 210,908,498 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| அரசிற்குசெலுத்வேண்டியவைகள் | 29 | 80,114 | 69,679 |
| கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள் | 30 | 26,130,935 | 16,516,256 |
| வங்கிக் கடன் மீதி | 20 | 1,146,939 | 1,784,411 |
| ஒதுக்கீடுகளும் அட்டுறுசெலவுகளும் | 31 | 113,021,702 | 90,867,002 |
| | | 140,379,690 | 109,237,347 |
| **மொத்த உரிமைப்பங்குள் மற்றும் பொறுப்புக்கள்** | | **1,616,869,245** | **1,491,087,547** |

**பணிப்பாளர் (நிதி) - A.W.G.குருகே**

**"பக்கம் இல 05 முதல் 14வரையிலான கணக்கீட்டுக்கொளகைகளும் பக்கம் இல 15 முதல் 26 வரையிலான குறிப்புகள் இக்கூற்று முழுமைடைவதற்கு தேவையான பகுதியாகும். இந்த நிதிக்கூற்றனை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலின் பொறுப்பு பணிப்பாளர் சபையை சாரும். பணிப்பாளர் சபை இக்கூற்றனை அங்கீகரித்த்துடன் பணிப்பாளர் சபையின் சார்பில் ஒப்பமிட்டுள்ளவர்கள் பின்வருமாறு**

**மஹிந்த ஜினசேன** — **தலைவர்**

**ஷாமின் பெரேரா** — **பணிப்பாளர் சபை உறுப்பினர்**

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

## விரிவான வருமானக் கூற்று

**அனைத்து பணத் தொகையும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)**

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| விற்பனை மற்றும் சேவைகள் | 5 | **211,713,216** | **188,539,103** |
| விற்பனை மற்றும்சேவைகிரயம் | 6 | (125,953,022) | (103,502,334) |
| **மொத்த இலாபம்** | | 85,760,194 | 85,036,769 |
| ஏனைய வருமானங்கள் | 7 | **66,149,632** | **62,283,658** |
| அரச மீண்டெழும் கொடைகள் | 8 | **296,750,000** | **250,000,000** |
| நிர்வாக செலவுகள் | 9 | **(425,139,797)** | **(396,572,923)** |
| விற்பனை விநியோக செலவுகள் | 10 | **4,128,236** | **-** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளின் விளைவு** | | 27,648,266 | 747,504 |
| நிதிக் கிரயம் | 11 | **(389,155)** | **(328,192)** |
| நிகர நிதி வருமானம் / (கிரயம்) | | (389,155) | (328,192) |
| வரிசெலுத்துவதற்கு முன்னரான தேறிய இலாபம் | | 27,259,111 | 419,312 |
| **ஆண்டுக்கான இலாபம்/நட்டம்** | | **27,259,111** | **419,312** |
| **ஏனைய விவரமான வருமானங்கள்** | 12 | **(2,894,499)** | **961,019,480** |
| **ஆண்டிற்கான  முழு  மொத்த நட்டம் / வருமானம்** | | **24,364,612** | **961,438,792** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்த சபை

## உரிமைப்பங்கு மாற்றம் பற்றிய கூற்று

**அனைத்தும் இலஙகை ரூபாய்களில் குறிப்பிடப்பட்டுள்ளது .**

| | நிகர அரச கொடை | மூலதனம் மற்றும் ஒதுக்கம் | சாட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி | மீள்கணிப்பு மிகை | ஏனைய அரச கொடைகள் | அரச கொடைகள் | ஒட்டுமொத்த மிகை/பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2014 சனவரி 01 இல் மீதி** | 274,328,481 | 6,243,013 | 13,447,061 | 14,820,830 | 76,047,329 | 1,930,291,117 | (2,146,388,663) | 168,789,172 |
| முன்னைய வருடத்தின் சீராக்கம் | | | | | | | (9,826,031) | (9,826,031) |
| ஆண்டிற்கான நட்டம் | | | | | | | 419,312 | 419,312 |
| மீள்கணிப்பு மிகை | | | | 941,908,020 | | | | 941,908,020 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | | | | | | | 19,111,460 | 19,111,460 |
| அரச கொடைகள் | 35,000,000 | | | | 54,048,778 | | | 89,048,778 |
| கொடைகளை இலதாக்குதல் | (30,633,762) | | | | (4,162,367) | | | (34,796,129) |
| மீள்கணிப்பு மிகை | | | | (3,712,881) | | | | (3,712,881) |
| **2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **278,694,719** | **6,243,013** | **13,447,061** | **953,015,969** | **125,933,740** | **1,930,291,117** | **(2,136,683,923)** | **1,170,941,701** |
| **2015 சனவரி 01 இல் மீதி** | 278,694,719 | 6,243,013 | 13,447,061 | 953,015,969 | 125,933,740 | 1,930,291,117 | (2,136,683,923) | 1,170,941,701 |
| முன்னைய வருடத்தின் சீராக்கம் | - | - | - | - | (163,157) | - | (17,407,674) | (17,570,831) |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | - | 27,259,111 | 27,259,111 |
| மீள்கணிப்பு மிகை | - | - | - | 46,318,448 | - | - | - | 46,318,448 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | - | - | - | - | - | - | (49,090,907) | (49,090,907) |
| அரச கொடைகள் | 45,000,000 | - | - | - | 48,624,461 | | - | 93,624,461 |
| கொடைகளின் இலதாக்கல் | (45,784,637) | - | - | - | (8,896,113) | - | - | (54,680,750) |
| **2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **277,910,082** | **6,243,013** | **13,447,061** | **999,334,417** | **165,498,930** | **1,930,291,117** | **(2,175,923,392)** | **1,216,801,232** |

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரபை
## காசுப்பாய்வுக்கூற்று

**அனைத்து தொகைகளும் ரூபாவில**

| | | 2015 |
|---|---|---|
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | | 27,259,111 |
| **காசல்லாத வகைகளுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம் | 32,771,415 | |
| மூலதன கொடைகளுக்கான இலதாக்கல் | (54,680,750) | |
| நிரந்தர சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெற்றவை | (187,200) | |
| ஏனைய விரிவான வருமானம் | (2,894,499) | |
| இளைப்பாறுதல் நன்மைகளுக்கான கடப்பாடுகள் | 16,536,613 | |
| இனங்காணப்படாத வைப்பீடுகள் | (1,842,520) | |
| அறிவிட முடியாத மற்றும் ஐயக் கடானளிகள் | (4,128,236) | |
| முன்னைய வருடத்தின் சீராக்கம் | 112,958 | |
| | | (14,312,219) |
| | | 12,946,892 |
| செலுத்தப்பட்ட இளைப்பாறுதல் நன்மைகள் கடப்பாடு | | (10,399,498) |
| | | 2,547,393 |
| **தொழிற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்களிலிருந்து காசுப்பாய்வு** | | |
| பொருட்பதிவேட்டில் அதிகரிப்பு/வீழ்ச்சி | (3,516,637) | |
| கடனாளிகள் மற்றும் வருமாதியானவைகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி | (1,194,859) | |
| ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு/வீழ்ச்சி | (8,464,838) | |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி | 10,602,804 | |
| விசேட கருத்திட்டங்களில்அதிகரிப்பு/வீழ்ச்சி | (10,436,360) | |
| கடனாளிகள் மற்றும் அட்டுறுக் கட்டணங்களின் அதிகரிப்பு/வீழ்ச்சி | 12,370,439 | (639,451) |
| இரும்பல்லாத உலோகக் கழிவு | 8,458,614 | 4,303,513 |
| அசையா கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள் | (1,584,236) | (1,584,236) |
| காலாவதியான கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள் | (1,464,321) | (1,464,321) |
| | 34,375,687 | 30,859,050 |

| 16 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 2015 | 2014 |
|---|---|---|
| பலவின கடன்கொடுத்தோர் -தலைமை அலுவலகம் | 264,713 | 264,713 |
| பலவின கடன்கொடுத்தோர் -தோலபொருள் | 18,270 | 18,270 |
| பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல் | 604,611 | 599,611 |
| பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல் வேலைத்தளம் | 18,327,913 | 20,218,991 |
| பலவின கடன்கொடுத்தோர் -இறப்பர் பிரிவு | 1,919,979 | 1,217,201 |
| பலவின கடன்கொடுத்தோர் - A T R D C பன்னல | 2,147,128 | 1,388,715 |
| பலவின் கடன்கொடுத்தோர் - மின் மூலாம்பூசல் நிலையம் | 73,272 | 53,795 |
| பலவின கடன்கொடுத்தோர் -அச்சு | 374,061 | 374,061 |
| பலவின கடன்கொடுத்தோர் -மின் | 701,826 | 701,826 |
| பலவின கடன்கொடுத்தோர் - வார்ப்பு வேலைத்தளம் | 4,399,365 | 4,399,365 |
| பலவின கடன்கொடுத்தோர் -சிவில் | 2,155,803 | 2,155,803 |
| பலவின கடன்கொடுத்தோர் -லக்நிபயும் | 42,120 | 42,120 |
| பலவின கடன்கொடுத்தோர் -C.S.C -மாத்றை | 346,492 | 60,317 |
| பலவின கடன்கொடுத்தோர் - C.S.C. அநுராதபுரம் | 15,025 | 15,025 |
| கடனகொடுத்தோர் - மீள அனுப்பிய கசோலைகள் | 209,398 | 209,398 |
| குத்தகைதாரர் கடன்கொடுத்தோர் | 34,342,809 | 33,028,715 |
| பலவின கடன்கொடுத்தோர் | 406,707 | 406,707 |
| | 66,349,491 | 65,154,632 |
| கழிக்க: அறிவிட முடியா | (32,780,778) | (36,909,013) |
| | **33,568,714** | **28,245,619** |

## கைத்தொழில் அபிவிருத்தி சபை

### நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| 17 | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 2015 | 2014 |
|---|---|---|---|
| | பண்டிகை முற்பணம் | 376,600 | 617,300 |
| | மோட்டார்சைக்கிள் கடன் | 803,735 | 1,261,046 |
| | துவிச்சக்கர வண்டிக் கண்டி | 225,254 | 281,104 |
| | இடர் கடன் | 38,759,161 | 37,739,859 |
| | கழிக்க - தாமத பணியாட்டொகுதி கிரயம் | (37,226,305) | (37,226,305) |
| | விசேட முற்பணப் புத்தகம் | 12,700 | 11,900 |
| | ஏனைய திணைக்களங்களிலிருந்து வருமதியானவை | 454,978 | 421,933 |
| | தேர்தல் ஆணையாளரிடமிருந்து வருமதியானவை | (54,446) | - |
| | தணை ஒப்பந்த பரிமாற்றம் | 837,418 | 837,418 |
| | சில்ப 2004 கண்காட்சி | 1,456,826 | 1,227,381 |
| | பிடித்துவைத்தல் வரி | 1,679,828 | 1,679,834 |
| | பண்டங்கள்,சேவைகள் வரி ( G S T ) | 1,424,654 | 1,424,654 |
| | வருமதியான வற்வரி | 25,476,691 | 16,843,917 |
| | ஹம்பாந்தோட்டை கிராமத்திலிருந்து வருமதியானைவ | - | 2,020,949 |
| | உலோகமல்லாத - வற்வரி | 10,741,854 | 10,741,854 |
| | தெ தொங்கல் கணக்கு | - | 6,524 |
| | கித் கித்துள் - சநதைப்படுத்தல் | 281,675 | 281,675 |
| | உ( உலோகமல்லாத கட்டுப்பாட்டுக் கணக்கு | 742,661 | 742,661 |
| | லக் லக்கம் கடன்கொடுத்தோர் | 1,407,159 | 21,902 |
| | பெ பொருளாதார சேவைக் கட்டணம் | 170,872 | 170,872 |
| | | 47,571,314 | 39,106,477 |

| 18 | வைப்பீடுகளும் முற்கொடுப்பனவுகளும் | 2015 | 2014 |
|---|---|---|---|
| | காப்பு வைப்பீடுகள் | 229,428 | 218,267 |
| | முனகொடுப்பனவுகள் | 19,211,842 | 29,991,070 |
| | முன்கொடுப்பனவு இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகள் | (7,226,319) | (7,226,319) |
| | முன்கொடுப்பனவுகள் முற்பணம் - (தலைமை அலுவலகம்) | 192,206 | 192,206 |
| | பணியாட்டொகுதிக்கான முற்பணம் - தலைமை அலுவலகம் | 1,203,306 | 1,024,062 |
| | முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள் | (560,073) | (560,073) |
| | பணியாளர்களுக்கான எரிபொருள் முற்பணம் - தலைமை அலுவலகப் | 261,882 | 269,862 |
| | முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள் | (235,612) | (235,612) |
| | பிரயாண முற்கொடுப்பணவு | - | 6,000 |
| | வருமதியாகவுள்ள ஏனைய வைப்புகள் | 3,004,926 | 3,004,926 |
| | முன்கூட்டி செலுத்தப்பட்ட பணியாட்களுக்கான கிரயம் | 37,226,305 | 37,226,305 |
| | பிரயாண முற்கொடுப்பனவு (வெளிநாட்டு) | 190,620 | 190,620 |
| | | **53,498,511** | **64,101,314** |

| 19 | விடேச கருத்திட்டங்களுக்கான கொடைகள் | 2015 | 2014 |
|---|---|---|---|
| | சேவை நிலையம் மற்றும் கையிருப்புகளை விநியோகித்தல் | 15,540,765 | 11,097,019 |
| | கெஸ்பர கருத்திட்டம் - அமைச்சு | 16,872,541 | 10,898,904 |
| | திவிநெகும கருத்திட்டம் =குடிசைக்கைத்தொழலில் | 4,096,018 | 4,077,042 |
| | **விசேட கருத்திட்டங்களுக்கான செலவுகள்** | 36,509,324 | 26,072,964 |

# கைத்தொழில் அபிவிருத்தி சபை

## நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| 20 | காசு மற்றும் வங்கி மீதிகள் | | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| கணக்குக் குறியீடுகள் | | கணக்கு எண். | | |
| | வங்கிக் கணக்கு - லக்நிபயும் -பொலனறுவை | | 11,605 | 11,605 |
| 185065 | திவநெகும கருத்திட்ட | 71889197 | (24,863) | 7,379 |
| 185200 | நடைமுறைக் கணக்கு -- IRDP | 00022667-9 | 2,076 | 2,076 |
| 185080 | நடைமுறைக் கணக்கு - துணை ஒப்பந் | 683133 | 2,015,143 | 42,050 |
| 185040 | நடைமுறைக் கணக்கு- இடர் கடன் | 683218 | 596,657 | 2,393,125 |
| 185010 | நடைமுறைக் கணக்கு - காணி -மொரட | 682974 | 2,112,336 | (1,784,411) |
| 185110 | நடைமுறைக் கணக்கு - பேலியகொட- | 4064199 | 4,349,059 | 3,080,995 |
| 185020 | நடைமுறைக் கணக்கு - மூலதன கொ | 683231 | (1,122,076) | 3,971,481 |
| 185030 | வங்கி மீதி - எத்திரவியல் பிரிவு | 683144 | 5,638,052 | 2,463,635 |
| 185050 | வங்கி மீதி - REAP | 1118722801 | 15,697 | 15,697 |
| 185180 | வங்கி மீதி - கிராம அபிவிருத்தி கருத்த் | 4204245 | 218,749 | 2,252,445 |
| 185070 | வங்கி மீதி - உலோகம் அல்லாத | 682519 | 20,069,523 | 5,259,165 |
| 185060 | வங்கி மீதி - பிராந்திய பிரிவு (கித்துள்) | 683237 | 1,490,134 | 522,915 |
| 185412 | BOC - "காணி" கழிவுப்பொருட்கள் சே | 7271240 | 179,891 | 172,849 |
| 185090 | நடைமுறைக் கணக்கு - மக்கள் வங்கி | 100153657035 | 10,000 | 10,000 |
| 185415 | நடைமுறைக் கணக்கு - லக்கம் விற்பன | 7153282 | 487,938 | 813,052 |
| 185015 | நடைமுறைக் கணக்கு | 70034730 | 609,643 | 1,023,359 |
| 185125 | மாவட்ட அலுவலகம் | 74791255 | 1,195,770 | 1,911,023 |
| 185413 | சேமிப்புக் கணக்கு - CESS நிதியம் | 9123868 | 11,528,630 | 11,114,909 |
| 185025 | சேமிப்புக் கணக்கு - | 71648764 | 29,178,407 | 3,265,242 |
| 185135 | சேமிப்புக் கணக்கு -ே | 71582414 | 4,771,419 | 8,351,060 |
| | முற்பணம் கணக்கு | | 15,524 | 42,117 |
| | விசேட முற்பணம் - காசாளர் | | 23,379 | 23,379 |
| | வழியிடைப் பணம் | | 25,783 | 24,690 |
| | வழியிடைப் பணம் -உலோக கழிவு கருத்திட்டம் | | 12,540 | 12,540 |
| | | | 83,411,015 | 45,002,376 |
| | **வரவு மீதி** | | 84,557,954 | 46,786,787 |
| | **கடன் மீதி** | | (1,146,939) | (1,784,411) |
| | **காசு மற்றும் காசுக்கு சம்மாவைகள்** | | 83,411,015 | 45,002,376 |

| 21 | தேறிய அரச பங்களிப்புகள் | 2015 | 2014 |
|---|---|---|---|
| | 2015 சனவரி 1ஆம் திகதியில் | 278,694,719 | 243,694,719 |
| | 2015 ஆம் ஆண்டில் | 45,000,000 | 35,000,000 |
| | மூலதன கொடை மாற்றம் | (45,784,637) | - |
| | | 277,910,082 | 278,694,719 |

| 22 | மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி | 2015 | 2014 |
|---|---|---|---|
| | 1969 இற்கு முன்னர் கை.அ.ச | 4,403,441 | 4,403,441 |
| | கைத்தொழில் பேட்டை கூட்டுத்தாபனம் | 9,043,620 | 9,043,620 |
| | | **13,447,061** | **13,447,061** |

| 23 | நிரந்த்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு மிகை | 2015 | 2014 |
|---|---|---|---|
| | மு/கொ மீதி | 953,138,009 | (8,003,511) |
| | மீள்மதிப்பீட்டு மிகை | 46,196,408 | 961,019,480 |
| | | **999,334,417** | **953,015,969** |

## கைத்தொழில் அபிவிருத்தி சபை

### நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| 24 ஏனைய அரச கொடைகள் | 2015 | 2014 |
|---|---|---|
| U N D P இல் இருந்து கிடைத்த கொடைகள் | - | 1,010,000 |
| பக்மில் (களி இயந்திரம்)கொடைகள் | 29,250 | 58,500 |
| செஸ் வரி | 10,500,000 | 10,500,000 |
| Sirap நிதியம் - கட்டிடங்கள் | 26,236,185 | 27,232,449 |
| Srap நிதியம் - இயந்திதொகுதி | - | 458,850 |
| அமைச்சு நிதியம் அச்சுவேலி | 16,932,430 | 17,407,084 |
| அமைச்சு நிதியம் கைத்தொழில் பேட்டை | 101,801,068 | 59,266,860 |
| உலோகம் அல்லாத | 10,000,000 | 10,000,000 |
| | 165,498,934 | 125,933,744 |

| 25 ஏனைய அரச கொடைகள் | 2015 | 2014 |
|---|---|---|
| மீதி | 1,930,291,117 | 1,930,291,117 |
| திரண்ட நட்டம் | (2,136,683,921) | 2,146,388,663 |
| சீராக்கங்கள் | (17,407,674) | (9,826,030) |
| முன்கொண்டுசெல்லப்பட்ட பற்றாக்குறை | (21,831,796) | 19,530,771 |
| திரண்ட நட்டங்கள் | (2,175,923,391) | (2,136,683,921) |
| | (245,632,274) | (206,392,804) |

### 26 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

நிதிநிலைக் கூற்றில் இனங்காணப்பட்டபெறுமதிகள்பின்வருமாறு தீர்மானிக்கப்படும் :

| | 2015 | 2014 |
|---|---|---|
| நிதியளிக்கப்படாத கடப்பாடுகளின் நடப்புபெறுமதி | 155,623,529 | 100,395,508 |
| **நிதிநிலைக்கூற்றின் பொறுப்பு** | **155,623,529** | **100,395,508** |

ஆண்டில் விளக்கமளிக்கப்படாத கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறு:

| | 2015 | 2014 |
|---|---|---|
| சனவரி 01 ஆம் திகதியில் | 100,395,508 | 115,063,782 |
| நடப்பு சேவைக் கிரயம் | 9,896,983 | 6,627,285 |
| வட்டிக் கிரயம் | 6,639,630 | 6,950,372 |
| சேவைக்கு பின்னரான நன்மை கடப்பாடு மீது ஆயுட்கால நட்டம்/(இ | 49,090,907 | (19,111,460) |
| | 166,023,028 | 109,529,980 |
| செலுத்தப்பட்ட நனமைகள் | (10,399,498) | (9,134,472) |
| **மார்ச்சு 31 ஆம் திகதியில்** | 155,623,529 | 100,395,508 |

பயன்படுத்தப்பட்ட முதன்மை ஆயுட்கால எடுகோல்கள் பின்வருமாறு

| | 2015 | 2014 |
|---|---|---|
| கழிவு விகிதம் | | |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு | 5% | 5% |
| பணியாளர்களின் பரள்வு விகிதம் | 7% | 7% |
| ஓய்வபெறும் வயது | 60 | 60 |

| 27 விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள் | 2015 | 2014 |
|---|---|---|
| சுனாமி | 1,540,899 | 1,540,899 |
| கிராம அபிவிருத்தி கருத்திட்டம் | 52,800,966 | 49,260,118 |
| கித்துள் விருத்தி கருத்திட்டம் | 10,536,151 | 1,253,682 |
| அமைச்சு நிதியம் திவநெகும | 6,699,960 | 6,699,960 |
| இஞ்சி கொள்வனவு - யாழ்ப்பாணம் | 137,863 | - |
| | 71,715,838 | 58,754,659 |

# கைத்தொழில் அபிவிருத்தி சபை

## நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| 28 | சபைகளுக்குக்கும் கூட்டுத்தாபனங்களுக்குமான நிலுவைகள் | | | |
| | ஊ.சே.நி செலுத்தப்படவேண்டிய நிலுவை | | 32,348,955 | 51,758,331 |
| | | | 32,348,955 | 51,758,331 |

| | | | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| 29 | அரசாங்கத்திற்கு செலுத்தப்படவேண்டிய | | | |
| | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | | 28,879 | 28,879.00 |
| | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் முத்திரைக் கட்டணம் | | 51,235 | 40,800.00 |
| | | | **80,114** | **69,679.00** |

| | | | 2015 | 2014 |
|---|---|---|---|---|
| 30 | சபைகள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவேண்டிய | | | |
| | இலஙகை மத்திய வங்கி ஊசே.நி | | 3,138,778 | 3,218,069 |
| | ஊ.ந.பொ நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிஓ | 19,409,376 | | |
| | முன்கூட்டியே செலுத்தப்பட்ட 2 தவணைக் கட்டன | (3,234,896) | 16,174,480 | 6,469,792 |
| | ஊ.ந.பொ நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை | | 6,389,567 | 6,389,567 |
| | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | | 428,110 | 438,828 |
| | சபைகள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவே | | 26,130,935 | 16,516,256 |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| 31 | வியாபார, ஏனைய கடனகொடுத்தோர்,ஒதுக்கம் மற்றும் அட்டுறுசெலவினங்கள் | | |
| | லுனுவில தொழில்பேட்டை வைப்பீடு | 1,458,835 | 1,458,835 |
| | ஊழியர் நனகொடை | 8,695 | 8,695 |
| | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2% | 3,165,169 | 1,640,769 |
| | பணியாளர்களிடமிருந்து கழித்வைகள் -செலுத்தக்கூடிய | (1,203) | 178,527 |
| | ஈட்டும்போது செலுத்தவேண்டிவைகள் | 79,307 | 25,778 |
| | பலவின கடன்கொடுத்தோர் | 3,072,949 | 3,072,949 |
| | பலவின கடன்கொடுத்தோர் -தலைமைக் காரியாலயம் | 6,762,741 | 6,162,741 |
| | பலவின கடன்கொடுத்தோர் -உலோகமல்லாத | 641,048 | 2,948,762 |
| | இடைநிறுத்தப்பட்டுள்ள வைப்பீடுகள் | 1,113,704 | - |
| | செலுத்தப்பவேண்டிய சம்பளங்கள் | 1,991 | 1,991 |
| | லக்நிபயும் சநதைப்படுத்தல், கணகாட்சி நிலையம் | 92,398 | 74,898 |
| | வேலைகள் அடிப்படையிலான முற்பணம் | 1,863,108 | 4,817,455 |
| | மீளச்செலுத்தப்படவேண்டிய கேள்விப்பத்திர வைப்பீடு | 937,239 | 937,239 |
| | காப்பு வைப்பீடு | 229,428 | 218,267 |
| | மீளச்செலுத்தப்பவேண்டிய வைப்பீடு | 42,123,248 | 33,858,338 |
| | பௌத்த சங்கம் கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,230 | 4,140 |
| | நனோம்பகை கட்டுப்பாட்டு கணக்கு | 36,510 | 36,510 |
| | சிக்கனச் சங்க கட்டுப்பாட்டுக் கணக்கு | 61,061 | 44,639 |
| | ஏனைய திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு | 2,379 | 2,354 |
| | செலுத்தப்பவேண்டிய கட்டுப்பாட்டுக் கணக்கு -தலைமை அலுவலகம | 4,529 | 4,529 |
| | காப்புறுதி கட்டுப்பாட்டுக் கணக்கு | 994,798 | 709,462 |
| | வாடிக்கையாளர்களுக்கு மிகையாக செலுத்தல் | 2,077,120 | 627,948 |
| | மருத்துவ திட்டம் | 608,491 | 2,368,791 |
| | தொழில் பிணக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | 4,406,389 | 4,406,389 |
| | துணை ஒப்பந்த விவசாய உபகரணங்கள் | 2,421,515 | 2,583,297 |
| | அட்டுறுசெலவினங்கள் | 38,925,438 | 24,673,699 |
| | லக்கம் கடனாளிகள் | 1,930,587 | - |
| | | **113,021,702** | **90,867,002** |

# சபையின் கருத்துரைகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } ஐஎம்யூ/ஏ/ஐடீபீ/1/15/எவ்ஏ
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2017 ஒக்தோபர் 16

Chairman's Office
13 DEC 2017
Industrial Development Board of Ceylon

தலைவர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 மார்ச் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01

நியமத்தின் 29 மற்றும் 15 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தீர்மானம் எடுக்கும் போது பொருண்மையாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் வேறு வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 67,595,691 பெறுமதியான சபையின் மற்றும் காணிகளை மேம்படுத்தல்களின் பெறுமதி ஒன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 577,667 தொகையான வருடாந்த பெறுமானத் தேய்வு காணிகளின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16

நியமத்தின் 36 ஆம் பிரிவிற்கமைய ஏதேனுமொரு சொத்து தொகுதியொன்றின் மீள்மதிப்பீடு இடம்பெறுமாயின் அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் போது சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 40 மோட்டார் வாகனங்களிடேயே 25 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் மீள்மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20

நியமத்தின் 24 முதல் 29 ஆம் பிரிவுகளுக்கமைய செயற்படாது 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 36,509,323 தொகையான விசேட செயற்திட்டங்களுக்கான அரச மானியம், நடைமுறைச் சொத்துக்களின் கீழும் அந் திகதியில் உள்ளபடியாக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 71,715,838 தொகையான மொத்த அரச மானியங்கள் நடைமுறையல்லா பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 36

பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2.5 மில்லியன் பெறுமதியான நடமாடும் தொழில்நுட்ப சேவைகள் பேரூந்து தொடர்பில் நியமத்தின் பிரகாரம் நட்டக் கழிவிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37

மெதுவாக அசையும் மற்றும் காலங்கடந்த இருப்பிற்கான ஒதுக்கீடுகள் ரூபா 3,048,557 தொகை நியமத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் எதுவிதமான மீளாய்விற்கும் உட்படுத்தப்படாது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம், இயந்திர உபகரணங்கள், நானாவித சொத்துக்கள் மற்றும் கணனி போன்ற சொத்துக்களின் தொகுதிகளினுள் முறையே அந்த தொகுதிகளுக்குரித்தற்ற ரூபா 2,703,783 கூட்டுப்பெறுமதியான ஏனைய சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், பெறுமானத்தேய்வு விகிதம் ஒன்றுக்கொன்று வேறுபட்டமையின் காரணத்தால் அந்த சொத்துக்களின் தேறிய பெறுமதி சரியானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் பேணிச்செல்லப்படும் 03 வங்கிக் கணக்குகளுக்குரியதான வங்கி இணக்கக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இனங்காணப்படாத வைப்பு மீதிகள் ரூபா 2,300,062 தொகையாக இருந்ததுடன், இந்த மீதிகளை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைத்தொழில் குடியேற்றப் பிரிவிலிருந்து வழங்கிய அறிக்கைகளின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கைத்தொழில் குடியேற்றங்களின் கைத்தொழிலாளர்களிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் அத்திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை மீதிகளுக்கிடைய ரூபா 13,473,162 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 6,232,030 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நிதி நிலைமைக்கூற்றின் இறுதி இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்த 14 இருப்பு உருப்படிகளுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை இருப்பு மதிப்பாய்வு அறிக்கையுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 522,972 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம், உடைந்த இரும்புகளை சேகரித்து விற்பனை செய்யும் செயற்திட்டத்தின் இருப்பு பெறுமதி ரூபா 8,458,614 ஆக இருந்த போதிலும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு அறிக்கைகளின் பிரகாரம், அந்த பெறுமதி ரூபா 2,746,359 ஆக இருந்தமையால் ரூபா 5,712,255 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உடைந்த இரும்பு இருப்பின் பெறுமதி ரூபா 78,105,492 ஆக இருந்த போதிலும், அதற்குரிய பட்டோலையின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 67,397,042 ஆகும்.

(உ) மீளாய்வாண்டிற்காக சபையினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் தொடர்பில் நிதி பிரிவின் வருமான அறிக்கைகள் மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்த சபையின் ஒவ்வொரு பிரிவுகளினதும் அறிக்கைகளிடையே ரூபா 5,582,169 கூட்டுத்தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தொங்கல் கணக்கின் மீதி ரூபா 1,113,704 ஆன மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 374,027 தொகையான மீதி 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சேவை வருமானத்தினுள் உள்ளடங்கியிருந்த ரூபா 4,047,845 தொகையான உள்ளக விற்பனை வருமானத்தினை சான்றுபடுத்தவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபையின் சொத்துக்களுக்கான மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆதன மதிப்பீடானது தொடர்புடைய தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பட்டோலைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அந்த சொத்துக்களின் தொகுதியின் கீழ் வழங்கப்பட்ட தொழில்சார் மதிப்பீடு போன்ற தகவல்கள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த லக்கம் கடன்பட்டோர் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,407,159 தொகையான அசாதாரணமான வரவு மீதி மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,930,587 தொகையான செலவு மீதி தொடர்பில் போதியளவான தெளிவுபடுத்தல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 8,765,537 தொகையான பதவியணியினர் கடன் மற்றும் முற்பணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த மீதிக்கு எதிராக

நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், ஏனைய நடைமுறை சொத்துக்களின் கீழ் பல வருடங்களாக தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 15,597,281 கூட்டுத்தொகையான விளைவற்ற மீதியினை சரியாக இனங்கண்டு அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து ரூபா 2,443,961 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அதற்குரிய பட்டோலைகளுடன் பொது பேரேட்டில் உள்ளடக்கப்பட்ட எண்ணிக்கையை காலரீதியாக இணக்கம் செய்யாமையின் காரணத்தால் இந்நிலைமை உருவாகியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 27,259,111 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 419,312 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 26,839,799 ஆன முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் மானியங்கள் ரூபா 46,750,000 இனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளிலான அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினுள் கடந்த நான்கு வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 6,757,459 தொகையாக இருந்த பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 84,728,727 வரை அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது 419,312 தொகையான மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கியதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் நிறுவனத்தின் பங்களிப்பு சாதகமான பெறுமதியொன்றினைக் கொண்டிருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் போது அது ரூபா 239,876,864 ஆக இருந்தது. எனினும், 2012 ஆம் ஆண்டின் போது அது ரூபா 224,882,033 வரை குறைவடைந்திருந்த போதிலும், அதன் பின்னரான வருடங்களில் தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 376,186,473 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கங்கள் கைத்தொழிலை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆக இருந்ததுடன், 19 கைத்தொழில் பேட்டைகள் மற்றும் 25 பிரதேச அலுவலகங்களும் உள்ளடங்கலான பொறியியல் தொழில்நுட்ப சேவைகள், சந்தைப்படுத்தல், இறப்பர் அபிவிருத்தி மற்றும் தோல் பொருட்களின் அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கும் சபையின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானத்தில் 49 சதவீதமான பிரதிநிதித்துவம் உடைந்த இரும்பினை சேகரித்து விற்பனை செய்யும் செயற்திட்டத்தின் பணிகளிலிருந்து கிடைத்திருந்ததுடன், சபையினால் பேணிச் செல்லப்படும் வாஸ்துப் பிரிவு, வேலைத்தளம், சேவை நிலையம் மற்றும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து 14 சதவீதமான குறைவான பங்களிப்பே வருமானத்திற்கு கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றும் பிரிவுகளின் செயலாற்றல் விளைவற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கைத்தொழில் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப சேவைகள் பிரிவு 08 பிரதான பணிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அந்த பிரிவினால் மீளாய்வாண்டினுள் தொழில்நுட்பம் தொடர்பில் அறிவூட்டும் 05 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தமையால் கைத்தொழில் தொழில்நுட்ப அறிவினை பரிமாறிக்கொள்ளல் செயன்முன்னேற்றம் மந்தமான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டினுள் இறப்பர் அபிவிருத்தி பிரிவினால் 14 பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், புதிய முயற்சிகளை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காக கொண்ட தரமான உற்பத்திகளை மேம்படுத்தல் தொடர்பிலான முன்னுரிமை செயற்பாடுகள் மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பொறியியல் பிரிவின் செயற்திறன் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொறியியல் பிரிவினால் பேணிச்செல்லப்படும் வேலைத்தளத்தின் மூலம் புதிய நிர்மாணங்களை உருவாக்குதல் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் எந்தவிதமான புதிய நிர்மாணமும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடந்த 3 வருட காலப்பகுதியினுள் கைத்தொழிலாளர்களுக்கு 02 புதிய நிர்மாணங்களை மாத்திரம் அறிமுகப்படுத்துவதன் மூலம் வேலைத்தளத்தினை தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றல் செயன்முன்னேற்றம் மந்தமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பன்னலையில் அமைந்துள்ள யோக்கிதை சான்றுபடுத்தல் நிலையத்தினால் வெளிவாரி வருமானங்களை உருவாக்குவதற்கான 229 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 68 பணிகள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் சபையின் வாஸ்து பிரிவினால் 100 பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் 10 பணிகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) இலங்கையினுள் வாஸ்து பணிகள் தொடர்பான தொழில்நுட்ப உபகரணங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 18,643,306 பெறுமதியான இயந்திரம் 1996 ஆம் ஆண்டின் போது யப்பான் அரசின் உதவியொன்றாக சபைக்கு கிடைத்திருந்த போதிலும், குறித்த இயந்திரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு சபையின் பொறியியல் பிரிவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கைத்தொழில் தகவல்களை வெளிநபர்களுடன் பறிமாற்றிக்கொள்வதற்கு சபையின் திட்டமிடல் பிரிவு மீளாய்வாண்டினுள் கைத்தொழில் புள்ளிவிபர கணிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அவ்வாறானதொரு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மொரட்டுவ கட்டுபெத்தையில் அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிராததுடன், நீண்ட காலமாக பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் பாதீட்டின் பிரகாரம், மூலதன செலவினத்திற்காக நிதியேற்பாடு ரூபா 45,000,000 ஆக இருந்ததுடன், அந்த பணத்தை ஆண்டினுள் பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் பெறுகை நடவடிக்கைகள் காலரீதியில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மூலதன செலவினத்திற்கான நிதியேற்பாட்டில் ரூபா 19,280,501 தொகை மீண்டெழும் செலவினமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 6,500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டத்தில் குறிப்பிடப்படாத 08 நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 2, 784,253 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) உடைந்த இரும்பு விநியோகஸ்தருக்கு மொத்த பெறுமதியும் முற்பணமாக முதல் சந்தர்ப்பத்திலேயே செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த உடைந்த இரும்பு பொருட்கள் குறிப்பானதொரு கால எல்லையினுள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொருள் விநியோகமின்றி ரூபா 3,249,428 தொகை வழங்குநரிடம் கையிருப்பில் காணப்பட்டது.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபையினால் ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவை உரிய முறையில் கணிப்பிடப்பட்டு அனுப்பப்படாமையின் காரணத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 39,965,665 தொகையான தண்டப்பணத்தை செலுத்த நேர்ந்திருந்தது.

### 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 18,643,856 கிரயமான ஸ்பெக்ரோ மீட்டர் ஹேர்ஸ் 5500 எனும் பெயருடைய உபகரணம் 2012 ஆம் ஆண்டு முதல் செயலற்ற நிலையில் பொறியியல் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் பதவியணி 714 பதவிகளை கொண்டுள்ளதுடன், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 227 பதவி வெற்றிடங்கள் நிலவியது. சபையின் தலைமை முகாமையாளர் பதவியான 02 பணிப்பாளர் நாயகம் பதவிகள், 04 பணிப்பாளர் பதவிகள், 15 உதவிப் பிரதி பணிப்பாளர் பதவிகள் மற்றும் 30 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. மேலும், வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகள் 94 அங்கீகரிக்கப்பட்டுள்ள போது அவற்றுள் 86 பதவிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. எவ்வாறெனினும், மேற்படி பதவிகளை நிரப்பாது மின்சார பொறியியலாளர், பதவிநிலை செயலாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் மதியுரையாளர் பதவிகளுக்காக 09 நபர்கள் பணிக் கையளிப்பு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவர்களின் படிகளாக ரூபா 430,000 படி மாதாந்தம் செலவிடப்பட்டிருந்தது. இதற்கிடையில் மதியுரையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் ஆர்சேர்ப்பு நடைமுறையி0ல் உள்ளடக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் பணிகளை மக்கள் மயப்படுத்துவதற்காக முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நாடெங்கிலும் இணைப்பு செய்தல் தேவையான விடயமொன்றான போதிலும், கிளிநொச்சி, நுவரெலியா, பொலன்னறுவை மாவட்ட அலுவலகங்களுக்காக ஆகக் குறைந்தது ஒரு முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தராவது இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், மாத்தறை மாவட்ட அலுவலகத்தின் 05 முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பதிலாக 06 பேர் இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும், சபையின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி பிரிவு மற்றும் காலி, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட அலுவலகங்களில் முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தேவையான எண்ணிக்கையை விஞ்சி இணைப்பு செய்யப்பட்டிருந்ததுடன், கிளிநொச்சி, மன்னார் மற்றும் கேகாலை மாவட்ட அலுவலகங்களுக்கு ஒரு உத்தியோகத்தரேனும் இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மோசடி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சபையின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மந்தமாக இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம்,

துப்பாக்கி குண்டுகளின் பின்கவசம் மோசடியுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் ஒருவர் 2010 செப்தம்பர் 09 ஆந் திகதி முதலும், தொழில்நுட்ப பிரிவின் நிதி மோசடியில் தொடர்புடைய உத்தியோகத்தர் ஒருவர் 2014 திசெம்பர் 19 ஆந் திகதி முதலாகவும், மட்டக்களப்பு நீர்ப்பாசன அலுவலகத்தில் உடைந்த இரும்பினை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடையதாக குற்றஞ் சாட்டப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி முதலாகவும் பணி வறிதாக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் சபை அதிகாரச்சட்டத்தின் 17 (அ) பந்திக்கு முரணாக 2015 பெப்ரவரி 15 ஆந் திகதிய 116/ஏபீடீ/ஐடீபீ ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வணிக மற்றும் கைத்தொழில் அலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்ச்சியாக காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 22 ஆந் திகதியும் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 செப்தம்பர் 13 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 09 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் ஊக்குவிப்பு படியினை பெற்றுக்கொள்வதற்காக நிறைவேற்ற வேண்டிய முன் நிபந்தனையொன்றான போதிலும், மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 4,042,375 தொகையான ஊக்குவிப்பு படிகள் சபையின் பதவியணிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 5.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்குரிய பெறுகைகள் திட்டத்தினுள் சபையின் பிரிவுகளுக்கான மூலதன தேவைப்பாடுகள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் ஒவ்வொரு பிரிவினாலும் வருடாந்த பாதீடுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், சபைக்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், வருடாந்த அறிக்கை குறித்த ஆண்டு முடிவடைந்து 10 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கி இணக்கக்கூற்றுக்கள் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாமை. |

(ii) காசு வைப்பு மற்றும் பற்றுச்சீட்டுக்களை விநியோகித்தல் ஆகியவற்றுக்கிடையேயான திகதிகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய அளவிலான காலவீச்சொன்று காணப்படுகின்றமை.

(iii) குறிப்பானதொரு வழங்குநரிடமிருந்து ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மீதிகளை இனங்காணக்கூடிய வகையில் கணக்கு முறைமை பேணப்பட்டிராமை மற்றும் இந்த கணக்கு கட்டமைப்பினுள் உள்ளடக்கப்படும் தரவுகள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படாமை.

(iv) பல்வேறு பிரிவுகளின் நிதி கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஆவணங்கள் கணக்குகள் பிரிவிற்கு செயற்திறனாக சேகரிக்கபப்படாமை.

(ஆ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

(i) சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்படாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கை இடம்பெறாமை.

(ii) வளப் பங்களிப்பாளர்களை தெரிவு செய்யும் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று இல்லாதிருந்தமை.

(iii) நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய பாதீட்டு மதிப்பீடுகளை தயாரிக்காமை.

(இ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

(i) சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமை.

(ii) குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்தமை.

(iii) தொழில்நுட்ப பேட்டைகளில் சபையினால் குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கிய கைத்தொழில்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ලංකා කාර්මික සංවර්ධන මණ්ඩලය
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
INDUSTRIAL DEVELOPMENT BOARD OF CEYLON
කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு MINISTRY OF INDUSTRY AND COMMERCE
615, ගාලු පාර, කටුබැද්ද, මොරටුව, ශ්‍රී ලංකා.
615, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவ, இலங்கை.
615, Galle Road, Katubedda, Moratuwa, Sri Lanka.
Tel : +94-11-2605394,2624846-7,2605326-7
Fax : +94-11-2607002
E-mail : info@idb.gov.lk Web : www.idb.gov.lk

**<u>இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (C) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக உங்கள் கணக்காய்வு ஐயவினா இலக்கம் 2.2.8 தொடக்கம் அறிக்கைக்கு ஏதுவான முழுமையான பதிலை தயவுடன் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

**<u>2.2.8 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இசைந்தொழுகாமை.</u>**

1) இது சம்பந்தமாக விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக 2016.03.08 ஆம் திகதியிடப்பட்டதாக நான் உங்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் தயவுடன் சமர்ப்பிக்கின்றேன். (இணைப்பு 01)
2) திரு. என் சிக்கந்தர் அவர்களுக்கு அவர் வழங்கும் சேவைக்கு சபையினால் செலுத்தப்படவேண்டிய மாதாந்த கொடுப்பனவாகவே மாதாந்தம் ரூ.40,000 வீதம் செலுத்தப்பட்டுள்ளது.
3. நிதிப்பிரமாணம் 115 இற்கு முரணாக செலுத்தப்பட்டுள்ள மாதிரி பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட ரூ.528,405 இற்கு ஏதுவான விபரமான தகவல்கள் (உதாரணம் ஒவ்வொரு செலவுறுதிச் சீட்டு இலக்கம் மற்றும் பணத்தொகை) வழங்கப்படுமாயின் நன்று. அவ்வாறு கிடைத்த பின்னர் ஆராய்ந்தறிந்து காரணங்களை அறிக்கையிட முடியும்,
4) நிறுவனத்தின் செயலாற்றுகை 2015 ஆம் ஆண்டில் தெளிவான வளர்ச்சியை காட்டியிருந்ததால் ஊழியர்களின் வருடாந்த ஊக்க ஊதியத்தை (போனஸ்) டிசெம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபையின் பத்திரமொன்றின் ஊடாக செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டது. வருடாந்த கணக்குக் கூற்றுக்களை உரிய முறையில் தயாரித்து ஏப்பிறல் மாதம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதெனினும், விரிவான முறையில் ஆராய்ந்து அங்கீகாரம் வழங்க வேண்டுமென்பதால் அதற்கான அங்கீகாரத்தை வழங்கும் விடயம் அடுத்த பணிப்பாளர் சபை கூட்டம் வரையில் ஒத்திவைக்கப்பட்டது. பணிப்பாளர் அங்கீகாரம் கிடைத்த உடனேயே இறுதிக் கணக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

1) நிதிப் பெறுபேறு, ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்தல் மற்றும் மீண்டெழும் கொடைகள் சம்பந்தமாக உங்களின் அவதானிப்புகள் அனைத்தும் சரியானதே. எவ்வாறாயினும், கடந்த வருடத்தின் மிகை ரூ. 419,312, 2015 ஆம் ஆண்டாகும் போது ரூ.60,140,257 வரை அதிகரித்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய வருமானாக 2014 ஆம் ஆண்டு ஈட்டிக்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டு மிகை,(Revaluation surplus) ரூ.941.9 2015 ஆம் ஆண்டு ரூ. மில்லியன் 46 வரை குறைவடைந்தமை இதற்கு பிரதான காரணமாகும், இந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் மூலமானது எல்லா வருடத்திற்கும் ஏதுவானதல்ல. இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல் சபையின் பிரதான நோக்கமாக அமைவதுடன் அதற்கு அரச கொடைகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியலான நிதிசார் மீளாய்வு

நடைமுறை வீதம் மற்றும் உடனடி வீதம் 2015 ஆம் ஆண்டில் திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் தொடரப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்.

09 வழக்குகளுக்கு ஏதுவான நிதிசார் பெறுமதி எவ்வளவென கணிப்பிட இயலாததால் எதிர்பாரா பொறுப்புக்களுக்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2015 ஆண்டின் திருத்தப்பட்டவாறான இறுதிக் கணக்கின் ஊடாக அது சம்பந்தமான விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

(அ) இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதன் அடிப்படை நோக்கமாக நாம் கருதியது யாதெனில் களுத்துறை மாவட்டத்திற்கு புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சுய தொழில்களை ஆரம்பிப்பதற்கும் சந்தைப்படுத்தல் வாய்ப்புடன் கூடியதொரு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு தொழில்நுட்பத்தை வழங்குவதும் ஆகும். தற்காலத்தில் அனைத்து வீடுகளிலும் பெரும்பாலும் இரண்டிற்கும் மேற்பட்ட செல்லிடத் தொலைபேசிகள் இருப்பதுடன் பெரும்பாலானவர்கள் தற்போது ஒரு செல்லிடத் தொலைபேசி அல்லது அதற்கு மேற்பட்டதொரு எண்ணிக்கையை பயன்படுத்துகின்றனர், இத்தொலைபேசிகளில் ஏற்படும் கோளாறுகளை இனங்கண்டுகொள்வது எப்படி என்பதை செல்லிடத் தொலைபேசியை பயன்படுத்தும் அனைவருக்கும் தெரிந்திருக்க வாய்பில்லை என்பதுடன் அதற்கு விசேட பயற்சி பெற்ற ஆட்களின் உதவியினை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்கு செய்யும் போது நாங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில்

- ❖ செல்லிடத் தொலைபேசிகளை திருத்துபவர்கள் பெரும்பாலும் பிரதான நகரங்களில் மாத்திரம் காணக்கிடைத்தல்
- ❖ இதன் காரணமாக பாவனையாளர்களுக்கு உரிய நேரத்தில் தங்களுடைய செல்லிடத் தொலைபேசிகளை திருத்திக் கொள்வதற்கு இயலாமை
- ❖ உரிய கட்டண அமைப்பொன்று காணப்படாமை
- ❖ இதற்கென்றே நகரத்திற்கு செல்ல வேண்டியிருத்தல்

இதன் காரணமாக நகரத்திற்கு வெளியே இக்கைத்தொழிலுக்கான சிறந்ததொரு சந்தைவாய்ப்பு இருக்கின்றதென தெளிவாகியதால் இந்நிகழ்ச்சித்திட்டம் மாவடத்திற்கு மிகவும் பிரயோசனமானதென இனங்காணப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் எமது சபையின் ஒரு நோக்கமாக அமைந்த விடயம் யாதெனில் சுயதொழிலை ஆரம்பித்தலாகும். அதற்கேற்ப நிகழ்ச்சித்திட்டத்திற்கு 35 பேர் கலந்துகொண்டதுடன் அதில் 11 பேர் சுயதொழில்களை ஆரம்பித்துள்ளனர். இதில் ஒருவர் சிறு கைத்தொழிலாக மற்றுமொருவருக்கு தொழில்வாய்ப்பு வழங்கி ஆரம்பித்துள்ளார்.

இதன் வாயிலாக 12 தொழில் வாய்ப்புகள் உருவாகியது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறுகளை ஒரு வருடத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்த இயலாதென்பதுடன் தொழில்நுட்ப கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் மின்னியல் தொழில்நுட்ப பாடநெறியை கற்கும் மாணவர்களுக்கு இந்த அறிவு வழங்கப்படுவதால் எதிர்காலத்தில் பல வருடங்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கிடைப்பதுடன் அதன் ஊடாக உருவாகும் தொழில் வாய்ப்புகள் நாட்டின் தொழில் நிலைக்கு பங்களிப்பு வழங்கும் என்பதால் இது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக கிடைக்கும் பொருளாதார நன்மையென சுட்டிக்காட்ட முடியும்.

மாதிரி பரிசோதனையின் போது 95% வீதமானவர்கள் இக்கைத்தொழிலில் ஈடுபடுவதில்லை என குறிப்பிடப்பட்டாலும் 11 பேர் இக்கைத்தொழிலில் ஈடுபடுகின்றார்களென ஆராய்ந்ததின் மூலம் அறியக்கிடைத்தது. பயிற்சிபெறுனர்கள் எமக்கு இதைப் பற்றி எழுத்துமூலமாக அறியத்தந்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட கடிதங்களை சமர்ப்பிக்க முடியும்,

இதன் படி சபையினதும் நிரல் அமைச்சினதும் நோக்கங்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பங்கமொன்று நிகழவில்லையென குறிப்பிட விரும்புகின்றேன்.

1. இப்பயிற்சியின் மூலம் மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படும் செல்லிடத் தொலைபேசிகளை திருத்தும் பணிகளை விரிவாக்கும் விடயம் குறிப்பாக களுத்துறை மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களை கவனத்திற் கொள்ளும் போது இவ்வாறான செல்லிடத் தொலைபேசிகளை பழுதுபார்க்கும் பணிகள் நகரத்திற்கு மாத்திரம் மட்டுப்பட்டிருத்தல், கிராமிய பிரதேசங்களில் பழுதடையும் தொலைபேசிகளை நகரங்களுக்கே கொண்டு வந்து மீண்டும் பழுத்துபார்த்துக் கொள்வதற்கு பதிலாக கிராமத்திலேயே உருவாகும் சுயதொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குதல், குறைந்த செலவில் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டுதல், சுய

தொழிலில் ஈடுபடுபவர்களின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆற்றல் கிட்டுதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதன் நோக்கமாகும்.

2. பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குவதன் மூலம் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்
3. தொழில்நுட்ப கல்லூரிகளில் மின்னணு தொழில்நுட்பத்தை கற்கும் மாணவர்களுக்கு தேவையான செல்லிடத் தொலைபேசிகளை பழுதுபார்க்கும் தொழில்நுட்பத்தை அங்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குபவர்களுக்கு வழங்குதல்
4. நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்கள் ஊடாக 20 சுய தொழில்களை தோற்றுவித்துக் கொள்வதன் மூலம் 20 தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்
5. பிரதேச ரீதியாக காணப்படும் செல்லிடத் தொலைபேசி பழுதுபார்க்கும் நிலையங்களின் பற்றாக்குறையை இயன்றளவு குறைப்பதற்கு தேவையான பயிற்றப்பட்ட ஊழியர்களை உருவாக்குதல்
6. குருநாகல், அம்பாறை மற்றும் காலி மாவட்டங்களில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு தேவையான பயிற்றப்பட்ட ஊழியத்தை வழங்குதல்

(ஆ) 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் நோக்கம் இலங்கையிலுள்ள கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதாகும். கைத்தொழில்களை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல், கைத்தொழிலாளர்களுக்கிடையிலான தொடர்புகள் போன்ற சட்டத்தின் நோக்கங்கள் (இ.02) ஆக இணைத்து தயவுடன் சமர்ப்பிக்கின்றேன். சபை இலாபம் ஈட்ட வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையென்பதுடன் சேவை வழங்குவதே பிரதான நோக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) சேவைகள் வழங்குவதற்கு மேலதிகமாக கைத்தொழிலாளர்களுக்கு இரும்பு மூலப்பொருட்களை வழங்குவதற்கு இடைநின்று செயற்படுதல் இப்பிரிவின் பிரதான பணியாக காணப்படுவதுடன் இதன் மூலம் இலாபமும் ஈட்டிக்கொள்ளப்படுகின்றது.

(ஈ) உற்பத்திகளை மேற்கொள்வதற்கு கொள்வனவுக் கோரிக்கை கிடைக்க வேண்டுமென்பதுடன் கொள்வனவுக்கான கோரிக்கை குறைந்தமையும் 2015 ஆம் ஆண்டில் Non-Faros வருமானம் உயர்ந்தமையும் நீங்கள் சுட்டிக்காட்டும் விகிதம் குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

(உ) 2015 ஆம் ஆண்டு கைத்தொழில் பேட்டைகளின் வருமானத்தின் ஒப்பீட்டளவான பங்களிப்பு 26% முதல் 22% வரை குறைவடைந்தாலும் வருமானம் ரூ. மில்லியன் 48.780 முதல் ரூ. மில்லியன் 2.110 வரை அதிகரித்துள்ளது. அட்டுறு அடிப்படையில் கணக்குகள் பேணப்படுகின்றன.

இவ்வாறு ஒப்பீட்டளவிலான பங்களிப்பு குறைவடைவதற்கு காரணம் அவ்வருடத்தில் கழிவுகளின் விற்பனை அதிகரித்தமையாகும்.

(ஊ) பொறியியல் பிரிவின் கீழுள்ள வார்ப்பு பிரிவின் ஆவணங்களின் பிரகாரம் வார்ப்பு பிரிவின் வருமானம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2014 ஆம் ஆண்டு | ரூ. 540,454.66 |
| 2015 ஆம் ஆண்டு | ரூ. 1,219,011.20 |
| 2016 ஆம் ஆண்டு | ரூ. 6,961,186.25 |

தயவுசெய்து வார்ப்பு பிரிவு பேணிவரும் கொள்வனவுக் கோரிக்கைகள் மற்றும் வருமானங்கள் பற்றிய ஆவணத்தை பார்க்கவும்.

(எ) இரும்பினை கொள்வனவு செய்து வியாபாரமாக அதனை அதிகபட்ச விலைக்கு விற்பனை செய்து இலாபத்தை ஈட்டிக் கொண்டிருந்த கொள்வனவாளர்களை கள ஆய்வின் மூலம் இனங்கண்டு இரும்பு சார்ந்த கைத்தொழிலை உண்மையாகவே மேற்கொள்ளுகின்ற கைத்தொழிலாளர்களுக்கு மாத்திரம் கிடைக்கச் செய்தமையினால் இந்நிலை தோன்றியுள்ளது.

(ஏ) கைத்தொழில் பேட்டைப் பிரிவுக்கெள 2015 ஆண்டின் செயல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரு. 6,710,000/- பணத்தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 05 நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கவில்லையனெ தயவுடன் அறியத்தருகின்றேன்.

### (ஐ) பிரதேச அபிவிருத்திப் பிரிவு

### 4.1 ஏ 1

பிரதேச அபிவிருத்தி பிரிவுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற மூலதனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தொழில்நுட்பம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் இலாப நோக்கில் திட்டமிடப்படவில்லையாயினும் செலவில் 50 வீதத்தை ஈட்டும் நோக்கில் தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஆயினும், பிரதேச நிகழ்ச்சித்திட்டங்களின் இயல்பின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்தின் செலவின் 30% - 60% அளவு வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சில மாவட்டங்களில் எவ்வித் பணத்தொகையும் அறவிடப்படாமல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. உதா – திருகோணமலை, கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்கள் வருடாந்தம் ஒதுக்கப்பட்ட மூலதனத் தொகையை அவ்வாறு செலவிட்டாலும் வெளித்தரப்புகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியத்திலிருந்து நடாத்தப்படுகின்ற தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ஓரளவிற்கு இலாபத்தை ஈட்டிக்கொள்ளுதல் இடம்பெறுகின்றது.

புத்தளம், பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு போன்ற சில மாவட்டங்கள் வெளித் தரப்புகளின் நிதியத்தைப் பெற்றுக்கொண்டு மேற்கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

காரணமாக நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்ச்சித்திட்டங்களை நடாத்த வேண்டியுள்ளது. மேலும், தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்தீட்டங்களில் பங்கேற்ற எண்ணிக்கையும் எதிர்பார்த்த எண்ணிக்கையை விஞ்சியுள்ளதால் தனிநபர் செலவினம் குறைவடைந்துள்ளது.

எந்தவொரு நிகழ்ச்சித்திட்டத்தையும் நடாத்தும் போது அதற்கு பங்கேற்க வேண்டிய ஆகக்கூடிய எண்ணிக்கை 25 – 30 இற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதே துறைசார் நிபுணர்களின் கருத்தாக அமைகின்றது. ஆகவே, நிகழ்ச்சித்திட்டமொன்றிற்கு 20 பேரை எதிர்பார்த்துள்ளபோது அதில் 25 பேர் கலந்துகொள்வார்களாயின் அதன் மூலம் அந்நிகழ்ச்சித்திட்டத்தின் தரம் பாதிக்கப்படாது. எதிர்பார்த்த வருமான மட்டம் அதிகரிப்பதற்கான பிரதான காரணம் எதிர்பார்த்த அளவினை விட வெளிவாரியான தரப்புகளிலிருந்து நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைத்த வேண்டுகோள்கள் அதிகரிகத்தமையினால் கிடைத்த வருமானம் ஆகும்,

**உதாரணம் :-** (முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம்)

| | <u>வருமான இலக்கு</u> | <u>உண்மை வருமானம்</u> |
|---|---|---|
| முல்லைத்தீவு மாவட்டம் | ரூ.150,000.00 | ரூ.1,374,100.00 |
| புத்தளம் மாவட்டம் | ரூ .200,000.00 | ரூ.1,216,467.00 |
| அம்பாறை மாவட்டம் | ரூ.150,000.00 | ரூ. 564,982.00 |
| பொலனறுவை மாவட்டம் | ரூ..175,000.00 | ரூ..1,129,610.00 |

மீளாய்வுக்குட்படுத்துப்படும் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரு. 4,375,000.00 ஆகும். கிடைத்துள்ள வருமானம் ரூ. 8,909,191.00 ஆகும்.

மேலும் வெளிவாரித் தரப்புகளிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்படுகின்ற பயற்சி நிகழ்சசித்திட்டங்களின் போதும் பயிற்சி பெறுனர்களிடமிருந்து எவ்வித பணத்தொகையும் எந்தவொரு பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அறவிடப்படவில்லை. அது நிகழ்ச்சித்திட்டப் செலவினத்தில் பெரும்பாலும் 30% - 60% இடைப்பட்ட தொகையாக இருந்தது. அதுவும் வருமானம் உயர்வடைவதற்கு காரணமாக அமைந்தது.

**4.1 எ.2**

இந்த முன்று செயற்பாடுகளிலும் எவ்வித முன்னேற்றத்தையும் ஈட்டிக்கொள்ளவில்லையென கணக்காய்வு வினவுதல்களில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அதன் மூலம் பெற்றக்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு.

| | எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ. | உண்மை வருமானம் ரூ. | % |
|---|---|---|---|
| 5. கருத்திட்ட அறிக்கை /சாத்தியவள ஆய்வு | 1,300,000.00 | 615,698.00 | 47 |
| 6. மதிப்பீட்டு அறிக்கை | 625,000.00 | 124,233.00 | 20 |
| 9. தீர்ப்பு ஆய்வுகள் | 1,700,000.00 | 28,475.00 | 0.02 |
| **மொத்தம்** | **3,625,000.00** | **768,406.00** | **21** |

சிரமமானதாக இருப்பினும் எதிர்காலத்தில் யதார்த்த நிலைக்கு அண்மிக்கக்கூடியவாறு மதிப்பீடுகளை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆலோசனை பெற்றுத்தருவேன்.

**4.1.ஏ.3**

கழிவுப்பொருட்கள் கருத்திட்டத்திற்கான மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது கழிவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் செலவும் அதன் மூலம் கிடைக்கும் வருமானமும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் அறிக்கையிடும் போது கழிவுப்பொருட்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுமையாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் செலவினை அறிக்கையிடும் போது கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அதற்கு செலவிடப்பட்ட தொகையை அறிக்கையிடாமல் மேற்படி கழிவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்குச் சென்ற உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவு, எரிபொருள் செலவு, மேலதிக நேரக் கொடுப்பனவு ஆகியவை மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ளது. உதாரணமாக மூன்று மாவட்டங்களில் கழிவுப் பொருட்கள் விற்பனையின் வருமானம் மற்றும் செலவு விபரங்கள் பின்வருமாறு.

**காலி மாவட்டம்**

| | மதிப்பீட்டுத் தொகை | உண்மை அளவு |
|---|---|---|
| கழிவுத் தொகை | 40 MTS | 60 MTS |
| செலவு ரூ. | 880,000.00 | 10,500.00 |
| வருமானம் ரூ.. | 1,200,000.00 | 872,587.00 |

**கம்பஹா மாவட்டம்**

| | மதிப்பீட்டுத் தொகை | உண்மை அளவு |
|---|---|---|
| கழிவுத் தொகை | 40 MTS | 60 MTS |
| செலவு ரூ. | 880,000.00 | 99,000.00 |
| வருமானம் ரூ.. | 1,200,000.00 | 4,466,711.00 |

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

| | மதிப்பீட்டுத் தொகை | உண்மை அளவு |
|---|---|---|
| கழிவுத் தொகை | 40 MTS | 1 MTS |
| செலவு ரூ. | 880,000.00 | 500.00 |
| வருமானம் ரூ.. | 1,200,000.00 | 21,575.00 |

எதிர்வரும் காலத்தில் கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்யும் செலவு மற்றும் அதனைச் சார்ந்த நேரடி செலவுகளை உள்ளடக்கி முன்னேற்ற அறிக்கைகளை தயாரிக்குமாறு பிரதேச அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்குவேன்.

### 4.1 ஏ (1) தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

4 (ஏ) (1) 2015 ஆம் ஆண்டிற்குள் தொழில்நுட்பத்தை பற்றி விழிப்புணர்வு வழங்குவதற்கான 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

(அ) சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் வேண்டுகோளுக்கு அமைவாக 67 பங்கேற்பாளர்களுக்கு 2015 மார்ச் 08 ஆம் திகதி இரத்மலானையில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

(ஆ) 2015 மார்ச் மாதம் 24 ஆம் திகதி 48 பங்குபற்றுனர்களுக்கு புலத்சிங்கள பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

(இ) கேகாலை மாவட்ட அலுவலகத்தில் 36 பங்குபற்றுனர்களுக்கு 2015 பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

(ஈ) கித்துல வருண கண்காட்சி 2015 ஏப்பிறல் மாதம் 03 ஆம் 05 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

(உ) தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவுடன் இணைந்து 2015 மே மாதம் 27 ஆம் திகதி சுயாதீன தொலைக்காட்டசி சேவையில் ஒரு மணித்தியால விழிப்புனர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

இதற்கேற்ப 2015 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட பிரிவு மூலம் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படவில்லையென காணப்படும் குறிப்பு அவ்வாறில்லையென திருத்தப்படுதல் வேண்டும்.

தற்போதுள்ள கைத்தொழில்களை தற்போதைய நிலையிலிருந்து உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வருடத்தில் போதியளவு தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் இருக்கவில்லை. இவ்வருடத்தில் இப்பிரிவில் உணவுப் பிரிவின் தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் மூவரும் கட்டிடப் பொருட்கள் மற்றும் கணியப் பிரிவுக்கு ஒரு மேம்பாட்டு உத்தியோகத்தரும் மாத்திரமே இருந்தனர். இராசயணப் பிரிவுக்கும் எண்ணெய் மற்றும் நார் பிரிவுக்கும் எந்தவொரு தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளரும் இருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக உதவிப் பணிப்பாளர்கள் எவரும் இருக்கவில்லை. இரசாயன உதவி உத்தியோகத்தர்கள் 04 பேர் இருக்க வேண்டுமெனினும் ஒருவரும் இருக்கவில்லை. இரசாயன உதவியாளர் ஒருவர் மாத்திரமே இருந்தார். இவ்வாறான நிலைமையின் கீழ் அன்றாட கடமைகளை கொண்டு நடாத்துதல் கூட மிகவும் சிரமத்துடனேயே மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக கள கடமைகளும் உள்ளிட்டவாறான இச்செயற்பாட்டினை மேற்கொள்ளுதல் இவ்வருடத்தில் இயலாதிருந்தது.

4.1 ஏ (2)

மதியுரை சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் அத்துடன் தரம் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல் போன்ற செயற்பாடுகளின் முன்னேற்றம் குறைவடைந்ததும் போதியளவு தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் பிரிவில் இல்லாதிருந்ததன் விளைவாகவே நிகழ்ந்தது. செயல்திட்டதிற்கேற்ப தேவையான முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்காக பிரிவில் தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் 08 பேர் இருக்கவேண்டுமாயினும் 2015 ஆம் ஆண்டு 04 தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் மாத்திரமே இருந்தனர். ஆளணி பற்றாக்குறை காரணமாக நாம் பெற்றுக்கொண்ட முன்னேற்றத்திலும் குறைபாடு இருந்தது.

(3) சம்பந்தப்படட முன்னேற்ற அறிக்கைகளில் வருமானம் மற்றும் செலவினங்கள் காட்டடப்பட்டுள்ளன.

(4) சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் சேகரிக்கப்படுகின்ற மொத்த வருமானம் பிரிவின் முன்னேற்ற அறிக்கைகளில் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது.

(5) எதிர்வரும் காலத்தில் இந்நிலையை தடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1 ஒ

**தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவு**

2015 ஆம் ஆண்டு மூலதன செலவினத்தின் கீழ் ரூ.1,000,000/- பணத்தொகை Business Health Certificate நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த பணத்தொகை மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் அளவுகோள்களை தயாரித்தல், கள ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் 2015 ஆம் ஆண்டு இறுதியில் அதன் தொடக்க நிகழ்வுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் ( Business Health Certification ) சான்றளிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய முன்தேவைகளாக இருப்பதால் சான்றளித்தல் 2015 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், இப்பணிகளை பின்னர் பிரதேச அபிவிருத்தி பிரிவுக்கு சாட்டப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளும் தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. தற்போது சான்றிதழ் வழங்கும் பொருட்டு கைத்தொழிலாளர்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

4.1 ஓ

**இறப்பர் அபிவிருத்தி நிலையம்**

அச்சந்தர்ப்பத்தில் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு தேவையான மனித வளங்களில் நிலவிய பற்றாக்குறை இதன் மீது தாக்கம் விளைவித்துள்ளது. பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் ஆகிய அனைத்து பதவிகளும் வெற்றிடமாக இருந்துள்ளன.

4.1 க

**பொறியியல் பிரிவு**

1) புதிய படைப்புகளை உருவாக்குவதற்கு திட்டமிடல் பொறியிலாளர் பதவி மற்றும் பயிற்றப்பட்டப் பணியாளர்களின் பற்றாக்குறை தாக்கம் விளைவித்துள்ளது. சபையில் காணப்படும் சம்பள திட்டங்களுக்கு ஏதுவான வகையில் ஆட்சேர்ப்பு செய்வதில் பிரச்சினைகள் உள்ளதால் அதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென தயவுடன் அறியத்தருகின்றேன்.

2) இதற்கு மேற்படி காரணம் தாக்கம் செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் தம்வசம் இருந்த வளங்களை பயன்படுத்திக் கொண்டு எவ்வித கட்டண அறவீடுகளுமின்றி ஆலோசனை பெறுவதற்காக வருகை தருகின்ற அனைத்து கைத்தொழிலாளர்களுக்கும் தேவையான ஆலோசனை வழங்கப்படுகின்றதென பொறுப்புடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

3) உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டமை மேற்படி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் 30% வீதத்தை மாத்திரம் அடைந்துகொள்வதற்கு காரணமாக அமைந்ததுடன் கிரயம் உயர்வடைவதற்கான காரணம் உத்தியோத்தர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையினால் ஊழியக் கிரயம் உயர்வடைந்தமையும் சந்தையில் மூலப்பொருட்களின் விலை உயர்வடைந்தமையும் ஆகும். கிடைக்கப்பெற்ற பொருட்கள் கொள்வனவு கோரிக்கைகள் ஒரே அளவில் அமையாதிருப்பதுடன் அது விகிதமாக கணிப்பிடுதல் சரியானதல்ல.

$$\left( \frac{\text{மொத்த கிரயம்}}{\text{செயற்பாடுகள்}} \times \text{மொத்த கிரயம்} \right)$$

4) சொத்துக்களின் பெறுமானம் ரூ. 25 மில்லியனாக இருந்ததுடன் திட்டமிடப்பட்ட 100 செயற்பாடுகளில் நிறைவேற்றிக் கொண்ட 10 செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ.5 மில்லியனாகும். ஈட்டிக்கொண்ட வருமானம் ரூ.350,149/- என காட்டப்பட்டுள்ளமை சரியானதென்பதில்லை என்பதுடன் வார்ப்புப் பிரிவின் முன்னேற்ற அறிக்கை குறிப்புகளின் பிரகாரம் ரூ.1.21 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

5) கொள்வனவுக்கான கோரிக்கைகள் குறைவடைந்தமை மற்றும் 1) இல் காட்டப்பட்டுள்ளவாறு பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறையும் இதற்கு தாக்கம் விளைவித்துள்ளது. சபையின் பணிகளை ஈடேற்றிக் கொள்ளும் போது செலுத்தப்படவேண்டிய பணத்தொகையிலும் பார்க்க குறைந்த விலைக்கு மற்றைய இடங்களில் மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டியமையும் இந்நிலைக்கு காரணமாக அமைந்துள்ளது. செலவுப் பத்திரங்களை மீளாய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

6) பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறை இதற்கு காரணமாக அமைந்துள்ளது. நிலையத்தின் வருமானத்திற்கும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் வருமானத்திற்கும் இடையில் வருமானத்தில் வித்தியாசம் ஏற்படுவதற்கு காரணம் செலவுறுதிச் சீட்டுக்குட்படுத்துதல், பணத்தொகை கிடைத்தல், கணக்கிடுதல் போன்ற வலைப்பின்னலின் செயற்பாடுகளுக்கு செலவாகும் காலம் போன்றவையென அறியத்தருகின்றேன்.

## (க) திட்டமிடல் பிரிவு

1) இந்த இலக்கு வைக்கப்பட்ட விடயத்தை திட்டமிடும் போது பிரதிப் பணிப்பாளர்கள் இருவர் உள்ளிட்ட மேலும் மூன்று உத்தியோகத்தர்கள் இக்கடமைப் பணிகளில் ஈடுபட்டிருந்தனரெனினும் 2015 முதல் காலாண்டிற்குள் மேற்படி இப்பிரதிப் பணிப்பாளர்கள் இருவரும் சேவையிலிருந்து இராஜினாமா செய்தமையினால் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாததால் இப்பணியினை அடைந்துகொள்ள முடியவில்லை.

2) வெளித்தரப்புகளின் வேண்டுகோளின் படி இவ்வாறான புள்ளிவிபரவியல் ரீதியிலான தரவுகளை விநியோகித்தல் பொதுவானதொரு விடயமாகும். மேலும், சம்பந்தப்பட்ட இலக்குகளை நிர்ணயிக்கும் போது சுமார் 02 வருட கால செயலாற்றுகை கவனத்திற் கொள்ளப்படுகின்றது. இதன்படி 2015 ஆம் ஆண்டிற்கான 10 இலக்குகள் திட்டமிடப்பட்டாலும் இரண்டு வெளிவாரியான வேண்டுகோள்களுக்கு மாத்திரம் மட்டுப்படத்தப்பட்டதனால் உரிய இலக்கினை அடைந்துகொள்வதற்கு இயலாமல் உள்ளது.

3) 2015 ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் பற்றிய அறிக்கையை தயாரித்தல் (Preparing Progress Monitoring & evaluation report) மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தை தயாரித்தல் (Action Plan - 2016) ஆகியவற்றில் மாத்திரம் 100% வீதமான செயலாற்றுகை அடையப்பட்டுள்ளது. இதன்படி இப்பணிகள் எமது நோக்கத்திற்குட்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு நேரடியாக தாக்கம் விளைவிக்காததால் கால வரம்புகளைப் பற்றி கவனம் செலுத்துல் தக்கரீதியானதல்ல. ஆயினும் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் கால வரம்புகளை கவனத்திற்கொள்ளும் போது அது போதுமானதாக அமையவில்லை.

## ஐ) சந்தைப்படுத்தல் பிரிவு

1) சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகையை இனங்காண்பதற்கு ஆண்டுக்கான இலக்குகள் மற்றும் அவ்விலக்குகளை நிறைவேற்றிக் கொண்ட விதம் ஆகியவற்றை காட்டும் அறிக்கை திட்டமிடல் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)
2) 2015 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் கழிவுப் பொருட்கள் கருத்திட்டம் பற்றி பின்வருமாறு இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| துணை செயற்பாடுகள் | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI) | ஆண்டிற்கான இலக்கு |
|---|---|---|
| மூலப்பொருட்களை சலுகை விலையில் பெற்றுக்கொள்ளுதல் | புதிய பதிவுகளின் எண்ணிக்கை | 250 |
| | சேகரிக்கப்பட்ட (பொருட்கள்) மெ.தொ அளவு | 1000 |
| | விநியோகிக்கப்பட்ட மெ.தொ அளவு | 1000 |
| | கழிவுப்பொருட்கள் விநியோகிக்கப்பட்ட கைத்தொழிலாளர்கள் | 750 |

3) மூலதன பாதீட்டில் ரூ.20 மில்லியன் SMIDEX கண்காட்சிக்காகவும் மிகச் சிறந்த தொழில்முயற்சியாளரை தெரிவுசெய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பணத்தொகை மூலதன பாதீட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்படாமல் வேறு மூலங்களின் ஊடாக ஈட்டிக் கொள்ள வேண்மென கருதப்பட்டதால் சபையின் மூலதன பாதீட்டிற்குள் உள்ளடங்கவில்லை.

**முகாமைத்துவ வினைத்திறனின்மை**

1) சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் நிகழ்ந்துள்ள காலக்கட்டத்தில் நிரந்தரமான நிர்வாக பணிப்பாளரொருவர் நிறுவனத்தில் இல்லாதிருந்ததுடன் சபையின் சட்ட உத்தியோகத்தர் அவரின் நிரந்தரமான பதவியின் கடமைப் பணிகளுக்கு மேலதிகமாக பதில்கடமையாற்றும் நிர்வாக மற்றும் மனித வள பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். சம்பந்தப்பட்ட காலக்கட்டத்தில் நிரந்தரமான, அனுபவமிக்க நிர்வாக மற்றும் மனித வள பணிப்பாளரொருவர் இல்லாதிருந்தமை காரணமாக சம்பந்தப்பட்ட பணிகளை திட்டமிட்டு செயற்படுத்துவதற்க இயலாமல் போனதுடன் தற்போது தவறவிடப்பட்டுள்ள பணிகள் ஒழுங்குமுறையாகவும் துரிதமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

**2) இப்பணத்தொக பின்வருமாறு அமைந்துள்ளது.**

i. துணை ஒப்பந்த பரிமாற்றங்கள் (**Sub Contract Exchange**) எனும் பெயரில் பேணப்படும் கணக்கு மீதி ரூ.837, 418/- பற்று மீதியாக 2007 ஆம் ஆண்டு முதல் காணப்படும் மீதியாகும். இது சந்தைப்படுத்தல் பிரிவின் துணை ஒப்பந்த செலுத்தல்களை கணக்குப் பதிவிடும் போது தீர்க்கப்படாததொரு மீதியாகும்.

ii. ஆற்றல் விருத்தி (**Capacity Building**) ஆக 2015.12.31 ஆம் திகதியல் காணப்படும் ரூ.1, 679,828/- மீதி பிரதேச அபிவிருத்தி பிரவினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மூலதனக் கணக்கினால் உறப்பட்ட செலவுகளென இனங்காணப்பட்டுள்ளது. இதன்படி இது உணவுக்கான செலவாக கணக்கு பதியப்பட்டுள்ளது.

iii. பிடித்துவைத்தல் வரி(Withholding tax) எனும் பெயரில் காணப்படும் ரூ.1, 424,654/- பற்று மீதி பிடித்து வைக்கும் வரியாக குறிப்பிடப்பட்டாலும் அது 2010 ஆம் ஆண்டில் பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக செலுத்தப்பட்டதொரு தொகையாகும். இது உணவுச செலவாக கருதப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iv. இரும்பல்லாதவைகளுக்கான வற்வரி (Non Ferrous Vat) ரூ.10, 741,854/- கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் ஒரு பற்று மீதியாகும். அனைத்து நிதியாண்டிலும் இது முன்கொண்டுசெல்லப்பட்ட மீதியாக காணப்படுகின்றது. இதற்கேற்ப இது வருமான செலவினமாக கருதப்பட்டு கணக்கு பதியப்படுதுல் வேண்டும்.

v. காணப்படும் ரூ.742,661/- கழிவுப்பொருட்கள் கொள்வனவிற்காக 2007 ஆம் ஆண்டு முதல் கழிவுப் பொருட்கள் கட்டுப்பாட்டுக் கணக்கில் மீதியாக முன்கொண்டுவரப்பட்ட மீதியாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது.

vi. பொருளாதார சேவைகள் கட்டணங்களை செலுத்துவதற்கான கடப்பாடு (ESC ) எமது சபையின் பணிக்கடமைகளுக்கு ஏற்புடையதல்ல. ஆயினும், 2011 ஆம் ஆண்டு முதல் பொருளாதார சேவைகள் கட்டணமாக ரூ.170,872/- மீதி முன்கொண்டு வரப்பட்டுள்ளது. உரியவாறு ஆராய்ந்த பின்னர் இதனை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை றேமகொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 15,597,287/- ஆகும்.

மேற்படி அனைத்து விடயங்களும் நடைமுறைக் கணக்காக அமைவதால் ஏடுகளிலுருந்து பதிவழித்தல், வருவாய் செலவினமாக சீராக்கம் செய்தல், குறுக்குக் குறிப்புகள் மூலம் சீராக்கங்களை ஆராய்ந்து பாராமல் செய்தல் இயலாது. மேலும், திட்டவட்டமாக விடயங்களை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு 2016 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

3) 2015 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் “ 16, ஏனைய நடப்புச் சொத்துக்கள் (Other current Assets) “ கீழ் இந்த ரூ.574,570/- பணத்தொகை காட்டப்பட்டுள்ளமை எந்த விடயங்களை ஒன்றுசேர்த்தலின் மூலம் உருவாகியுள்ளதென எங்களுக்கு அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்வதுடன் அதனையடுத்து அதற்கான தெளிவுபடுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றேன்.

4) இந்த ஒதுக்கீடுகள் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதியிலிருந்தே நிலவும் மீதிகளாகும். 2015 ஆம் ஆண்டில் புதிதாக எவ்வித ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் சரியானதாகும். எவ்வாறாயினும் 2016 இறுதிக் கணக்கின் மூலம் மிகை ஒதுக்கீடுகளை வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

5) 2015.12.31 ஆம் திகதி காணப்பட்ட நிலுவை மீதியாகிய ரூ.20,869,142/- தொகையில் 2016 ஆண்டிற்குள் ரூ.10,861,129,30 அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் எதிர்வரும் காலத்தில் அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.3 கருத்துப் பேதத்தினை தோற்றுவிக்கும் விடயங்கள்

1) அசோசியேட்டட் நியுஸ்பேப்பர் ஒப் சிலோன் லிமிடெட் தேசத்தை கட்டியெழுப்பும் ஈடுபாடு (Nations Building Involvement) தொனிப்பொருளின் கீழ் அறிவித்தலொன்றை பிரசுரிக்குமாறு 2014.10.31 ஆம் திகதி கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கேற்ப சனாதிபதி அவர்களின் 9 ஆம் ஆண்டு நிறைவையையும் அக்காலகட்டத்தில் அடைந்துகொண்ட வெற்றிகளையும் கொண்டாடும் வகையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்பினை எடுத்துக்ககாட்டுவதற்கு இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2) சபை பல வருடங்களாக விசேடக் கருத்திட்டங்களுக்கான கணக்குகள் பேணுவதை "பண அடிப்படையில்" மேற்கொண்டுள்ளது. நடைமுறை சிரமங்கள் காரணமாக இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில சபையின் நிதியத்திலிருந்து செலவுசெய்து அடுத்துறு வருடத்தில் அமைச்சினால் மீளளிப்பு செய்துகொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் நேரடியாக அமைச்சின் நிதியம் கிடைக்கப்பெற்று அவ்வருடத்திற்குள்ளேயே செலவுகளை மேற்கொள்வதற்கு காலம் கிடைக்குமிடத்து சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடுத்த வருடத்திலேயே நிறைவேற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். இங்கு காட்டப்பட்டுள்ள ரூ.1.025 மில்லியன் பணத்தொகையும் முன்னைய வருடத்தின் நிதியத்திலிருந்து கிடைத்த பணத்தொகையாகும்.

## 4.4 கட்புலனாகும் முறைகேடுகள்

வாழ்கை செலவுப்படிக்கு ஏதுவாகவும் ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிற்கான உதவுத்தொகையை செலுத்தாமை பொருளாதார நன்மையை அடைந்துகொள்ளும் நோக்கில் சபை பின்பற்றிய முலோபாயம் அல்ல என்பதுடன் அக்காலக்கட்டத்தில் மேற்கொண்ட சம்பள மாற்றத்தினால் எழுந்த தெளிவற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட தவறினை உடனடியாக திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் விளைவாகும். எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு மிகவும் கவனமாக இது சம்பந்தமாக உரிய ஏற்பாடுகளை பின்பற்றுமாறும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து தேவையான தெளிவுபடுத்தல்களை கால தாமதமின்றி பெற்றுக்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**4.5 நிதியத்தின் குறை பயன்பாடு**

1. 2015 ஆம் ஆண்டு தினக்குறிப்பு புத்தகங்களுக்கு பிரிவுகளிலிருந்து கிடைத்திருந்த வேண்டுகோள்களின் அடிப்படையில் கொள்வனவுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு விலைகொடுத்து வாங்கப்பட்டிருப்பினும் சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் அவற்றை எடுத்துச் செல்லாமை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டியதுடன் எதிர்வரும் காலத்தில் இதற்கொத்த சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கணக்காளருக்கு (களஞ்சியசாலைகள்) ஆலோசனை வழங்கியுள்ளேன்.
2. ரூ.12 மில்லியன் 2015 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இறுதிக் கணக்கின் மூலம் திருத்தப்பட்டுள்ளது. எஞ்சிய 7.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளவாறு மேற்படி செலவுகள் மூலதன செலவுக்காக ஈடுபடுத்தப்படவில்லை. தற்போது இந்நிலையினை நிவர்த்தி செய்துகொள்வதற்கு செலவுகள் நாளேடிப்பட்ட கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதியம் பிரிவுகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் முன்னுரிமை இனங்காணப்பட்டு ஒதுக்கீடுகள் மேறகொள்ளப்பட்டுள்ளதுடன் நிலைமைகளை உரிய காலத்தில் மீளாய்வுக்குட்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
3. சம்பந்தப்பட்ட முற்கொடுப்பனவுகள் (உதா. மின்சார சபை) ஆவணப் பதிவுக்குட்படுத்தப்படுவதுடன் பண்டங்கள் கிடைக்கும் முறையில் முற்கொடுப்பனவுகள் தீர்க்கப்படுகின்றது.
   எவ்வாறாயினும் இந்நிலையினை தவிர்த்துக் கொள்வதற்கு தற்போது மொத்த கழிவுப் பொருட்களின் பெறுமதி செலுத்தப்படுவதில்லை என்பதுடன் 80 வீதமான கழிவுப்பொருட்களை பெற்றுக்கொண்டு பின்னர் மொத்த அளவு கிடைத்த பின்னர் 20 வீதம் செலுத்தப்படுகின்றது.
4. இந்நிலை தற்போது திருத்தப்பட்டுள்ளதென தயவுடன் அறியத்தருகின்றேன். வருடாந்த பாதீடு மற்றும் பெறுகைகள் திட்டம் உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்படுவதுடன் திட்டத்தின் பிரகாரம் பணிகள் நெறிப்படுத்தப்படுகின்றன.
5. மேற்படி வருடாந்த பாதீடு மற்றும் பெறுகைகள் திட்டம் உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்படுவதால் எதிர்வரும் காலத்தில் ஒத்த நிலைகள் ஏற்படுவதை கட்டுப்பாட்டுக்குள்

   கொண்டுவரப்பட்டுள்ளதென அறியத் தருகின்றேன்.

## 4.6 தொழிற்படாத குறைபயன்பாட்டுடைய சொத்துக்கள்.

1) இரண்டு இயந்திரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும். ஸ்பெக்ட்ரா மீற்றர் ஓஈஎஸ் 5500 ("Spectra meter OES 5500) "இயந்திரம் 1998 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 2012 வரை உள்நாட்டு பிரதிநிதித்துவ நிறுவனம் வாயிலாக பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் சேவைகள் பெறப்பட்டுள்ளன. சுமார் 15 வருடகால சேவை பங்களிப்பு காலத்தின் பின்னர் அவ்வப்போது அவ்வியந்திரம் உரிய செயல்திறத்தினை கொண்டிராததால் தற்போதைய உள்நாட்டு பிரதிநிதித்துவ நிறுவனமாகிய ஹேலீஸ் லைப் சயன்ஸ் கம்பனி லிமிடெட் (Hayley's life Science Co. Ltd) ஊடாக இதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்யப்பட்டாலும் இற்றைவரை அது வெற்றியளிக்கவில்லை.

   உபகரணம் 1988 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்தே செயலிழந்த நிலையில் இருந்துள்ளதுடன் வார்ப்பு பிரிவினால் இதனை செயற்படுத்திக்கொள்ள முடியுமான என்பதைப் பற்றி இறுதியாக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொண்டு செயற்படுத்த இயலாவிடின் புதிய தொகுதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2) பின்னாய்வு காலத்தில் இலங்கை வார்ப்பு துறைக்கு சம்பந்தப்பட்ட இயந்திரங்களினால் தொழில்நுட்பம் உச்சமட்டத்திலும் வெற்றிகரமாகவும் வழங்கப்பட்டுள்ளதென **JICA** நிறுவனம் அறிக்கையிட்டுள்ளது. இந்த வார்ப்பு தொழில்நுட்ப சேவைகள் பின்னாய்வு காலத்தின் பின்னரும் வழங்கப்பட்டுள்ளதுடன் அச்சேவைக்கு பங்களிப்பு வழங்கிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஓய்வுபெற்று அல்லது தொழிலை விட்டு விலகியுள்ள நிலையில் அதற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. ஆகவே, இப்பிரிவின் செயற்பாட்டு பணிகளில் ஓரளவிற்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. புதியதொரு ஆலோசனையாளரை நியமித்த பின்னர் இந்நிலையை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3) மஹியங்கன மியுணுகம கட்டிடம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் தாபிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் உரிமையாளர்களின் சங்கத்தினை அக்கைத்தொழிலாளர்களின் பொருட்களை காட்சிப்படுத்தும் நிலையமாக வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பின்னர் அதற்காக செலவிடப்படும் பாதுகாப்பு செலவினம் நிறுத்தப்படும்.

4) நீங்கள் குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானதாகயிருப்பினும் இந்த முற்பணம் அநேகமாக ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது வேறு பணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் நடைமுறையில் செலவாகும் செலவினை திட்டவட்டமாக தொடக்கத்திலேயே குறிப்பிட முடியாது.

5) 2015 ஆம் ஆண்டில் கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆண்டின் தொடக்கத்தில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை. ஆயினும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில்

நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு எங்கள் நிறுவனத்தினால் நிதி செலவு செய்யப்பட்டதுடன் அதனை மீளளிப்பு செய்துகொள்வதற்காக அமைச்சிலிருந்து நிதி பெறப்பட்டுள்ளது. இதன்படி ரூ.9,282,468.68 பணத்தொகையை 2015 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் நிரல் அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்டது. இப்பணத்தொகையில் கித்துளக வருண நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.3,902,787.00 பணத்தொகையும் உள்ளடங்கும்.

6) இந்த பஸ் வண்டியை விற்பனை செய்வதற்கு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவின் அங்கீகாரமும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்க சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கு தேவையான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்.**

1) வழங்கல் பிரிவினால் துரிதமாக கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலை வழங்கல் முறைமையின் கீழ் தொலைநகல் மூலமாக விலை மனுக்களை முன்வைத்து முத்திரையிடப்பட்ட விலை மனு கோரல்களின் அடிப்படையில் பெறுகைகள் சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட கொள்வனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கின்றேன். வழங்கல் பிரிவின் பெறுகைகள் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுவதன் காரணமாக விலை மனுக்களை கோருதல் சம்பந்தமான நிபந்தனைகள் மற்றும் விளக்க விபரங்களை (அங்கீகரிக்கப்பட்ட) பயன்படுத்தி சம்பந்தப்பட்ட கொள்வனவுகளுக்காக வழங்குனர்களுக்கு விலை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 2015 ஆம் ஆண்டிற்கு ஏதுவான கணனிகளுக்கான விவரக்குறிப்புகள் தயாரிக்கும் போது பொது விளக்கவிபரங்களை தயாரிப்பதற்கு முன்வந்தமைக்கான காரணம் சபையின் வலைப்பின்னலுக்கு உள்நுழைவதற்கும் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குவதற்கும் கொண்டிருந்த நோக்கமே ஆகும்

2) பல்வேறு பிரிவுகளிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விண்ணப்பங்கள் வழங்கல் பிரிவுக்கு அனுப்பப்பட்டதால் சபையின் மூலதனப் பொருட்களின் கொள்வனவின் போது 13 சந்தர்ப்பங்களில் கணனிகளை மாத்திரம் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும், 2016 ஆம் ஆண்டிற்கான சம்பந்தப்பட்ட கொள்வனவுகளின் விலை ஒப்பீட்டு முறையை விட மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பெறுகைகள் பணியினை மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதென்பதுடன் பகிரங்க கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு கணனி மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு கிடைத்ததென்பதையும் 2015 ஆம் ஆண்டில் அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் விண்ணப்பங்கள் ஒரேதடவையில் வருட தொடக்கத்தின்போதே வழங்கல் பிரிவுக்கு சமர்ப்பிக்கபட்டிருந்ததென குறிப்பிட விரும்புகின்றேன்.

**4.8 தாமதமடைந்து கருத்திட்டங்கள்**

தயவுசெய்து இணைப்பு 03 பார்க்கவும். அட்டவணை (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக சிவில் பொறியியாளர் அறிவித்துள்ளார்.

**4.9 ஆளணி நிர்வாகம்**

1) தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறையில் “கணக்கியல் பட்டம்” தகைமையாக குறிப்பிடப்பட்டிருப்பினும் அச்சந்தர்ப்பத்தில் விசேட வணிகவியல் பட்டத்தில் கணக்கியல் விடயமும் உள்ளடங்கியுள்ளது. பணிப்பாளர் (நிதி) அத்தகைமையினை பெற்றுக்கொண்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக முகாமைத்துவ பிரிவில் சம்பந்தப்பட்ட 05 வருட கால அனுபவத்தை பெற்றுக்கொண்டிருந்தமை அந்நியமனத்தை வழங்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது.
2) இப்பதவிக்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பின்னர் அவர் பெற்றுக்கொண்டுள்ள வணிக முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின்படிப்பு மற்றும் ஏனைய கல்வித் தகைமைகள் அத்துடன் அனுபவம் உட்பட அவர் நேர்முகப் பரீட்சைக்கு வெற்றகரமாக முகம்கொடுத்த விதம் ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது இப்பதவி திரு.பீ.எல்.எஸ். உதயசிறிவிற்கு பணிப்பாளர் சபையினதும் அமைச்சினதும் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

3),4)

அ) சபைின் தீர்மானம் மேற்கொள்ளும் விடயத்துடன் நேரடியாக தொடர்புள்ள 2 பிரதி பணிப்பாளர் நாயகப் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்தே வெற்றிடமாக உள்ளது.
அவ்வப்போது வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டாலும் நிறுவனத்தின் தேவைகளுக்கு பொருத்தமான தகைமையுடையவர்களை இற்றைவரை ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் உள்ளது. எதிர்வரும் காலத்தில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆ) சபைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள 09 பணிப்பாளர் பதவிகளில் 04 பதவிகள் வெற்றிடமாக உள்ளது.
வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருப்பினும் தகைமையுடையவர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் உள்ளது. தற்போது இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இ) 51 உதவி/பிரதி பணிப்பாளர் பதவிகள் அங்கீரக்கப்பட்டுள்ளதுடன் அதில் 15 பதவிகள் வெற்றிடமாக உள்ளன.
இதற்கு உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் இற்றைவரை தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் சார்பில் கிடைத்திருந்த வழக்குத் தீர்ப்பு இவ்வெற்றிடங்களை நிரப்புதல் சம்பந்தமாக மறைமுகமாக தாக்கத்தினை விளைவித்ததால் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. தற்போது இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) 30 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆளணியில் இருப்பதுடன் அதில் 30 பதவிகளும் வெற்றிடமாக உள்ளது. மேற்படி நீதிமன்ற தீர்ப்பு செயற்படுவதால் MA 5 - 2 வகுதியில் இருந்த உத்தியோகத்தர்களை JM வகுதிக்கு சேர்த்துக் கொள்ளும் போது 30 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒதுக்கீடுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

உ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் நோக்கங்கள் மற்றும் அதனைச் சார்ந்த விடயங்களுக்கு நேரடி பங்களிப்பு வழங்குகின்ற தொழில்முயற்சி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் 94 பேர் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் உள்ளபோதும் 86 பதவிகள் வெற்றிடமாகவே உள்ளது.
மேற்படி காலகட்டமாகும் போது சேவையில் ஈடுபட்டிருந்த தொழில்முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்கள் அவர்களின் பதவிகள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தொடுத்திருந்ததால் அவ்வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் இருந்துள்ளது. எவ்வாறாயினும் தற்போது அவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு கிடைத்துள்ளதுடன் அமைச்சின் அங்கீகாரத்துடன் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரித்து விண்ணப்பங்களை கோரி நிறைவுசெய்து எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5) குறிப்பிட்ட காலப்பகுதியில் வேலைகளை சாட்டுதல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் சேவையினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதுள்ள பதவிகளில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் அத்தியாவசியமாவதால் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் வரையில் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

6) சம்பந்தப்பட்ட பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையின் பிரகாரம் அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிராமை

7) தற்போது இந்நிலையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8) (i) இது சம்பந்தமான குற்றப்பத்திரிகைக்கு அவர் பதில் அனுப்பாததால் ஒழுக்காற்று ரீதியில் தண்டனை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும்.

(ii) தொழில்நுட்ப சேவைப் பிரிவில் நிதியினை தவறான விதத்தில் பயன்படுத்தியமையின் கீழ் வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளாகியுள்ள திரு.கே.பீ.டீ சமன்குமார மீதான ஒழுக்காற்று விசாரணை தற்போது நடைபெற்றுவருவதுடன் அது முடிவடையும் நிலையில் உள்ளது.

(iii) இது சம்பந்தமாக இரகசிய பொலிசாரினால் கைதுசெய்யபபட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இவர் சம்பந்தமாக இரகசிய பொலிசாரினால் வினவிய போது இவர்களின் அறிக்கை சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அது கிடைக்கப்பெற்றதும் எமக்கு அறிக்கையிடுவதாகவும் அறிவித்துள்ளனர். இது சம்பந்தமாக தொடர்ச்சியாக வினவப்படுகின்றது.

## 5. கணக்குகள் சார்ந்த கட்டுப்பாடும் நல்லாளுகையும்

### 5.1 நிதியியல் அறிக்கைகளை சமர்ப்பித்தல்

எதிர்வரும் காலத்தில் சுற்றுநிருபத் தேவைகளின் பிரகாரம் இணங்கியொழுகுவதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வேன்.

### 5.2 உள்ளக கணக்காய்வு

இவ்வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. மேலும், உள்ளக கணக்காய்வு திட்டமும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும், உள்ளக கணக்காய்வு அறிக்கை நி/ஒ 134 (1) இன் பிரகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

### 5.3 கணக்காய்வு குழு

2016 ஆம் ஆண்டு 04 கணக்காய்வு குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கு ஏதுவான கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

### 5.4 பெறுகைகள் திட்டம்

1) தற்போது பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் விவரமான பெறுகைகள் திட்டம் ஆகியவற்றை தயாரித்து அதற்கு இணைந்தொழுகும் வகையில் பெறுகைகள் பணிகள் நெறிப்படுத்தப்படும்,

2) பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்களை கோரி பதில் கிடைக்காவிடத்து யெலோ பேஜஸ் (Yellow Pages) மற்றும் துறையில் உள்ள வழங்குனர்களிடமிருந்து ஒழுங்குமுறையானவாறு விலைகளை கோரி போட்டிக்கு இடமளித்து தேவைகள் நிறைவேற்றிக் கொள்ளப்படும்.

3) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவுக்கு ஏற்புடைய பொறுப்புகள் மற்றும் பணிகளாக அமையும் விவரக்குறிப்பு மீளாய்வு மற்றும் விதந்துரைத்தல் எதிர்வரும் காலத்தில் தற்போதுள்ள நிலைமையை விட ஒழுங்குமுறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். பொருட்கள் மற்றும் சேவைகளை கோரும் பிரிவின் பிரிவுத் தலைவர் ஊடாக சம்பந்தப்பட்ட விவரக்குறிப்புகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலும் அறியத்தருகின்றேன்.

4) 2006 ஆம் ஆண்டு அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 6.2.2 இன் படி சந்தை விலை இணக்கஞ் செய்தல் முறையின்படி கேட்புவிலை கோரும் ஆகக்குறைந்த காலம் 07 நாட்களாகும். ஆயினும், அவசர பெறுகைகள் பணிகள் காரணமாக இந்த ஆகக்குறைந்த காலத்திற்கு குறைந்த காலத்திற்குள் கேட்பு நிபந்தனைகளின் கீழ் சம்பந்தப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட சுற்றுநிருபத்தில் ஆகக்குறைந்த காலத்தை விஞ்ஞாத கேட்புவிலையை கோருவதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வழங்கல் பிரிவு ஆவன செய்ய வேண்டுமென அறிவிக்கின்றேன்.

5) 2006 ஆம் ஆண்டின் வழிகாட்டல் கோவையின் 3.6.1 இன் படி ஒரே பொருளை வழங்குவதற்கு மீண்டும் கொள்வனவு கோரிக்கை விடுக்கும் அடிப்படையில் (50வீதம்) சில கணனிகளை கொள்வனவு செய்வதற்கு ஆற்றல் கிட்டியமைக்கான காரணம் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் விவரக்குறிப்பிற்கு அமைவாகவும் வழங்கல் விலைக்கே சம்பந்தப்பட்ட பொருட்களை வழங்குவதற்கும் இணங்கியமை ஆகும். மேலும் மீண்டும் கொள்வனவுக்கான கோரிக்கைகளை முன்வைத்து கொள்வனவு செய்வதன் மூலம் தேவையான உபகரணங்களையும் உரித்துடைய மென்பாக உள்நாட்டு பிரதிநிதித்துவ நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு வழங்கல் பிரிவு ஆற்றல் கொண்டுள்ளது. ஆகவே, வழங்கல் நடவடிக்கைக்கு செலவிடப்படவேண்டிய காலம், வழங்கல் தன்மை (இயன்றளவு விரைவில்) உரியதொரு திகதி இல்லாதிருத்தல் ஆகிய விடயங்களை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட கொள்வனவுகளை சபைக்கு ஆகக்கூடிய நன்மை கிடைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென கணக்காய்வுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆயினும், கணக்காய்வு சுட்டிக்காட்டுகின்றவாறு 32 கணனிகளை கொள்வனவு செய்தவற்கு ஒரே நேரத்தில் விலை மனு கோரப்பட்டிருக்கப்படுமாயின் அதற்கு ஏதுவான கழிவின் மூலம நிதி ரீதியிலான அனுகூலத்தை பெற்றக்கொள்வதற்கு ஆற்றல் இருந்தது என்றும் 2016 இல் இந்த நிலையை மாற்றியமைத்து ஒரே தடவையில் சம்பந்தப்பட்ட வழங்கல்களை மேற்கொள்வதற்கு பகிரங்க விலை மனு கோரலை மேற்கொண்டு கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

### 5.5 பாதீட்டு ரீதியிலான கட்டுப்பாடு

1),2) மூலதன பாதீட்டின் கீழ் வரும் அபிவிருத்தி விடயம் இதன் கீழ் வருகின்றது. பிரிவுத் தலைவர்களின் கூட்டமொன்றில் அவர்களுடன் கலந்துரையாடி முன்னுரிமைகளை இனங்கண்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் இந்த பாதீடு வெளியிடப்படுகின்றது. தற்போது அச்செயன்முறையின் படி விடயங்கள் நடைபெறுகின்றன. அதனையடுத்து பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படும்,

3) பெறுகைகள் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் நெறிப்படுத்துல் வழங்கல் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. முலதன பாதீட்டின் தேவையை இனங்கண்டு தயாரித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகிய விடயங்கள் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயன்முறையை உரிய காலத்தில் மீளாய்வு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பாதீட்டினை மையமாகக் கொண்ட கட்டுப்பாடு தந்போது முறைசார்ந்த வகையில் இடம்பெறுகின்றது.

### 5.6 வருடாந்த அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பித்தல்

2013 ஆம் ஆண்டின் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. அடுத்த கிழமையில் அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையும் இலங்கை பாராளுமன்றத்திலுள்ள மொழிபெயர்ப்பாளரொருவரினால் மொழிபெயர்க்கப்படுகின்றது. இப்பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடும்

1) 2015 ஆம் ஆண்டில் இந்த வைப்பீட்டிற்காக சபையின் காசாளரினால் காசு கிடைப்பனவு சீட்டுகள் விநியோகிக்கப்பட்டிருப்பின் 2015.12.31 ஆம் திகதியாகின்றபோது அவை இனங்காணப்படாத வைப்பீடாக காணப்படமாட்டாது. இந்த் பணத்தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் இனங்காணப்படாத வைப்பீடாக தொடரந்து கணக்குளிலிற்கு புறம்பாக வைத்துக் கொள்ளுதல் அர்த்தமற்றதாக இருந்ததால் அப்போதைய நிதி ஆலோசகரினால் பணிப்பாளர் சபைக்கு சமரப்பிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரமொன்றின் ஊடாக உரிய அனுமதியின் கீழ் சபையின் வருமானத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) நீங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் பணியாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்குவதுடன் அதற்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படுகின்றதாவென பணிப்பாளர் நாயத்தின் ஊடாக மேற்பார்வை செய்விப்பேன்.

3) * காணிகளை வழங்குவதற்காக கைத்தொழிலாளர்களிடமிருந்து விண்ணப்படிவமொன்றும் சம்பந்தப்பட்ட கருத்திட்ட அறிக்கையினையும் பெற்றுக்கொள்ளுதல்

* பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையின் ஊடாக பொருத்தமான கைத்தொழில்களை தெரிவுசெய்தல் மற்றும் விதந்துரைத்தல்

* இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு சபைத் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் அடிப்படை சாட்டுதல் கடிதங்களை விநியோகித்தல். இக்கடிதம் மூலம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மற்றும் கட்டிடத்திற்கான பிரதேச சபையின் அங்கீகாரம், கருத்திட்டத்தின் செயல் திட்டம், மற்றும் ஏனைய அறிக்கைகளை வழங்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

* இவ்வறிக்கையை வழங்கிய பின்னர் தலைவரின் கையொப்பத்துடன் நிபந்தனைகளுடன் கூடிய சாட்டுதல் கடிதம் வழங்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் 03 வருடகால பிணைத் தொகை பெற்றுக்கொள்ளப்படுவதுடன் முதலாவது ஆண்டுக்கான குத்தகை தொகையும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

* பின்னர் 06 மாதங்களுக்குள் கைத்தொழில் ஆரம்பிக்கப்படுவதுடன் கைத்தொழில் செயற்படுவதன் அடிப்படையில் குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

* முதலாம் வருடத்தின் இறுதி முதல் சம்பந்தப்பட்ட அலுவலகத்தினால் செலவுறுதிச் சீட்டு விநியோகமும் வரிப்பணத்தை அறிவிடுவதும் இடம்பெறுகின்றது.

* இவ்வாறு கைத்தொழில் செயற்படும் போது சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரணாக செயற்படும் கைத்தொழிலாளர்களுக்கான சாட்டுதலை இரத்து செய்து சட்ட நடவடிக்கை மேறகொள்ளப்படும்.

எவ்வாறாயினும், சபையின் முதன்மையான நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை கட்டியெழுப்புவதாக அமைவதால் சம்பந்தப்பட்ட குத்தகைத் தொகையை குறுகியதொரு காலத்திற்காவது செலுத்துவதற்கு தவறுதல் அல்லது கைத்தொழிலை குறுகிய காலத்திற்கு மூடிவைத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் நேரடியாக சாட்டுதல் இரத்து செய்யபபடவில்லையென்பதுடன் எவ்வாறாயினும் இக்கைத்தொழில்களை மீண்டும் இயங்கச்செய்வதற்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய சலுகைக் காலங்களையும், மதியுரைகளையும், சேவைகளையும் தொடர்ச்சியாக வழங்குவதுடன் அவ்வாறு மீள உயிர்ப்பூட்ட இயலாத கைத்தொழில்களை இறுதியில் இரத்து செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி காணித்துண்டை இரத்து செய்து மீண்டும் குத்தகைக்கு விடுதல், பணத்தை வசூலித்தல், பணத்தை செலுத்தாமையினால் அகற்றுதல் கைத்தொழிலாளர்களுக்கேற்ப வேறுபடுவதால் அதற்கு எழுத்துமூலமான நடைமுறையொன்றை தயாரித்தல் சிரமமானதாக இருப்பதுடன் தற்போது சட்ட உத்தியோகத்தரின் ஆலோசனைக்கேற்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4) செலுத்தல்கள் காசேட்டில் ஒவ்வொரு பக்கத்திலும் சரியானமுறையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட காசேட்டில் குறுகிய கையொப்பமும் இடப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

5) கையிருப்புக் களஞ்சியத்தில் அனைத்து பண்டங்களையும் களஞ்சியப் பொறுப்பாளர் பொறுப்பேற்பதில்லை என்பதுடன் அவசர தேவைகளின் அடிப்படையில் முற்பணம் பெற்றுக்கொண்டு பொருட்கள் தேவையான பிரிவின் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதற்கேற்ப பண்டங்களுக்கான பற்றுச்சீட்டினை விநியோகிப்பதற்கு முன்னர் களஞ்சியப் பொறுப்பாளருக்கு அப்பொருட்களைக் காட்டி களஞ்சியப் பொருட்களுக்கான விண்ணப்படிவத்தின் மூலம் மேற்படி பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அவசரத் தேவைகளின் போது பொருட்கள் பற்றுச்சீட்டினை விநியோகிப்பதற்கு ஓரளவிற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது.

6) தற்போது இற்றைப்படுத்தப்பட்ட வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது.

7) இந்நிலையை திருத்துவதற்கு தேவையான நடைமுறையொன்றை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதுடன் அந்நடைமுறை அமுல்படுத்தப்படும்போது இந்நிலைமை திருத்தம் அடையும்.

8) தற்போது இதற்கு விசேட கட்டுப்பாட்டு முறையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. காசாளர் பொறுப்பிலுள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் அது வைக்கப்பட்டிருக்கும். விலைகள் திறக்கப்படும்போது பொறுப்பானதொரு உத்தியோகத்தர் ஒருவரினால் திறப்பு எடுத்துச் செல்லப்பட்டு சம்பந்தப்பட்ட பணி நிறைவுபெற்ற பின்னர் உடனடியாக மீண்டும் பெட்டகத்தில் வைக்கப்படும்.

9) இது சம்பந்தமான விரிவான பதிலொன்ற மேற்படி (6 – 3) மூலம் வழங்கப்பட்டுள்ளது. தயவுசெய்து அதற்கு உங்களின் கவனத்தை செலுத்தமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.



**மஹிந்த ஜினசேன**
**தலைவர்**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**

**பிரதிகள்:**

1. செயலாளர் – கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சு
2. பணிப்பாளர் நாயகம் – அரச தொழில்முயற்சி திணைக்களம்/பொது திறைசேறி
3. உள்ளக்க கணக்காய்வு – கை.அ.ச

**இணைப்பு - 01**

3/1/1/09 2016.03.08

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
அரச கணக்காய்வு திணைக்களம்
பத்தரமுல்ல

**கணக்காய்வு ஐய வினா இலக்கம். எல்எஸ்எச்/ஐடிபீ/2015/02**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராக நாகூர்பிச்சை சிகந்தர் அவர்களை நியமித்து கொடுப்பனவுகளை செலுத்துதல்.**

மேற்படி கணக்காய்வு ஐய வினாவிற்கான தெளிவுப்படுத்தலை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

புதிய அரசாங்கத்தினாலும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினாலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைத்தொழில் கொள்கைகளுக்கு அமைவாக கௌரவ அமைச்சர் அவர்களினால் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினை மீளக் கட்டமைப்பதற்கும் மறுசீரமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இது சம்பந்தமான விடயங்களை கருத்திற் கொண்டு கௌரவ அமைச்சரினால் திரு.என். சிகந்தர் அவர்களை நிறைவேற்று பணிப்பாளராக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திரு. சிகந்தர் தூதுவராக ரஷ்யா, சுவீடன் மற்றும் பல நாடுகளில் பணியாற்றுள்ளார். 1981 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு சேவையில் பல்வேறு பதவிகளை வகித்ததன் மூலம் பெற்றுக்கொண்டிருந்த அனுபவத்தையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராகவும் (நிர்வாகம்) முஸ்லீம்களுக்கான செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கௌரவ அமைச்சரின் தற்போதைய ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளமையை கருத்திற் கொண்டு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபையினால் அதன் 492 ஆம் சபைக் கூட்டத்தின் போது பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார். தற்போதைய அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக அமையும் கைத்தொழில் அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு புதியதொரு வடிவத்தை வழங்குவதற்கும் அவ்விடயத்தில் எனக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் அமைச்சரினால் இந்நியமனம் வழங்கப்பட்டது.

கௌரவ அமைச்சர் கணக்காய்வு வினவுதல்களை நன்றாக புரிந்துகொண்டு சபைக்கு தேவையான நிபுணத்துவ அறிவினை மேலும் வழங்கும் நோக்கில் திரு.சிகந்தர் அவர்களை ஆலோசகராக நியமித்துள்ளதுடன் 2015.12.08 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் 496 ஆம் கூட்டத்தின் போது அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சிகந்தர் வெளிநாட்டு தூதுவர் சேவையின் மூலம் பெற்றுக்கொண்டுள்ள முதிர்ச்சி, அனுபவம் மற்றும் நிபுணத்துவ அறிவு ஆகியவற்றிற்கு பொருத்தமானதொரு சம்பளம் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்படவில்லையென தயவுடன் அறியத்தர

விரும்புகின்றேன். கணக்காய்வு ஐய வினாவின் மூலம் எழுப்பப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளன.

மேற்படி தெளிவுபடுத்தலுக்கு தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்புக் கூறுகின்றேன் என மேலும் அறியத்தர விரும்புகின்றேன்.

**மஹிந்த ஜினசேன**
**தலைவர்**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**

**பிரதிகள்:** 1. செயலாளர், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு

2. பணிப்பாளர் நாயகம், அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்

3. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்.

Annexure - 02

# PARLIAMENT OF CEYLON

5th Session 1969-70

# Industrial Development Act, No. 36 of 1969

*Date of Assent: December 28, 1969*

*Printed on the Orders of Government*

Printed at the DEPARTMENT OF GOVERNMENT PRINTING, CEYLON. To be purchased at the GOVERNMENT PUBLICATIONS BUREAU, COLOMBO.

Annual Subscription (including Bills) Rs. 30 (Local), Rs. 40 (Foreign), payable to the SUPERINTENDENT, GOVERNMENT PUBLICATIONS BUREAU, P. O. Box 500, COLOMBO 1, before 20th December each year in respect of the year following. Late subscriptions will be accepted on the condition that Bills issued before the date of payment will not be supplied.

**Price: 80 cents** **Postage: 20 cents**

**15.** The objects of the Board shall be:— Objects of the Board.

(*a*) to assist in the encouragement, promotion and development of industries in Ceylon;

(*b*) to assist in the proper co-ordination and in the inter-related growth of all industrial undertakings in the private and public sectors of the economy of the country;

(*c*) to foster industrial research with the object of utilizing the natural resources of Ceylon, improving the technical processes and methods used in industries and developing appropriate technologies and equipment for local industries, and discovering processes and methods for the better utilization of waste products;

(*d*) to foster the export of local industrial products to overseas markets;

(*e*) to assist in such measures in the field of international trade and regional co-operation as are necessary or conducive to industrial development;

(*f*) to provide for services and facilities of every description required by or in connection with any industrial undertaking or industrial establishment in Ceylon, including the provision of capital, credit, marketing, managerial, technical facilities and legal advice:

Provided that in regard to the provision of capital grants such service shall be limited to establishments or undertakings whose capital investment does not exceed two hundred thousand rupees;

(*g*) to advise on matters relating to the promotion and development of industries in Ceylon; and

(*h*) to take all such measures as may be necessary for, or conducive to, the attainment of the objects specified in this section.

**16.** For the purpose of fulfilling the objects of the Board, the Board may exercise, discharge and perform the powers, functions and duties conferred or imposed on the Board by or under this Act or any other written law. Board to exercise its powers to fulfil its objects.

**17.** (1) The Board shall consist of nine members of whom— Constitution of the Board.

(*a*) six members shall be appointed by the Minister;

(அட்டவணை 01) இணைப்பு - 03

| விபரம் | பெறுமதி (ரூ) |
|---|---:|
| அச்சுவேலி பேட்டையின் தபாலகத்திற்கு சிற்றுண்டிச்சாலையொன்றை அமைத்தல் | 1,332,307 |
| தற்போதுள்ள வெள்ள நீர் கால்வாய்– தலைமை அலுவலகம் | 352,007 |
| பொலநறுவை சுற்றுலா பங்களா | 162,600 |
| மாத்தறை சீஎஸ்சீ | 215,000 |
| அம்பாந்தோட்டை அலுவலகத்தை பழுதுபார்த்தல் | 292,500 |
| அம்பாந்தோட்டை அலுவலத்தை பழுதுபார்த்தல் | 292,500 |
| களுதாவளை கைத்தொழில் பேட்டையின் உள்ளக பாதைகள் | 1,291,673 |

(அட்டவணை 02)

| விபரம் | பெறுமதி (ரூ) |
|---|---:|
| வெள்ள நீர் மேற்பரப்பு கால்வாய் – வவுனியா | 3,129,400 |
| வெள்ள நீர் மேற்பரப்பு கால்வாய் – வவுனியா | 2,870,600 |
| வெள்ள நீர் கால்வாய் வவுனியா | 4,590,000 |
| அநுராதபுரம் பிராந்திய அலுவலகத்தை பழுதுபார்த்தல் | 486,000 |
| அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தை பழுதுபார்த்தல் | 486,000 |
| லக்கம் விற்பனை நிலையத்தின் விரிவாக்கம் | 2,095,500 |
| லக்கம் விற்பனை நிலையம் | 2,095,500 |
| பள்ளேகலை கைத்தொழில் பேட்டை உள்ளக பாதைகள் | 3,311,990 |

Director / Eng
The above all work completed. satisfactory and handed over.
2017/01/19

Civil Engineer
Engineering Division
Industrial Development Board of Ceylon
615, Galle Road, Katubedda,
Moratuwa. Tel: 011 2605 372